மதம் அவசியமா?

— கட்டுரைகள் —

முதற் பதிப்பு 1949 ஜுலை
விலை 12 அணா

★

வெளியிடுவோர்:
செந்தமிழ்ப் பதிப்பகம்
கீழ ராஜவீதி – புதுக்கோட்டை

பதிப்புரை

●

ஒரு பொருள் குறித்துப் பலரின் கருத்தை அறிந்து கொள்வது மிக அவசியம். அம்முறையில் "மதம் அவசியமா?" என்ற கேள்வியை எழுப்பி அவரவர் விருப்பத்தைக் கட்டுரை வடிவிலே தீட்டியனுப்புமாறு வேண்டினோம். அன்பர்கள் தத்தம் எண்ணங்களை வரைந்தனுப்பினர். "பொன்னி" தொடர்ந்து அக் கட்டுரைகளை வெளியிட்டது. அக் கட்டுரைகள் அனைத்தையும் ஒருசேர இந்நூலில் தொகுத்துள்ளோம். "மதம் அவசியமா?" என்ற கேள்விக்கு, "அவசியமில்லை" என்றும் "அவசியம் தான்" என்றும் "அவசியம்தான்; அவசியமுமில்லை தான்" என்றும் எழுத்தாளர்கள் கட்டுரைகளை முடித்திருக்கிறார்கள். சிந்தனை விருந்தாக அமையும் இந்நூல் உங்கள் உள்ளத்திலும் "மதம் அவசியமா?" என்ற கேள்வியை எழுப்பி, அக் கேள்விக்குத் தக்க விடை காண உதவுமென்று கூற விரும்புகிறோம். கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட இசைந்த கட்டுரையாளர்கட்கு எங்கள் நன்றி.

செந்தமிழ்ப் பதிப்பகத்தார்

கட்டுரையாளர்கள்

1.	பெரியார் ஈ. வே. இராமசாமி	... 5
2.	கோவைக்கிழார் சி. எம். இராமச்சந்திரனார்	... 11
3.	அறிஞர் கா. அப்பாத்துரையார்	... 18
4.	இரா. நெடுஞ்செழியன்	... 22
5.	க. அன்பழகன்	... 32
6.	நாரண துரைக்கண்ணன்	... 45
7.	ம. ப. பெரியசாமித்தூரன்	... 52
8.	டி. கே. சீனிவாசன்	... 59
9.	சுப. நாராயணன்	... 69
10.	கே. ஜி. இராதாமணாளன்	... 77
11.	நாரா நாச்சியப்பன்	... 88

புதுக்கோட்டை
செந்தமிழ்ப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது

1

பெரியார் ஈ. வே. இராமசாமி

மதம் என்பதும் கடவுள் என்பதும் மனித சமுதாயத்திற்கு அவசியம் என்று முன்னோர்கள் கருதினார்கள். காரணம் என்னவெனில் மனித சமுதாயத்தார் கூடி வாழும் பிராணிகளாவார்கள். அப்படிப்பட்ட கூட்டு வாழ்க்கைப்பிராணிக்கு ஒரு நடப்புமுறை தேவையாகும். ஒரு சங்கம் என்றால் அதற்கு எப்படி ஒரு நடப்புமுறைத் திட்டம் தேவையோ, அதுபோல் ஒரு சமுதாயத்துக்கும் தேவையாகும். அந்த நடப்புமுறை விதிகள் தான் மதம் என்றும் நெறி என்றும் மார்க்கம் என்றும் சொல்லப் படுவதாகும்.

அப்படிப்பட்ட மார்க்கமும் நெறியும் தவறிப் போகாமல் அதற்குக் காப்பு அளிக்க, நிர்ப்பந்தம் இருக்க வேண்டியது அவசியமாகும். எப்படியெனில் அரசாங்கம் மக்களையடக்கி ஆளவும், மக்கள் நெறியுடன நடந்து கொள்ளவும் விதி, சட்டம் செய்யப் பட்டிருந்தாலும் அச்சட்டத்திலேயே சட்டப்படி நடக்காவிட்டால், சட்டம் மீறி நடந்தால், தண்டனை இன்னது என்பதாக நிபந்தனையும் ஏற்படுத்தி, அதற்குக்கோர்ட் ஜெயில், அபராதம் இருப்பது போல் மதநெறியை மீறி நடக்காமல் இருப்பதற்கு ஆக வேண்டி "கடவுள் தண்டிப்பார்" என்பதாக மனிதனைப் பயப்படுத்தக் கடவுளையும் கண்டுபிடித்தார்கள்.

அரசாங்கம் ஏற்பட்ட பிறகு கூட அரசாங்கத்துக்கு மக்களையடக்கி ஆளச் சட்டம் இருந்தாலும் அரசாங்கத்

திற்கு அதிகக் கஷ்டம் இல்லாமல் மக்களைத் தாங்களாகப் பயந்து ஒழுங்காய் நடக்கும்படி செய்ய அரசாங்கமும் மதத்தையும் கடவுளையும் பிரசாரம் செய்து மக்களை அவற்றிற்கு ஆளாக்கி வந்தது. அன்றியும மனித சமுதாயத்தை அதன் எல்லாக காரியங்களையும் சட்டத்திலேயே அடக்கி ஆண்டுவிட முடியாது. உதாரணமாகச் சர்க்கார் அறியாமல சட்டத்தில் பட்டுக்கொள்ளாமல் மனிதன் பல தவறுதல்களைச் செய்யலாம். சமுதாயத்துக்குப் பல கடமைகளைச் செய்யாமல் விட்டு விடலாம.

இப்படிப்பட்ட காரியங்களுக்குச் சட்டமும் தண்டனையும் பயன்பட முடியாது. ஆகையால் மனிதனைத் தானாகவே பயந்து நடக்குமபடி செய்ய மதமுங் கடவுளும் பயனபடும் என்று கருதினார்கள. அந்தக கருத்தில் ஏற்பட்ட அவை, அதாவது மதமுங் கடவுளும் இன்றைக்குப் போதுமானவையாகப் பயன் அளிக்கக் கூடியவையாக இல்லை.

அரசாங்கச் சட்டதிட்டங்கள், மனிதர்களுடைய தன்மைக்கு,காலத்தினுடைய நிலைக்கு, அக்கம்பக்கத்திய சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் மாற்றியமைக்கப்படுவது போல் இவைகளும், காலத்துக்கு, நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டு வரவேண்டியவையாகும.

இன்று இந்நாட்டில் பல கடவுள்களும் பல மதங்களும் மலிந்துவிட்டன. இவை பெரிதும், உண்மையில் மனித சமுதாய நல்வாழ்வுக்காகவே ஏற்பட்டவையென்று கொள்ளவேண்டுமானாலும், பல, அக்காலத்தில் பலரின் சுயநலத்துக்காகவும ஏற்பட்டவை என்று சொல்ல வேண்டியவைகளாய் இருக்கின்றன என்ற போதிலும், இன்றுள்ள மதங்களும் கடவுள்களும் இன்றைய மக்களை அவர்களுடைய இன்றைய அமைப்புக்கு ஏற்றபடி, அதாவது இன்று மக்களும், சமுதாயங்களும் அமைந்துள்ள ஆசாரசம், அறிவு, ஆற்றல், வாய்ப்பு சூழ்நிலை ஆகியவைகளுக்கு ஏற்றபடி மக்களையடக்கிப் பயப்படுத்தி நடத்தப் போதியவையாக இல்லாதவைகளாகி விட்டன.

எப்படியெனில் மனிதன் பிறவியில் மற்ற ஜீவன்களை விட அதிகமான அறிவுத் திறமையும் சிந்தனை சக்தியும் கொண்டவன் என்பதோடு மனிதனுக்கு அவை நாளுக்கு நாள் மாறுதலும் வளர்ச்சியும் அனுபவ ஞானமும், ஆற்றலும் உண்டாக்கக் கூடியவைகளாகவும் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு உயர் பிறவியான மனித சமுதாயம், பகுத்தறிவு, அனுபவஞானம ஆற்றல் ஆகியவைகளைக் கொண்டு மேம்பாடான நிலையை அடைந்து கொண்டு போகாமல், பகுத்தறிவும் சிந்தனைசக்தியும் அற்ற மிருகத்தன்மையை விட மோசமான தன்மையைக் கொண்டு தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளக் கூடச் சக்தியற்றதாக, போதிய உதவி பெற வாய்ப்பு இல்லாமலும், சதா கவலையுடன் வாழ்ந்து மடிய வேண்டியிருக்கிறது என்றால், அதுவும் இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருப்பதற்கென்றே பல மதங்களும் பல கடவுள்களும் இருந்தும், இந்த மாதிரியாகப் பயனற்று மனித வாழ்வானது கவலைக்கும், துன்பத்துக்கும் ஆளாகி மடிவது என்றால் இதற்கு ஏதாவது காரணம் இருந்துதானே தீர வேண்டும்?

இந்நிலை ஏற்பட்ட இன்றுகூட நாம் "மதம் மனிதனை நல்வழியில் நடத்திச் செல்வதாகும்," "கடவுள் மனிதனுக்கு நல்வழியும் நல்வாழ்வும கொடுத்து மனிதனது சர்வ நடத்தைக்கும் காரண பூதமாய் இருந்து காப்பதாகும்" என்று தானே கருதுகிறோம். மனிதனுக்கு அவனுடைய பகுத்தறிவு அனுபவ ஞான ஆற்றல் தவிர இப்படிப்பட்ட பலமான இரண்டு சாதனங்கள், அதாவது மதமும் கடவுளும் இருந்தும் மனிதன் மேல் காட்டியபடி கீழ்மகனாய் இருக்கிறான் என்றால் இன்றுள்ள மேல் குறிப்பிட்ட மதங்களும கடவுள்களும் பயன்படவில்லை யென்றும், அவை மக்களைச் சரியாய் நடத்தப் போதியதாய் இல்லையென்றும் தானே காரணம் சொல்லி ஆகவேண்டும். அல்லது இன்றைய மனிதத் தன்மையானது இப்போதைய மதமும் கடவுளும் ஏற்பட்ட காலத்தில் இருந்த தன்மையை விடச் சற்று அதிக மாற்றமான தன்மை பொருந்தியதாக அமைந்துவிட்டது என்றுவது சொல்லித்தானே ஆகவேண்டும். தலை

பெருத்து விட்டது என்றாலும் சரி, குல்லாய் (தொப்பி) சுருங்கிவிட்டது என்றாலும் சரி அதன் முடிவு தலைக்கும் குல்லாய்க்கும் பொருத்தமில்லை, போதுமானதாக இல்லை எனபதாகத்தான் ஆகும். ஆகையால் 1948-ம் வருடத்து ரெயில்வே கெயிடு (நேரக் குறிப்பு) 1949-ம் ஆண்டுக்கு எப்படிச் சரியானதாக இருக்க முடியாதோ, அதுபோல் சென்ற நூற்றாண்டு என்று மாத்திரமில்லாமல், சென்ற பல நூற்றாண்டுகளுக்குமுன் ஏற்பட்ட மதங்களும் அதற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கற்பிக்கப்பட்ட கடவுளும் இன்று விஞ்ஞானகாலமாகிய, 20-ம் நூற்றாண்டுக்குப் பொருத்தமாயிருக்கும் என்று எதிர்பார்க்கலாமா? எதிர்பார்க்க முடியுமா? ஆகவே இன்றுள்ள அப்பழைய மதத்துக்கோ, கடவுளுக்கோ, சமுதாய நெறிக்கோ, மனிதத் தன்மைக்கோ, ஒரு கடுகளவு சக்தியிருந்தாலும் காந்தியாரை ஒரு இந்து (ஆரிய) மதத்தைச் சேர்ந்தவன், அதிலும் பார்ப்பனன் (தன்னை உயர்பிறவி என்று சொல்லிக்கொள்பவன்) அதிலும் படித்த (B. A. படித்த) பார்ப்பனன், அதிலும் ஒரு இந்துமத தத்துவத்தில் பிடிவாதப் பற்றுள்ள பார்ப்பனன், அதிலும் இந்து மதத்தைக் காப்பதற்கு என்று கொன்றிருக்க முடியுமா?

அதிலும் மிகக் கொடுமையான, மூர்க்கமான, வஞ்சகமான தன்மையில் எதிரில் நின்று வணக்கம காட்டிப் பதில் வணக்கம் காட்டப்படும்போது துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்படச் செய்திருக்க முடியுமா! அதுபோலவே கடவுள் மதங்களுக்குச் சிறிதளவு சக்தி, அல்லது ஆற்றல் இருந்தாலும் இன்றைய மனித சமுதாயத்தில் 100-க்கு 100-பங்காக இவ்வளவு நாணயக் குறைவு, நன்றி அறிதல் குறைவு ஆகியவைகள் மலிந்திருப்பதுடன் மனிதனை மனிதன் தனது வாழ்வுக்கு வஞ்சித்துப் பதறப்பதற இம்சித்து,கொன்று வாழவேண்டிய அவசியம் தவிர்க்க முடியாத தன்மையில் இருக்க முடியுமா?

இன்றைய மக்களில் மதவெறியும் மதப்பிடிவாதமும் கடவுள் பக்தியும், தொண்டும் இல்லாத மக்கள்

100-க்கு ஒருவர் வீதமாவது காண முடியுமா? மதத்தினபடி வேஷம், வாழ்க்கையில்லாதவர்கள் 100-க்கு 5 பேர் வீதமாவது இருக்கிருர்களா? அதுபோலவே கடவுளுக்கு வணக்கம், பூசனை, கொண்டாட்டம், உற்சவம் ஆகியவைகளில் ஈடுபடாதவர்களோ, அவைகளுக்காகப் பணம், நேரம், ஊக்கம், செலவு செய்யாதவர்களோ 100க்கு 10 பேர்களாவது இருக்கிருர்களா? இப்படியாகப் பெரும்பான்மை மக்கள் கடவுள் மதப் பற்றில், நம்பிக்கையில், நடப்பில் ஈடுபட்டிருந்தும், பல்லாயிரக்கணக்கான கோவில்கள், பல லட்சக்கணக்கான பிரார்த்தனை ஸ்தலங்கள், கடவுள் சிலைகள் இருந்தும், அவைகளுக்குச் சதா சர்வகாலமும் மனிதன் உணரும்படியாகச் செய்யப் பல தன்மையில் பிரசாரம் இருந்து வந்தும் ஏன் அவை பலன் கொடுக்கவில்லை? இதிலிருந்து நாம் முன் கண்டபடி இப்போதைய மதங்களும் கடவுள்களும் இன்றைய மனிதவர்க்கத்திற்குப் போதியவையாக இல்லை என்றுதானே கருதவேண்டியிருக்கிறது. அதையும் மற்றொரு விஷயத்தையும் பார்த்தோமானல் அதாவது சர்க்கார்—அரசாங்கத் தன்மையையும் பார்த்தோமானல் அதுவும் இன்றையத் தன்மைக்குப் போதாது என்றுதான்படும். அதாவது மக்களை அடக்கி ஆள இப்போது இருந்துவரும் சர்க்கார் சட்டங்களும், ஜெயில்களும், நிர்வாகங்களும் போதவில்லை. இதற்கு உதாரணம சில நாட்களுக்கு முன்பு மக்களுடைய சமாதானத்துக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பாளியான மந்திரியார் தனது அறிக்கையொன்றில் "ஜெயில்கள் நிர்வாகத்திற்குப் போதியதாக இல்லை. மாகாணத்தில் உள்ள ஜெயில்கள் யாவும் நிரம்பிவிட்டன. ஜெயிலுக்குப் போவதை மக்கள் பெருமையாய் வீரமாய்க் கருதுகிருர்கள்" என்று சொல்லித் தம்மால் இன்றைய சட்டங்களைக் கொண்டு நிர்வாகம் செய்ய, முடியாமையைக் கண்ணியமாய்த் தெரிவித்துக் கொண்டிருக்கிருர். மனிதனுக்கு மத ஒழுக்கமும் இல்லாமல் போய், கடவுள் பயமும் இல்லாமல் போய், சட்ட மரியாதையும் இல்லாமல்போய் ஜெயில் பயமும் இல்லாமல் போய்விட்டது என்ருல் சமுதாய வாழ்வு என்ன ஆகும்?

இந்தக் கேவலத் தன்மைபற்றி மக்களை வஞ்சித்து ஊரார் உழைப்பில் உண்டு வாழும் சோம்பேறிக் கூட்டத்திற்குக் கவலையிருக்காது. இந்த நிலை அப்படிப் பட்டவர்களுக்கு நல்லதும் இலாபமானதுமாகும். ஆனால் பாடுபடும் மக்கள் அப்பாட்டின் தன்மையை அடைய முடியாமல் முழுநேரம் பாடுபட்டும் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் போதியன பெறுவதற்கில்லாமற் அவதிப் படுபவர்களும், மானத்தோடும், மரியாதையோடும், நேர்மையோடும வாழவேண்டுமென்று கருதிக்கொண்டு இருக்கும் மக்களுடைய கதி என்னவது?

எண்ணெய் விளக்குக்குப்பதில் எலக்ட்ரிக் விளக்கு போட்டுக்கொள்ளுவது போலும், எருமைமாட்டு வண்டிக்குப் பதில் ஏரோப்ளேனில் போவதுபோலும், நம காட்டுமிராண்டிக் கடவுள்களுக்குப் பதில் உண்மையில் அன்பு, சத்தியம், அருள், ஞானம் அருளக்கூடிய நெறியும இறையும் அவசியமாகும. அதோடு கூடவே ஒரு நீதியும் நேர்மையும கொண்ட நல்ல ஆட்சியும் நமக்கு அதிவிரைவில் வேண்டியதாகும்.

அந்தப்படி விரைவில் ஏற்படாவிட்டால் மனித சமுதாயம், பாழுங்காட்டில் துஷ்டமிருகங்களுக்குப் பயந்து சாதுமிருகங்கள் மறைந்து வாழ்ந்துகொண்டு, நாளாவட்டத்தில் அத் துஷ்ட ஜெந்துக்களுக்குச் சாது ஜெந்துக்கள் இரையாகி வருவதுபோல இரையாக வேண்டிவரும். ஆகையால் இன்றையக் கடவுளும் மதமும் மாற்றப்பட்டே ஆக வேண்டும். முடியாவிட்டால் அழிக்கப்பட்டு ஆகவேண்டும்.

2

கோவைக்கிழார் சி. எம். இராமச்சந்திரனர்

சிவராத்திரியன்று சிவாலயங்களில் எல்லாப் பூஜைகள் நடக்கும். நூற்றுக்கணக்கான மக்கள் கோயிலுக்குச் சென்று வணங்குவார்கள். சைவர்கள் வீடுகளில் நோன்பு இருப்பார்கள். எல்லாருடைய முகங்களும் சாந்தமாக இருக்கும். அன்பர்கள் நன்ருகக் குளித்துவிட்டுத் திருநீறு தரித்துக்கொண்டு தூய்மையாக விளங்குவார்கள். உணவும் தூய சைவ உணவாக இருக்கும். அன்பே சிவம் என்ற உணர்ச்சி அகத்தில் மட்டும் அன்றிப் புறத்திலும் தோன்றும். இவ்விதக் காட்சி விரும்பத்தக்க காட்சி அல்லவா!

ஆனல் கடந்த சிவராத்திரியன்று இரவு எனத நான் அனுபவித்தேன் என்று கூறட்டுமா? நடுநிசியிலிருந்து ஒரே இரைச்சல். என் வீட்டிலிருந்து தெற்கே அரைக்கல் தொலைவில் ஒரு கிராமம் இருக்கிறது. அதில் அகமுடையார்கள் குடியிருக்கிருர்கள். அவர்கள் அம்மன் திருவிழாத் தொடங்கிவிட்டார்கள். நடு இரவிலிருந்து விடியும் மட்டும் தப்பட்டை ஒலி என் காதுகளைத் துளைத்துவிட்டது. தூக்கம் சிறிதும் வரவில்லை. அங்காளியம்மன் பத்திரகாளியம்மன் திருவிழாக்கள் சிவராத்திரியிலும் அடுத்தநாள் அமாவாசையிலுமே நடைபெறும். ஊரார் எல்லாரும் காணிக்கை எடுத்துப் பூசை போடுவார்கள். அம்மன் மெரமணை நடக்கும். கரகமும் எடுப்பார்கள். நேற்றுவரை ஆயிரத்

தெட்டுக் குற்றங்கள் செய்தவன் மீதே ஆவேசம் வரும். காலையில் நெருப்புவளர்த்துக் குண்டம் உண்டாக்கிக் குளித்துவிட்டு நெருப்பு மிதிப்பார்கள் கால் கொப்பளிப்பது இல்லை. என்ன ஆச்சரியம். முடிவு என்ன? மறுநாள் அதே ஆள் ஆயிரத்தெட்டுப் பொய்கள் பேசுகிறான். இது மதமா?

சேலம் முதலிய இடங்களிலே சிவராத்திரியின் போது அங்காளம்மன் விழா நடக்கிறது. பூசாரி பைரவ வேடம் பூண்டு மண்டை ஓடுகளை மென்று கொண்டு மயானம் செல்லுகிறான். அங்கே சுடுகாட்டுச் சாம்பலைக் குவித்து அதன் பேரில் சாதம் காய்கறிகள் முதலியவற்றைப் படைத்துப் பூஜைபோட்டு எலும்புத் துண்டுகளுடன் கலந்து பரிமாறுவார்கள். பொதுப் பாமர மக்கள் அதை வாங்கி உண்பார்கள். உண்ட பெண்களுக்குக் கர்ப்பம் உண்டாகுமாம். அன்று மாலை பூசாரி பெண்வேடம் பூண்டு ஆட்டு இரத்தம் பூசிக்கொண்டு குடலைமாலை சாத்தி வாயில் குடலைக் கவ்விக் கொண்டு ஊர்வலம் செல்வான். இந்தக்காட்சிகளைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்வதுண்டு. இது எப்படிப்பட்ட அருவருப்பான காட்சி! இவ்விரண்டு காட்சிகளும் மதத்தின் பேரால் நடக்கின்றன.

இவைகள் மதத்தின் செயல்கள்என்றால் அம்மதம் நமக்கு வேண்டாம். சிவராத்திரிக்கும் இந்த விபரீத விழாக்களுக்கும் என்ன தொடர்போ தெரியவில்லை. ஆனால் பாமர மக்கள் இவைகளில் நம்பிக்கை வைப்பதுமன்றி அச்செயல்கள் மதச் சார்பானவையென்றும் எண்ணுகிறார்கள். நாகரிகம் பெற்றதாக எண்ணிக் கொண்டிருக்கும் நம் நாட்டில் இந்த இருபதாம் நூற்றாண்டில் இவைகள் நடந்தால், மதம் வேண்டுமா என்ற கேள்வி ஏன் தோன்றாது! முன் காலத்தில் கேட்கப் படாதகேள்வியை இப்போது கேட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. அதற்கு விடையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மதம் என்றால் கொள்கை. அது கொள்கையோடு மட்டும் இருந்ததில்லை. அறிவுபடைத்தவர்கள் கொள்கை

ஒன்றையே கருதி வாழ்வார்கள். அறிவு குறைந்த பாமரர்களுக்கு அக் கொள்கைகளை உட்புகுத்துவதற்குச் சில சடங்குகள் வேண்டியிருந்தன. அவ்வாறு ஏற்பட்ட அச் சடங்குகள் நாளாவட்டத்தில் ஆபாசத்தில் இறங்கிவிட்டன. பாமரர்களோ கொள்கைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இன்றிச் சடங்குகளையே கைக்கொள்ளத் தொடங்குவார்கள். இறுதியில் அவர்களுக்கு மதம, சடங்கு என்ற பொருள்பெற்றுவிடும். யாகம் செய்துவந்த ஒரு முனிவர் தான் வளர்த்த பூனை, யாக நெய்யை உண்ணுமல் இருப்பதற்காக அதனை ஒரு கட்டுத்தறியில் கட்டிவைத்து யாகம் செய்ததைக் கண்டிருந்த அமமுனியின் மாணுக்கர்கள் அவர் இறந்த பிறகு பூனையைத் தறிக்குக் கட்டுவதும் யாகத்தினுடைய ஒரு பகுதி என்று செய்துவந்ததில் பினனர் வந்த பரமபரையினர் பூனையைக் கட்டுவதே யாகம் என்று கொண்டனராம். இதை ஒத்துத்தான் பாமர மக்கள் திருவிழாக்களையும, சடங்குகளையுமே மதம என்று எண்ணத் தலைப்பட்டு விட்டனர். இந்த உணர்ச்சிபோய் அடிப்படையான கொள்கைகளை அறிந்து போற்றுவதுதான் சமயப் பற்று ஆகும். சடங்குகளும் விழாக்களுமே மதம் என்று இருந்தால் அம்மதம் நமக்கு வேண்டியதில்லை.

மதம் என்றதற்குக் கொள்கை என்று கொள்ளுமிடத்து, எல்லாக்கொள்கைகளும் மதம ஆகுமா என்ற கேள்வி எழும்பும். எல்லாக் கொள்கைகளும் மதம் ஆகாது. சில குறிப்பிட்ட கொள்கைகளே மதம் என்பதில் அடங்கும். உலகில் உயிர் உள்ளவை, உயிர் இல்லாதவை என்ற இரு பிரிவுகள் உண்டு. இவற்றில் உயிர் அறிவுள்ளது; உயிரற்றது அறிவு இல்லாதது. உயிர், உயிரற்றது (இதனை உடல் என்று கூறலாம்) இவ்விரண்டு பொருள்களின் தன்மை என்ன; இத் தன்மைகளைச் செய்விக்கிறவன் ஒருவன் உண்டா? அவனுடைய தன்மை என்ன? அவனை உயிரும் உடலும் அறியுமா? அறியாமல் தடுப்பது எது? அந்தத்தடையை நீக்கி அறியும்படி செய்ய முடியுமா? அறிந்தால் அந்த அறிவில் எப்படிப்பட்டது? என்ற

கேள்விகளை ஒவ்வொரு அறிவுபடைத்தவனும் கேட்கக் கூடும். அக் கேள்விகளுக்கு விடைகளாக உள்ள கொள்கைகளே மதம் அல்லது சமயம் எனப்படும். இந்தப் பொருளை விடுத்துப் பழக்க வழக்கங்கள் ஆகப் பல நாடுகளில் தோனறியிருக்கும் சடங்குகளை மதம் என்பதில் சேர்த்துக் கூறுவது அறிவின்மையாகும். ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரை ஏளனம் செய்வதற் காக அச் சடங்குகளை மதம் என்று கூறுவது அறி யாமைமட்டும் அல்ல அழுக்காறு என்றும் கூற வேண்டும்.

உலகத்திலே பண்டைக் காலம் முதற்கொண்டே வெவ்வேறு தொகுதியினர் மேலே சொன்ன கேள்விக ளுக்கு விடைகளை ஆராய்ந்துகூறி யிருக்கிறார்கள். அவை களை எழுதியும் வைத்துள்ளார்கள். சில தொகுதி யினர் மேற்போக்காக ஆராய்ந்திருக்கின்றனர். சிலர் நுட்பமாக ஆராய்ந்துள்ளனர். ஆகவே இவைகள் படிப் படியாக இருப்பவைகளாகத் தோன்றும். ஆராய்ச்சி முறை ஒன்றாக இருக்கலாம். ஆராய்ச்சிகள் அறிவு கடந்த இடத்திலிருந்து வந்தது என்றும் கூறலாம். இவ்வாராய்ச்சிகள் என்ற கொள்கைகள் சமயம் என்று பெயர் பெற்றால் அவைகளைக் கூறும் நூல்கள் திரு மறைகள் என்று எங்கும் வழங்கிவரும். அவைகளை மக்கள் புனித நூல்களாக உலகில் போற்றுகிறார்கள்.

இனிப் படிப்படியாகவோ, சிறிது மாறுபட்டனவா கவோ சில கொள்கைகள் இருந்தால் அந்த மாறுபாடு களைக் கண்டு சில பேர் அழுக்காறு அடைகிறார்கள். வெகுவாகச் சமயக்கொள்கைகளைப் பிறருக்குச் சொல்லி அதனால் பிழைக்கும் தொழிலைக் கொண்டவர்களே இவ் வித அழுக்காறு அடைவதுண்டு. இதனால் உலகத்தில் கூறவொண்ணாத கொடுமைகள் நடந்திருக் கின்றன. சிறை, கொடுந்தண்டனை, கொலை, கொள்ளை போர் முதலிய கொடிய செயல்கள் இந்த அழுக்காற்றி னால் உலகம் எங்கும் நடந்திருக்கின்றன. இதனால் மதத்தைப் புறக்கணிப்பதா என்ற கேள்வி பிறக்கும். அரசியலில் கொடுமைகள், போர்கள், படுகொலைகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் அரசியலையே அழித்து

விடலாமா என்பதை ஒக்கும் அக்கேள்வி. இக்காலத்தில் மதம் வேண்டாம் என்கிறவர்கள் இந்தச் சரித வரலாற்றுக் கொடுமைகளையே எடுத்தாளுவது வழக்கம். மதத்தைப் புறக்கணிப்பதற்கு அது ஒரு சிறந்த காரணம ஆகாது.

இனி மதம் யாருக்கு வேண்டும் என்றும் கேட்பார்கள். உலகில் உயிருள்ளவை, உயிரற்றவை என்ற இரண்டு பிரிவுகள் உண்டு என்றோம். உயிர் அற்றவைகளுக்கோ மதம் வேண்டியதில்லை. உயிர் உள்ளவைகளிலே அமீபா முதல் கொண்டு திமிங்கிலம் இறுதியாக உள்ள உயிர்களிலே மனிதன் ஒருவனைத் தவிர ஏனைய உயிர்களுக்கும் பகுத்தறிவு வெகுவாய்க் கிடையாது. அவைகள் உண்பது, உறங்குவது பெருக்குவது இம் மூன்றைத் தவிர வேறு கவலை கொள்ளா, ஆகவே அவைகளுக்கு மதம்வேண்டியதில்லை. ஆறறிவு பெற்ற மனிதன் ஒருவனுக்கே மதம் உரித்தாயது. அவனே தன் முன்னிலை பின்னிலைகளைப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றலும் நினைவும் உள்ளவன். தனக்கு ஒரு பிந்திய நிலை உண்டு என்று மனிதன் தோன்றிய நாள் முதல்கொண்டே எண்ணினன் என்பது பண்டை இயல் வரலாற்றின் முடிவு. பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முந்தி வாழ்ந்த மனிதனும் தனக்குப் பிந்திய நிலை உண்டு என்ற கருத்தினல் சிறந்த உடலோடு அருமையான பொருள்களை வைக்கப்பட்டுப் புதைக்கப்பட்டானும். ஆகவே மனிதன் ஒருவன்தான் சமய ஞானத்திற்கு உரிமைகொண்டவன் ஆகிருன்.

சில கொள்கையினர் உடலோடு உயிரும் அழிந்துவிடுகிறது, ஆகவே பிந்தியவாழ்க்கை உயிருக்கு இல்லை என்பர். அவர்கள் உலகில் இருக்கையில் இன்பம் அனுபவிக்க வேண்டியது என்பர். அவர்களில் சிலர் எப்படிப்பட்ட வாழ்க்கையானபோதிலும் இன்ப வாழ்க்கை இருந்தால்போதும் என்பர். ஏனையோரில் பெரும்பான்மையான பேர் சமூக நிலையில் இன்பவாழ்க்கை பெறுவதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை வகுத்து இன்பம் பெறவேண்டும் என்பர். இவர்களுக்கு நீதி, நல்வழி

என்பவைகள் உண்டு. அவைகளின்படி நடந்தால் மக்களுக்குப் பெரும்பான்மையான நன்மை கிடைக்கும்; அவை அல்லாமல் பிற்காலத்தைப்பற்றி யாதொரு கவலையும் வேண்டியதில்லை என்பர். இப்படிப்பட்டவர்களுக்கு நீதி இருந்தால்போதும், சமயம் வேண்டியதில்லை.

உலகில் பெரும்பான்மையான பேருக்கு, உயிருக்கோ, இறந்தபின் வாழ்க்கை உண்டு என்பதே கொள்கை. அவர்கள் சமயத்தைப் போற்றிப் பின் வாழ்க்கைக்கு ஆகவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளுவர். இவர்களிலும் இரு வகுப்பார்கள் உண்டு. ஒரு வகுப்பார், மனிதனுக்கு ஒரே பிறப்பு உண்டு, இது நீங்கினால் இந்த வாழ்விற்குத் தக்கபடி நல்லுலகமோ தீய உலகமோ பின்னால் உண்டு—என்பது. ஆகவே இந்த வாழ்விலேயே கூடியமட்டும் நற்செயல்களைச் செய்து தூய சமய வாழ்க்கை வாழவேண்டும் என்பர். இரண்டாவது வகுப்பார் உயிருக்குப் பல பிறவிகள் உண்டு, இந்தப் பிறவியில் செய்யும் செயலுக்கு ஏற்றபிறவி அடுத்த பிறவியில் கிடைக்கும், பல பிறவிகளிலும் நன்மை செய்து இறுதியில் ஈடேற்றம் அடையலாம் என்பதாம். இவர்களும் தூய வாழ்வினை விரும்பிச் சமயவாழ்க்கையை இச்சிப்பார்கள். இந்திய நாட்டுச் சமயத்தார்கள் எல்லாரும் இந்த வகுப்பில் சேர்ந்தவர்கள். இந்த இரண்டு வகுப்பார்களும் சமயம் வேண்டும் என்பவர்கள்.

இனி மனிதனுக்குச் சமயம் ஏன் வேண்டும், நீதி ஒன்று இருந்தால் போதாதா என்று கேட்கலாம். நீதி என்று இருந்தால் மட்டும் போதாது. மனிதனுடைய அறிவு குறைவு ஆனது. அவனுடைய அறிவுக்கு மீறியவை பல உண்டு. கலைஞர்களால் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல நுட்பச் சக்திகளும் கருவிகளும் அவன் அறிவின் குறைவைக் காட்டி இனிமேலும் பல உண்டு என்று நிரூபிக்கின்றன. ஆகவே சமய ஞானம் ஒன்றுண்டு என்று ஒரு நம்பிக்கை இருந்தால் அன்றி, மனிதன் எவனும் நீதிநெறி ஒன்றைப் பற்றிக்கொண்டு தூய்மையான வாழ்வில் இருக்க முடி

யாது. ஆகவே சமயம் வேண்டும்; அதன் வழியான வாழ்க்கையும் நமக்கு வேண்டும் என்று ஏற்படுகிற தில்லையா?

சமயச் சடங்குகள் சமய ஞானத்தை மறைத்து விடும் வகையில் விட்டுவிடக்கூடாது. உண்மையான தும் தூய்மையானதுமான சமய ஞானத்திற்கு இன்றி யமையாத சடங்குகளையும் நிலையங்களையுமே வைத்துக் கொண்டு ஏனையவற்றை ஒழித்துவிடுதலே பகுத்தறி வுக்கு அழகு. இதற்கு உலகப்பெரியார்கள் வழிகாட்டிக ளாக இருந்து தம் வாழ்க்கையிலே தூய்மையை எடுத் துக் காட்டியுள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி நடப்போ மாக. இந்தவகையில் சமயம் நமக்கு வேண்டும் என்று தோன்றவில்லையா?

3

அறிஞர் கா. அப்பாத்துரையார்

மதம் அவசியமா என்ற கேள்விக்கு 'ஆம்' என்றும் 'இல்லை' என்றும் பலர் விடை பகரலாம். 'ஆம்' என்பவர் கட்சிக்கு 'இல்லை' என்பவர் கட்சி மாறுபட்டதென்று எவரும் கருதுவது இயல்பு. ஆனால் அப்படி மாறுபட்டுத் தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. மதம் என்ற சொல்லுக்கு இருசாராரும் இருவேறு பொருள் கொள்ள லாமல்லவா?

சர்க்கரை என்ற சொல் வெள்ளைப்பொடி வடிவான சர்க்கரைக்குத் தமிழ் நாட்டின் வடபகுதியிலும் வெல்லக் கட்டிக்குத் தென்பகுதியிலும் வழங்குகிறது. ஒரே பொருளைப் பார்த்து வடதமிழர் 'இது சர்க்கரை' என்றும் தென் தமிழர் 'இது சர்க்கரை அன்று' என்றும் கூறலாம். இருவர் சொல்லும் வேறு, ஆனால் பொருள் ஒன்று.

ஆகவே இருகட்சியினரின் மாறுபாட்டைக் காணு முன், மதம் என்பதற்கு இருவர் கொள்ளும் பொருளையும் ஆராய்தல் வேண்டும். மதம் இன்னதென வரையறுத்த பின் தான் 'ஆம்' என்றும் 'இல்லை' என்றும், இக்கேள்விகளுக்கு விடையிறுக்க முடியும்.

மதம் என்பது என்ன என்ற கேள்விக்குத் தரப்படும் விளக்க விடைகள் எத்தனையோ வகை. ஆயினும் அவற்றை இருபெரும் பிரிவுகளாகத் தொகுக்கலாம்.

ஒரு சாரார் கொள்கை, மதம் இயற்கைக்கு அப்பாற்பட்டது; அறிவுக்கு எட்டாதது; பொருள் நிலை கடந்த

பொருளாகிய கடவுளைப் பற்றியது. அது அறிவு முறையில் பேசப்படினும், அறிவு கடந்ததாதலால் நம்பிக்கை அடிப்படையானது. மதத்தின் உண்மைபற்றி ஆராய்கையில் எல்லாரும ஒரே வகையில் ஆராய முடியாது. ஒருசாரார் எப்படியோ உணரமுடியாததை 'உணர்வர்' உணர்ந்து கூறுவர். அவர்கள் ஆன்றோர், பெரியர், ஆரியர். மற்றவர்கள் உணரமுடியாது. காணமுடியாது, நமப வேண்டும், கேட்க வேண்டும், கேட்டு நடக்கவேண்டும், பணி செய்து கிடக்கவேண்டும்.

இச்சார்பினர், சமயம் தெய்வம் அருளியது என்பர்—நம்பாதவர் நம்பிக்கையை உறுதிப்படுத்த. அதே நோக்குடன் 'இதோ பார், தெய்வம் அருளிய திருமறை' என்பர். அப்போதும் நம்பாவிட்டால் அறிவு முறையிலும் வாதிட்டுக் காட்டுவர், பாமர மக்கள் நிலை கடந்து அறிவுப் போருக்கு நிற்பவரிடம்.

இச்சார்பினருக்கு மனிதன் பெரிதன்று; மதமும் மதப்பெயரால் நிலவும் கடவுளுமே பெரிது. அவர்கள் மதம் மனிதன் படைப்பன்று என்று கொள்வதனல் அது பிறப்பு, வளர்ச்சி, மாற்றம், இறப்பு அற்றது என்பர். மதம் என்பது அவர்களுக்கு முற்ற முடிந்த நிலையியல் (*Static*) உண்மை. நாகரிக வளர்ச்சியுடன் வளராதது, இயங்கும் (*dynamic*) உயிர்ப்பொருளன்று.

இவர்கட்கு மாருன, ஆனல் பாமரமக்கள் கண்ணில் மாறுபடுவதாகத் தெளிவுபடக் காணுத இன்னொரு பிரிவினர் உண்டு. இவர்கள் கடவுளை ஒரு பொருளாகக் கொள்ளாமல் முற்றுப் பெற்ற ஓர் உண்மையாகக் கொள்ளாமல் மாந்தர் அறிவு நிலைக்கு ஏற்ப வளர்ந்துவரும் ஒரு குறிக்கோள் அல்லது அடிப்படை உண்மை என்பர். இக்குறிக்கோள் மனிதனுக்கு மனிதன், குழுவுக்குக் குழு, நாட்டுக்கு நாடு, நாகரிகத்திற்கு நாகரிகம், காலத்திற்குக் காலம் வேறுபடுமாயினும்; மற்றெல்லா நாகரிகக் கூறுகளையும் போலவே தோற்றம், வளர்ச்சி, மாற்றம், இயக்கம், தொடர்ச்சி ஆகிய இயக்க உயிர்ப்பண்புகள் உடையது. இக்குறிக்கோளை இவரில் சிலர் ஆண், பெண்ணுரு

வில் கற்பனை செய்து பெயர் வைப்பர். சிலர் கடவுள், தெய்வம் என்பர். சிலர் இயற்கை என்பர். சிலர் பொருள பற்றிய அறிவின் எல்லையைத் தொகுத்துரைத்து அறிவின குறைபாட்டைக் குறிக்கும் குறியீடு என்பர். (கணக்கில் எண்ணைக் குறியாமல் எண்ணற்ற இட மதிப்பைக் குறிக்கும் சுன்னம் [0] போல)

மேற்கூறிய விளக்கத்தின் பயனாய் இப்பிரிவில் 'ஆத்திகர்' எனப்படுபவர்களும் உண்டு. 'நாத்திகர்' எனப்படுபவர்களும் உண்டு என்று காணலாம். ஆனால் பெயரளவில் வேறுபட்ட இவ்விரு உட்குழுவினரும் பொருளளவில் ஒரு சார்பினரே. வேற்றுமை யாதெனில் முதல் உட்குழுவினர் தம் கருத்தைச் சமயம் என்பர். மறுசாரார் நாகரிகம், மெய் விளக்கம் (*Philosophy*) அன்பு நெறி அல்லது அறிவியல் (*Science*) என்பர். கார்ல் மார்கஸ் போன்ற அறிவியல் வாதிகளும் நாத்திகர் எனக் கூறப்படும் பிற பேரறிஞர்களும் உண்மையில் முன் கூறப்பட்ட முதற்பிரிவு ஆத்திகருக்கு மாறுபட்டவரேயன்றி வேறன்று. பின் கூறப்பட்ட இரண்டாம் பிரிவு 'ஆத்திகரும்' 'நாத்திகரும்' ஒன்றுபட்டவர்களே.

இவ்விரண்டாம் பிரிவினர் அனைவருக்கும் மதம் மனிதனுக்காகவே யன்றி மனிதன் மதத்துக்காக என்று ஆகான். இவர்களுக்கு மதம் வளரும் ஓர் இயக்கம்; ஒரு நிலையான உயிரற்ற சட உண்மை அன்று. இவர்கள் கருத்தின்படி மதம் மனிதன் விலங்குநிலையில் இருக்கும்போது இல்லாதிருந்தும் அவன நாகரிகத்துடன் வளர்ந்து, அவன் உயர்வுடன் உயர்ந்து வருகிறது. சிறு குழந்தை பிறக்கும்போது இல்லாத உடை அணிமணிகள் சிறு பருவத்தில் அணியப்பட்டுப் பின் பெருக்கமடைந்து இறுதியில் அகல்வது போன்றது இது. ஆனால் அகலும் காலத்தில் அதன் தேவையும் அகன்று விடும் அன்றோ? அப்போது அவன் பரு உடை நீத்து நுண் உடையாகிய உடலும் நீத்து, உயிருடைகள் அன்றோ பெறுகின்றான்.

இப்பிரிவினர்க்கு மதம் என்ற பெயர் தனி மனிதனை மனித வகுப்பின் வளர்ச்சியோடு ஒட்டி வளர உதவும் தனி மனித நாகரிகம் ஆகும். நாகரிகத்திற்கும் அதற்கும்

வேறுபாடு சார்பொருள் பற்றியது மட்டுமே. நாகரிகம் மக்கள் குழு, நாடு, உலகம் ஆகியவற்றின் பொது உடைமை, மதம் தனி மனிதன் உரிமை. அவ்வளவு தான்.

மேற்கூறப்பட்ட விளக்கங்களுக்குப் பிறகு மதம் அவசியமா என்ற கேள்விக்குச் சிறிது பொது அறிவு உடையவனுக்கும் விடைதரல் எளிது.

முதல் பிரிவினர் மதமே மதமானல், அது அவசிய மன்று என்பது மட்டுமன்று; அது தீமை தருவது; ஒழிய வேண்டியது; ஒழிக்கப்பட வேண்டியது. எவ்வளவு விரை வில் ஒழிக்கப்பட முடியுமோ அவ்வளவுக்கும் அதனை நோயாகக்கொண்டுள்ள நாட்டுக்கு நலம்.

ஆனல் இரண்டாம் பிரிவினர் மதம்—அது எப் பெயருடன் விளங்கினலும் எத்தகைய சொற்களால் விளங்கப்பட்டாலும் சரி—அது அவசியம்; ஒழியாது; ஒழிக்கப்படக் கூடாதது மட்டுமல்ல, ஒழிக்கப்பட முடியா தது. மூச்சு இருக்குமளவும் தனிமனிதனையும், நினைவு இருக்குமளவும் உலகையும் அது பற்றியே நிற்கும். மனி தன் வளர்ச்சிக் கேற்ப வளர்ந்து அவன் மாற்றத்திற் கேற்ப உருமாறும் அவன் நிழல் அது.

நம் நாட்டில் சமயம் வேண்டும், வேண்டாம் என்ப வர் முற்கூறிய பிரிவினர் கருத்துடன் கூட நிற்கவில்லை. சாதி, மூடநம்பிக்கை, குருட்டுப் பழக்க வழக்கங்கள், மக் களை மக்களிடமிருந்து பிரித்து வைக்கும் பேதங்கள் ஆகியவற்றையே சமயமென்கின்றனர். மனித வகுப்பின் நன்மை கோருபவர் எவரும்—எந்நாட்டினரும் எச்சமயத் தவரும் எவ் இனத்தவரும் அதனை ஆதரிக்கமாட்டார். நேரிடையாகவோ மறைமுகமாகவோ தீமையை உள்ளத் தில் கொண்டவர் மட்டுமே அதனை ஆதரிப்பர்.

4

இரா. நெடுஞ்செழியன்

மதம் அவசியமா என்ற வினாவிற்கு விடையிறுக்கு முன்னர், மதம் என்றால் என்ன என்பதை அறிய வேண்டியது. இன்றியமையாததாகின்றது. பல உலகையும் பல உயிரையும் படைத்து, அவற்றைப் பாதுகாத்துப், பின் அழிக்கும் வல்லமை உள்ள எல்லையறு பரம்பொருள் ஒன்று உண்டு என்றும், அப்பரம்பொருள் தான் கடவுள் என்றும், அக்கடவுளுக்கு அனைத்துயிரும் அடங்கி இருந்து அன்பு செலுத்தி நன்றி காட்ட வேண்டும் என்றும், அக்கடவுள், தன்னால் படைக்கப்பட்ட மக்களுயிர் செய்ய வேண்டிய கடப்பாடுகள் இன்னின்னவென்று வகுத்து, அவற்றை மக்கள் கொண்டொழுகுகிறார்களா என்று எதிர்பார்க்கிறார் என்றும், அத்தகைய கட்டுப்பாடுகளை எடுத்துக்கூறிக் கடவுளை வழிபடும் முறையைக் கற்பிப்பதே "மதம்" என்றும் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. அப்படிக் கடவுள் இட்டதாகக் கருதப்படும் கட்டளைக்கேற்ப, மக்களை நடப்பிக்க வந்த மதங்களிலே சிறப்புடையனவாகத் திகழ்வன கிருத்துவம் மகமதியம் பௌத்தம் சமணம், பிராமணீயம், சைவம், வைணவம் போன்றனவாகும், இவைகளெல்லாம் சீர்திருந்திய மதங்கள் என்று சொல்லப்படுகின்றன. இவைகளெல்லாம் மனித வாழ்க்கைக்குத் தேவையாவென்பதை ஆராயவேண்டிய தவசியமாகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பார் முழுதும் பரவிக் கிடந்த பல்வேறு மக்களும் கடவுள் விரும்

புவதாகக் கொள்ளப்பட்ட வழிபாடு உயிர்ப்பலி கொடுத்தல் ஆகும். 'கடவுளி'ன் முன்னிறுத்திய பலி பீடத்திலே எருதுகள் எக்காளமிட, ஆடுகள் அலற, சேவல்கள் துடிதுடிக்க அவைகள் இரண்டு துண்டாக வெட்டப்பட்டுக் குருதி வெள்ளம் புரண்டோடக் கண்டு மகிழ்ந்தார் கடவுள் என்று கருதப்பட்டது; இன்றும் கருதப்படுகிறது. உயிர்களின் குருதியைக் கொள்ளை கொள்ளையாகக் கொண்ட பிறகுதான் கடவுள் உலகிற்கு மழையையும், வெயிலையும், விளைவுப் பெருக்கத்தையும், நோயில்லா வாழ்வையும் தருகிறார் என்று கொள்ளப்பட்டது; கொள்ளப்படுகின்றது. மக்கள் வணங்கிக் கூறும் வழிபாட்டுரைகளைக் கடவுள் கேட்கிறார்; கேட்டு மகிழ்கிறார்; மகிழ்ந்து மறுமொழி பகர்கிறார்; பகர்ந்து துன்பந் துடைக்கிறார்; துன்பந்துடைத்துப் பாவம் போக்குகிறார் என்று கருதினார்கள். இது காட்டுமிராண்டிக் காலத்திய மத உணர்வு; இவ்வுணர்வை அந்நாளிலிருந்து இந்நாள் வரையிலும் மதங்கள் மக்களிடத்து உணர்த்தி வருகின்றன.

மதம் மக்கள் வாழ்விற்கு அவசியந்தானா என்று அறியுமுன்னர் மதம் ஏற்பட்டதன் அவசியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முன் அறிய வேண்டியவைகள்:

எந்த ஒரு அறிந்த உண்மையின் மீதாவது மதம் நிற்கிறதா?

'கடவுள்' என்ற ஒரு பொருள் உண்மையாகவே உள்ளதா?

அவர்தான் உலகையும் மக்களையும் படைத்தாரா?

வழிபாட்டு வணக்க வேண்டுகோள்களுக்கு எப்பொழுதாவது பதில் கிடைத்ததா?

குழந்தையின் குருதியும், எருதுகளின் தசையும், ஆடுகளின் இறைச்சியும் காணப்படாத கடவுளின் கண்ணோட்டத்தைக் கொடுத்தனவா?

மக்களைக் கடவுள் படைத்தாராயின், அவர்களில் குருடையும், நொண்டியையும், முடத்தையும், முண்டத்தையும், அறிவற்றவர்களையும், பிணியுடையோரையும் படைப்பபானேன்?

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற தன்மையுடைய ஆண்டவனின் படைப்பிலே இவ்வளவு தாறுமாறு ஏன்?

உலகைக் காத்து அளிப்பவர் கடவுளாயின் உலகில் மன்னாதி மன்னர்களும், மதோன்மத்தரான மடாதிபதிகளும், கொடுஞ் செல்வச் சீமான்களும், ஆணவ அதிகாரிகளும், துன்பம் பயப்போரும் கொடுமை இழைக்கும் கொலைஞர்களும், இருந்து வாழ்வதற்கு அவர் தானே காரணம்?

ஆண்டவன் அணைப்பிலே இருக்கும் உலகிலே எரிமலை எரிவானேன்? அதனால் நாடு நகரங்கள் அழிந்து படுவானேன்?

பூகம்பம் ஏற்படுவானேன்? அதனால் பல உயிர்கள் வதைபடுவானேன்?

சூறுவளி தோன்றுவானேன்? அதனால் சூதுவாது அற்ற மக்கள் சிக்கிச் சீரழிவானேன்?

பெருமழை பெய்வானேன்? அதனால் விளைநிலங்கள் பாழ்படுவானேன்?

காலரா, காசநோய், வாந்திபேதி, பிளேக் வருவானேன்? அவைகள் மக்களைக் கொள்ளைகொண்டு போவானேன்?

பஞ்சம் வருவானேன்? அதனால் பட்டினிப் பட்டாளம் தோன்றுவானேன்?

பேய்கள் (இருப்பது உண்மையானல்!) உலவுவானேன்? அவைகளால் (இருப்பதாகக் கருதி) மக்கள் பீதி அடைந்து மடிவானேன்?

சிங்கத்தைப் படைப்பானேன்? அது ஒன்றும் அறியாத ஆட்டை அடித்துத் தின்பானேன்? அது தவளையைத் தின்று உயிர் வாழ்வானேன்?

எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்திருக்கின்ற, எப்பொழுதும் இருக்கின்ற, விருப்பு வெறுப்பற்ற அன்புருவாகிய, நன்மையை பயக்கும் 'கடவுள்' இவற்றிற்குச் சமாதானம் கூறினரா?

இல்லை!

கடவுளை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் மதமாவது இவற்றிற்குச் சமாதானம் கூறிற்று?

இல்லை!

இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு, சமாதானம் கூற இயலாத, முடியாத மதம் எப்படி எழுந்தது?

அச்சம் மதத்தைத் தோற்றுவித்தது. ஆசை அதனை வளர்த்தது.

அச்சந்தான் 'கடவுளை' உண்டாக்கியது! அச்சந்தான் பலிபீடம் கட்டச் செய்தது! அச்சந்தான் உயிர்களைப் பலிகொடுக்கச் சொல்லியது! அச்சந்தான் கற்பனைக் கடவுள்முன் மக்களை மண்டியிட வற்புறுத்திற்று! அச்சந்தான் வழிபாட்டு வணக்கங்கூற வேண்டியது! அச்சந்தான் குறையிரந்து வேண்டிக்கொள்ளத் தூண்டியது! அச்சந்தான் துன்பம்போக, இன்பம் பிறக்கக் கடவுளிடம் குறுக்கு வழி கொள்ளச் செய்தது? அச்சத்தின் அடிப்படையாக எழுந்த மதம் அச்சத்தைக் காட்டி மக்களை மத உணர்வு கொள்ளச் செய்தது; செய்கிறது. மதம் தான் கற்பித்த மேல் உலகம், நரகம் ஆகியவற்றைக் காட்டி மக்களை அடிமைகொண்டது.

மக்கள் அடிமைகளானார்கள். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று கூறி மதம் ஆண்டவனிடம் நம்பிக்கை வைக்கச்செய்தது; மக்கள் தன்னம்பிக்கையை இழந்தனர். 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்று கூறி ஆண்டவனின் ஆற்றலை மதிக்கச் செய்தது. மக்கள் தன் ஆற்றலை மதிககச் செய்தது. மக்கள் தன் ஆற்றலை இழந்தனர். மதம் மக்களை ஆண்டவனோடு இரண்டற ஐக்கியப்படுத்த அவர்களைப் பக்குவப்படுத்துவதற்காகத் தோன்றினதாகக் காணப்படுமேயல்லாது மக்களை மக்களாக வாழவைக்க அல்ல. மதங்களைப்பரப்பவந்த கடவுளின் அவதாரங்கள், தூதுவர்கள், மதங்களின் சிறப்பை எடுத்துக் கூற வந்த குருமார்கள், குருக்கள், பாதிரிமார்கள், மௌல்விமார்கள ஜீயர்கள், மகந்துகள், ரிஷிகள், முனிவர்கள், ஆச்சாரிய சுவாமிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள்.

பக்தர்கள் ஆகிய எல்லோரும் அறிய இயலாத ஆண்டவனை அறிய வேண்டுமென்றனரே யொழிய அறியக்கூடிய உலகை, உலகவாழ்க்கையை அறியும்படிசொல்லவில்லை. உலகம் அழியக்கூடியது; ஆகவே அதைப் பற்றி எண்ணுதே என்றனர். மேல் உலக வாழ்வு ஒன்று உண்டு என்று கூறி அதனிடத்து ஆசை கொள்ளச் செய்தனரே அன்றி நடத்தும் வாழ்வைப் பற்றிக் கவலைகொள்ளச் செய்யவில்லை. மதம் மக்களை 'அடியார்க்கடியாராக' வாழச் சொல்லிக்கொடுத்ததேயல்லாமல் மனிதனை மனிதன் என்று மதித்து வாழ் என்று சொல்லிக் கொடுக்கவில்லை.

எந்த ஒரு பெரும் கடவுளிடம் மக்களைத் தொடர்பு படுத்த மதங்கள் தத்தம் வழியே செல்லுகின்றன என்று சொல்லப்படுகின்றதோ, அந்தக் கடவுள் பாட்டாளியின் பதைப்பைத், தொழிலாளரின் துயரை, ஏழைகளின் அழுகுரலைப் பட்டினிப் பட்டாளத்தின் பரிதாபக் காட்சியை, விளையும் பயிரைப் பெருமழை போக்க வருந்தும் உழவனின் வருத்தத்தை, குழந்தை மடியப் புலம்பும் தாயின் சோகத்தைக் காணவில்லையா? காணவில்லை என்ருல் 'எங்கும் நிறைந்தவர்' என்பது எப்படிப் பொருந்தும்? கண்டிருந்தும் வாளா இருக்கின்ருரென்ருல் அவர் எப்படிக் 'கருணையங் கடல்' எனப்படுவார்? அவரால் விளைவன அல்ல அவை என்ருல் 'முழுமுதற் பொருள்' என்பது எங்ஙனம் பொருத்த மாகும்? அவற்றை அவரால் போக்க இயலாது என்ருல் 'எல்லாம் வல்லவர்' என்பது எப்படிப் பொருந்தும்? சிலர் இன்பம் அடையவும் சிலர் துன்பப்படவும் படைப்புத்தான் காரணம் என்ருல் பேதப்படும் படைப்பினைப் படைத்தவர் எங்ஙனம் 'விருப்பு வெறுப்பற்றவராவார்?' இன்பமும், துன்பமும், தொல்லையும் அடைவதற்கு அவரவர் கர்மவினை தான் காரணம் என்ருல் அவ்வினை அப்படி அமைவதற்கு யார் காரணம்? அதற்கும் அவர்தானே காரணமாக இருக்க வேண்டும்? இல்லை என்ருல் 'அவனன்றி ஒன்றும் இயங்காது' என்பது எப்படிப் பொருந்தும்?

இவற்ருல் தெளிவில்லாத, துன்பம் பயக்கக்கூடிய, தன்னம்பிக்கையை இழக்கச் செய்யும், தன்னுற்றலைக்

குறைக்கச் செய்யும் மதம் அச்சத்தையும் ஆசையையும் அறியாப்பொருளிடத்துக்கொள்ளச் செய்யத்தான், பயன் பட்டதே ஒழிய, உண்மையான, உறுதியான, தேவை யான, வாழ்வதற்கான வகையைச் செய்யவில்லை.

காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து, அறியாமைப் பற்றுக்கோடு கொண்டு வளர்ந்த மத உணர்வினின்றும் மக்களை விடுவிக்க, பல சீர்திருத்தக்காரர்கள் தோன்றி இருந்திருக்கிறார்கள். தத்தம் காலத்தில், தத்தம் நாட் டில் வழங்கி வந்த மதங்களைத் தம் காலத்திற்கேற்ற வகையில் திருத்தப் பாடுபட்டவர்களே கிருஸ்து மகமது புத்தர் போன்றோர் ஆவார்கள். அவர்களெல்லாம் முன் இருந்த மதப்பிடிப்பில் இருந்து மக்களை விடுவித்து, காலத்திற்கேற்ற நன்னெறி கூறி, அவர்களை வாழ்வு படுத்த வேண்டிச் சீர்திருத்தம் செய்யக் கிளம்பியவர் களேயல்லாமல் புத்தம் புதிய மதங்களைத் தங்கள்பெய ரால் உண்டாக்க அல்ல. அந்தக் காலத்தில், அந்தந்த நாட்டிற் கேற்ப, ஆங்காங்கு சீர்திருத்தக்காரர்கள் கூறிய கருத்துக்களையும், அக்காலப் பழக்க வழக்கங்களையும், கட்டுப்பாடுகளின் கீழ் கொண்டுவந்து அவைகளை மதங் களாக்கினர். மதங்களாக்கித் தொடர்ந்து வரும் பல காலங்களில், பல நாடுகளிலும் அப்படியே புகுத்தும் போது தான் காட்டுமிராண்டிக் காலத்து மதம் செய்த வேலையைச் சீர்திருத்தத்தின் பெயரால் உண்டாக்கப் பட்ட மதங்களும் செய்யத் தொடங்குகின்றன. எப் பொழுதோ, எங்கேயோ, எதற்காகவோ ஏற்பட்ட கருத் துக்களை வைத்துக்கொண்டு பகுத்தறிவு கொண்டு பார்க்காமல், காலத்தை நோக்காமல், இடத்தை உணரா மல் மக்களின் மனப் பண்பை ஆராயாமல், மதவெறியின் பெயரால், கட்டுப்பாடாக அச்சுறுத்தியோ, ஆசை காட் டியோ மக்களிடம் புகுத்தப்படும் முறை மக்களை அடிமை கொள்ளத்தான் பயன்பட்டது. மேற் கூறிய முறையைக் காப்பாற்றவே மதங்கள் பெரும்பாலும் நிலவுகின்றனவே யன்றி மக்களுக்குத் தேவையான புது வாழ்வு பயக்க அல்ல. 'புது வாழ்வு' என்றாலே 'பழைமையை'க் கட்டித் தழுவும் மதங்கள் எல்லாவற்றிற்கும் வெறுப்பைக் கொடுப்பதாகும். நிலை இதுவானால் 'மதம்' மனித வாழ்

வுக்குத் தேவைப்படுவது ஒன்றுகும் என்று எப்படிக் கொள்ள முடியும்? மதம் தேவையற்ற பழமைக்கு வளைந்து, பணிந்து, கொடுப்பதால் பழமையினின்றும் வேறுபட்டு விளங்கும் புதுமைக்கு வழி காட்டுவதாகாது. புதுமையை ஏற்று எதிர் நிற்கும் எதிர் காலத்திற்குப் பயன்படும் வழிகளை மதம் பயப்பதில்லை; பயந்ததில்லை.

உலகில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கும் 'மதம்' காட்டும் 'கடவுளுக்கும்' எவ்வகையிலும் தொடர்பைக் காணேமே என்று அறிந்த அறிவைக்கொண்டு விளக்கிக் காட்டுகையில், மத வாதிகள் ஆற்றல் (*Power*) உலகியலிலே இருப்பதைக் காட்டிக் கடவுள் உண்மைக்கு வழிகோலிவிட்டதாக எண்ணுவர். மதவாதிகள் கற்பிக்கும் காணுக் கடவுளுக்கு எண்ணம் உண்டு. நாம் அறியும் ஆற்றலுக்கு எண்ணம் இல்லை. காணுக் கடவுளுக்கு உள்ளம் உண்டு, அறியும் ஆற்றலுக்கு உள்ளம் இல்லை. கடவுள் செய்யும் செயலுக்குக் காரணம் உண்டு என்பர். ஆற்றலுக்குக் காரணம் என்பது தெரியாது. கடவுள் ஒரு முதல் என்று கூறுவர். ஆனல் ஆற்றல் ஒரு விளைவாகும். ஆதலால் புலன்களால் அறியக்கூடிய ஆற்றலின் உண்மையைப் புலன்களாலும் அறியமுடியாத கற்பனைக் கடவுளோடு ஒட்டவைப்பது, தேயும் மதவுணர்வைக் காப்பாற்றப் பயன்படுமேயொழிய உண்மையைத் தெளிவடையச் செய்யாது.

மதம் மக்களிடையே ஒழுக்கம் கற்பிக்கத் தோன்றியதாகாதோவெனின் அதுவும் எக்காலத்திலோ, எதற்காகவோ, எங்கேயோ ஏற்படுத்தப்பட்ட முறைகளைப் பொருந்தா நாளில் புகுத்தும் போது அந்த ஒழுக்க முறைகளும் மக்களுக்குப் பயன்படாமல் போகின்றன. மாறுகத் தீமையும் பயக்கின்றன. மதம் சொல்லிக்கொடுக்கும் ஒழுக்க முறைகள் அச்சத்தோடு குழைக்கப்பட்டு மக்கள்பால் திணிக்கப்படுகின்றன. பெரும்பாலான மதங்கள் ஆசையைத் தவிர்க்கச் சொல்லுகின்றன. அந்தக் கொள்கை கபடத்தனமாகவாவது ஆசை கொள்வது என்ற நிலைக்குக் கொண்டு வந்துவிட்டதே யொழிய ஆசையை அறவே துறக்கச் செய்பவில்லை. துறக்கச் செய்ய முடியாத, கூடாத ஒன்றைத் துறக்கும்படி மதம்

கூறிற்று. பலன் ஏற்படவில்லை. அதனால் மதத்திற்குத் தோல்வியே ஏற்பட்டது. காதல் வாழ்வை ஒழிக்கும்படி மதம் கூறியது. காதல் வாழ்வை ஒழித்து விட்டதாகக் கூறி, மதத் தலைவர்கள் மற்றவர்களின் மதிப்பையும், போற்றுதலையும், பெற்றார்கள். ஆனால் கள்ளக் காதல் புரிந்து உலகை ஏமாற்றி வாழ இடங்கொடுத்ததே ஒழிய ஒழுக்கம் வெற்றிபெறும் வகையில் கற்பிக்கப்பட வில்லை. இவ்வகையிலும் மதம் தோற்றது! மதம் உலக ஆசையை விட்டொழிக்கும்படி கூறியது. மக்கள் உயிர் விடும் வரையிலும் உலக ஆசையை வளர்த்துக் கொண்டு இருக்கிறார்களே ஒழிய ஆசையை விட்ட பாடில்லை. இதிலும் மதம தோல்வியுற்றது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகியவற்றை ஒழித்தால் மேல் உலகம் எளிதில் எய்தப் பெறலாம் என்று மதம் ஆசைகாட்டி அறிவுறுத்தியது. மக்கள் மனம் மாறினபாடில்லை. இதிலும் மதத்திற்குத் தோல்வியே. மதம் எல்லா வழிகளிலும் தன் எண்ணத்தை ஈடேற்ற முயன்றது; ஆனால் தோற்றது! மனிதனை மகிழ்ச்சிக் கடலில் நீந்தும்படி மதம் செய்ததில்லை. மதம் மக்களை அச்சுறுத்தி அடிமைகொண்டது. மதம் விஞ்ஞானத்திற்கு விரோதியாய் இருந்து வந்திருக்கிறது. புதுமை எண்ணத்தின் எதிரியாய்க் காட்சி அளித்து வந்திருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளை மதம் ஒப்புக்கொண்டதே இல்லை. மதம் தன்னைக் காப்பாற்ற வெறியர்களைத் தோற்றுவித்தது. மத வெறியர்கள் உலக வரலாற்று ஏடுகளின் பல பக்கங்களைக் குருதிக் கறை படியச் செய்துள்ளனர். மதம் அன்பின் பெயரைச் சொல்லிச் சீர்திருத்தக்காரர் பலரைச் சிறைப் படுத்திற்று; தூக்குமேடைக்குப் பலரை அனுப்பிற்று. பலிபீடத்தில் குருதி கொட்டச் செய்தது; நெருப்புக் குண்டத்தில் தள்ளி வதக்கியது; நஞ்சு ஊட்டிக்கொன்றது; சிலுவையில் பலரைச் சிதைத்தது; நாடு கடத்தியது; துண்டு துண்டாக வாளுக்கிரையாக்கியது; கழுவிலேற்றியது; இன்னபிறவெல்லாம் செய்தது.

மதம் செய்த நன்மையையும், மதம் இழைத்த தீங்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தீங்கின் பன்மடங்கு

பெருக்கமே மிகுந்து காணப்படும். மதம் புகட்டுவதாகக் கருதப்படும் ஒழுக்கம் மதத்தினால் நிலை நிறுத்தப்பெற்றதில்லை என்பதைக் கண்டோம். உலகியல், அறிவியற் கல்வி, சூழ் நிலைக்கேற்ற ஒழுக்கத்தை அவ்வப்போது புகட்டி வருகிறது; அதனால்தான் புகட்ட முடியும்; அப்படிப் புகட்டப்படும் ஒழுக்கமே நிலைக்கும்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆடவரும், பெண்டிரும் உலகை முன்னேற்றமடையச் செய்ய உழைத்திருக்கிறார்கள். கடவுளை உண்டாக்கினார்கள்; பேய்களைக் கண்டார்கள்; நரகையும் உண்டாக்கினார்கள்; வேத நூல்கள் எழுதினார்கள்; அற்புதங் காட்டினார்கள்; கோவில்கள் கட்டினார்கள்; மக்களைச் சிறைப்படுத்தச் சிறைகளும் கட்டினார்கள்; மன்னர்களுக்கு முடிசூட்டினார்கள்; முடிமன்னர்களைக் கவிழ்த்தார்கள்; மாறுபட்டவர்களைச் சிறைப்படுத்தினார்கள்; சிலுவையில் சிதைத்தார்கள்; எரித்தார்கள்; வெட்டி எறிந்தார்கள்; அறிவுரை பகர்ந்தார்கள்; வழிபாட்டுரை வணங்கினார்கள்; பள்ளிகள் கட்டினார்கள்; பல்கலைக் கழகங்கள் நிறுவினார்கள்; மக்களை வாழ்விக்கக் கருதி இன்னும் என்னென்னவோ செய்தார்கள். ஆனால் எண்ணியபடி வெற்றிபெறவில்லை. காரணம் என்ன? உலகை வறுமையும், ஏழ்மையும், பிணியும், பஞ்சமும், அறியாமையும் ஆட்சி செலுத்தி வருகின்றன. இவற்றை மதம் கற்பிக்கும் கடவுளினால் போக்கமுடியவில்லை; மதத்தினாலும் போக்க முடியவில்லை. மதத்தைப்பரப்ப வந்தவர்களாலும் போக்க முடியவில்லை. போக்கப்பட வேண்டியவை; ஆனால் போக்கப்படவில்லை.

இன்று மக்களிடம் காணப்படும் அறியாமை, இல்லாமை, பிணியுடைமை ஆகியவற்றை மதத்தால் போக்க முடியாது; மதம் போக்கினதில்லை. இவற்றை விஞ்ஞான அறிவே போக்கும்; அதனால்தான் போக்க முடியும். மதம் உறுதி கூறும், ஆனால் நிறைவேற்றாது விஞ்ஞானம் உறுதி கூறாது, ஆனால் அதனைப் பயன்

படுத்தும் அளவுக்கு நிறைவேற்றித் தரும். மக்களின் மன நிலை தீமையுடையதாயின் விஞ்ஞானம் தீமை பயக்கும். மனநிலை நன்மையுடையதாயின் விஞ்ஞானம் நன்மை பயக்கும். ஆகவே மக்களின் மன நிலை ஏற்றதாக மாறின் அறியாமை, இல்லாமை, பிணி யுடைமை ஆகியவற்றை விஞ்ஞானம் போக்கும். ஆனல் மதம் போக்காது. விஞ்ஞான அறிவுக்கும் விடுதலை பயக்கும். மதம் அறிவை அடிமைப்படுத்தும். ஆகவே மக்கள் வாழ்வு வளம்பெற மதம் அவசியமில்லை.

5

க. அன்பழகன்

'மதம் அவசியமா?' என்ற கேள்வி இன்று வெளிப் படையாகக் கேட்கப்படுகிறது. இக்கேள்வி மக்கள் மனதிலே தோன்றத் தொடங்கியதே ஒன்றிரண்டு நூற் ருண்டுகளாகத்தான். அதற்கு முன்பெல்லாம் இக் கேள்விக்கே மக்கள் மனதிலே இடமில்லே. அந்த அள விற்கு மத ஆதிக்கம், கெடுபிடி நிலவிற்று — மக்கள் அஞ்சி அடங்கி ஒடுங்கிக் கிடந்தனர்.

இன்று—அவசியமா என்ற கேள்விக்காளாகியுள்ள அதே மதத்தைக்குறித்து, அன்று அவசியம் என்று கருதியிருந்த அதே மக்கள், அந்த மதத்தினுடைய ஒன்றிரண்டு கொள்கைகளே விவாதித்தாலும், ஒருசில கதைகளேயும் கற்பனேகளேயும் ஏற்க மறுத்தாலும், பொய்யும் புனேசுருட்டுமாக அமைந்தவைகளேக் கண் டித்தாலும், அன்றி மதத்தின் ஒருசில தத்துவத்தைச் சந்தேகிப்பதாக வெளியிலே தெரிந்துவிட்டாலும்கூட அவர்கள் எல்லாம் பலவித கொடுமைகளுக்கும் கடுந் தண்டனேகளுக்கும் ஆளாக்கப்பட்டனர்.

மதத்தின் — பெயரால் நடைபெற்ற மோசடிகளே யும், முழு ஏமாற்றங்களேயும் கண்டு, அதை வெளியி டத் துணிந்தவர்கள் பட்ட பாட்டிற்கும் அடைந்த வேதனேக்கும் அளவில்லே.

மதத்தின் தூய்மையைச் சந்தேகித்தவர்கள் பாபத் திற்கு ஆளாகி நரகத்தில் விழுந்து துன்புறுவார்கள் என்றும், ஆண்டவனின் அன்பை இழந்து, சாத்தா

னின் கோபத்திற்கு ஆளாகி இரையாவார்களென்றும், நம்பி அஞ்சிக் கிடந்த மக்கள், எப்பொழுதேனும், எவரேனும், ஒருவர், இருவர், தங்கள் மதத்திலே — மாற்றங்காண விரும்பினால், அரசனின் தண்டனைக்கும், மதவாதிகளின் கொடுமைகட்கும், பொது மக்களின தூற்றலுக்கும் பலியாகியதையும் கண்டிருந்தனர்.

அங்கிலேயில் மக்களிடையே ஏது இவ் விவாதம்? அவர்கள் இதயம் என்ன எஃகா எந்தக் கொடுமையையும் தாங்கிக் கொள்ளும் வலியுடன் விளங்க? மிகச் சிலர் மட்டுமேதான் பொது விதிக்கு விலக்கானார்கள். அவர்கள் தாம் எஃகு உள்ளத்தோடும், எதற்கும் தாளாத உறுதியோடும, 'ஏன்? எதற்கு?' என்ற கேள்விச் சுடர்களைக் கையிலேந்தி, தத்துவப் புதர்களும், புரோகிதப் படுகுழிகளும், மதத் தளைகளென்ற விலங்குகளும், மூட நம்பிக்கையென்ற நச்சுக் காற்றும், அறியாமை என்னும் இருளும் சூழ்ந்த மதக் காட்டினிலே (மாயா உலகினிலே) அறிவொளி பரப்பினார்கள். அதற்காக அவர்கள் அடைந்த இன்னலுக்கும் துன்பத்திற்கும அளவும் எல்லையும் இல்லை.

அவ்வறிவொளி பரவியதாலேயே அஞ்ஞான இருள் (அறியாமை) முற்றிலும் மறையாவிடினும் கொஞ்சம் விலகிற்று. அஞ்ஞானம் அடியோடு அழிக்கப்படாவிடினும் விஞ்ஞானத்திற்கும் கொஞ்சம் இடம் கிடைத்தது.

'மதம்' கேள்விக்குரியதன்று என்ற கருத்து நிலைத்திருந்த வரையில், அதன் விளைவுகளை மக்கள் அனுபவித்த போதிலும், 'அது அவசியமா? அல்லவா?' எனபது குறித்து மக்கள் சிந்திக்க மறுத்தனர். அன்று மதத்தின் முன் மக்கள் யாவரும் மண்டியிட்டுக் கிடந்தனர். இன்றோ அவர்களிற் சிலரேனும் மதத்தை விட்டு விலகிச் செல்கின்றனர், மண்டியிட மறுக்கின்றனர். மதத்தின் ஆதிக்கம் மக்களின் வாழ்க்கையின மாற்றங்களை, புதுமை எண்ணங்களைத் தடுக்க முடியவில்லை என்றாலும், மக்கள் மதத்தை மறந்தபாடில்லை. மதத்தின் பிடி தளர்ந்திருக்கிறதேயொழிய, விடுபடவில்லை; எனவேதான் மதம் கேள்விக்குரியதாயிற்று.

இன்று விஞ்ஞானம் விரைந்து வளர்கிறது. எனவே தான் மதத்தின் ஏகாதிபத்தியம் மடமடவெனச் சரியும் நிலைபெற்றுள்ளது; மறையத் தொடங்குகிறது.

விஞ்ஞானக் கதிர்களை விரித்துப் பரப்பும் பகுத்தறிவுப் பரிதியின் தோற்றத்தால், அஞ்ஞானக் கங்குலை நிலைக்கச் செய்த மதமாயை கலையுங் காட்சியை இந்த இருபதாம் நூற்றாண்டில் காணுகிறோம். அந்தப் பரிதியின் ஒளிக்கதிர்களிலே ஒன்றுதான் "மதம் அவசியமா?" என்ற இக்கேள்வியுமாகும்.

இக்கேள்விக்கணை தொடுக்கவும், அதனால் விளக்கம் பெறவுமான சூழ்நிலை இன்று தோன்றக் காரணமாக இருந்தவர்கள், உலகின் பல பகுதிகளிலும் உண்மையாக, உடல் பொருள் உயிரைத் தியாகம் செய்தவர்களும், உலகம் உய்வதற்கென்றே ஓய்வின்றி உழைத்தவர்களுமாவார்கள்.

அவர்களுக்கும் சிறப்பாகத் தமிழகத்தில் இந்நிலை ஏற்படுத்தித் தந்த சுயமரியாதை இயக்கத்திற்கும், அதன் ஒப்பற்ற தலைவருக்கும், தொண்டர்கட்கும், இற்றை இளைஞர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

'மதம் அவசியமா!' என்ற கேள்வி நாட்டில் எழுப்பப்பட்டாலும், பலரின் காதிலே அது விழுவதில்லை, விழுந்தாலும், எண்ணிப்பார்ப்பதில்லை, எண்ணிப்பார்க்க நேர்ந்தாலும், பயத்தினால் அதைக்கழுவி விட்டுவிடுகிறார்கள். இந்நிலை மாறப் பொது மக்களின் அறிவு நிலை உயர வேண்டும்; உள்ளம் சிந்தித்துப் பழகி உரம்பெறவேண்டும். அப்பொழுதுதான் உண்மையென்று கண்டவற்றையேனும் ஒப்புக்கொள்வார்கள் மக்கள்.

"மதம் அவசியமா?" என்பதற்கு விடைவேண்டுமானால்—மதம் என்றால் என்ன? மதம் மக்களுக்குச் செய்யும் நன்மை தீமை யாவை? மதம் மக்கள் முன்னேற்றத்திற்குத் துணையா, தடையா?—என்ற கேள்விகளுக்கும் விடையிறுத்தாக வேண்டும்.

மதம் என்றால் என்ன?— என்பதைத் தெரிந்து கொள்ள, 'மதம்' ஏன் தோன்றிற்று? எப்படித்தோன்

றிற்று? எப்படி நிலைத்தது, நிலவுகிறது? என்பவைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

மதம், மக்களுக்கு அவர்களின் தோற்றத்திற்கும் வாழ்விற்கும் முடிவிற்கும் காரணனான இறைவனைக் காட்டவும், மனித உயிர்களை (ஆத்மாக்களை) உயர்நெறியில் செலுத்தி, இறைவனை அடைவித்து உய்விக்கவும் தோன்றிற்று என்பர் பலர்.

மதம், இறைவனைக் காட்டவே தோன்றிற்று என்றால், எல்லா மதத்தையும் சார்ந்தவர்களுக்கும் மற்றையோருக்கும் பொதுவான ஒரே கடவுளை, ஓருருவம் ஒரு நாமம் என்ற குறிப்பற்ற ஒரு பொருளை, ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு பெயரோடு மட்டுமின்றி, வெவ்வேறு உருவத்தோடும் தனித்தனிப் பெருமையோடும் பண்போடும் குறிப்பிடுவானேன்? உயிர்கள் உய்வதற்குரிய நெறிகள் என்று கூறப்படுவன, மதங்கள் தோறும் மாறுபடுவானேன்? இவைகளன்றியும், வேறுபட்ட நதிகள் பலவும் ஒரே கடலிலே கலத்தல்போல, ஒரே கடவுளைக் குறிப்பிடுவதாகக் கருதப்படும் மதங்கள் பலவற்றையும் பின்பற்றுவாருள், ஒவ்வொரு மதத்தினரும் பிற எந்த மதத்தையும், உணர்ந்துகொள்ளாமல், தம் தம் கடவுளே தலைசிறந்தவரென்றும், முதல்வரென்றும் தம்தம் மதவழியே பெருநெறி என்றும், பிறர் மதக் கடவுளரெல்லாம் தம் கடவுளினும் தாழ்ந்தவரென்றும் பிற மத நெறியெல்லாம் அளறுபாய்ந்த அழிவழியென்றும் கூறுவானேன்?

உண்மை இறைவனை உணர்ந்து உரைத்திருப்பின், அவ்விறை இலக்கணத்தில் இவ்வளவு வேறுபாடுகளும் அவரை அடையும் நெறியில் இவ்வளவு சிக்கலும் குழப்பமும் தோன்றுவானேன்? அச்சிக்கல் சமரச சுத்த சன்மார்க்க சமயமென்னும் தந்திரத்தாலும் நீக்கமுடியாமல் நிலைப்பானேன்? அறிவுக் கூர்மையால் அறுக்கப் பட்டாலொழிய, நீக்க முடியாதபடி (மதச்சிக்கல்) இறுகுவானேன்?

மதம் மக்களின் ஒழுக்கத்தை ஒழுங்குபடுத்தவும், ஒன்றுபட்டு வாழச்செய்யவும் ஏற்பட்டது என்பர் பலர். இன்று ஒழுக்கம்—மதத்தைப் பின்பற்றுபவர்களால்—

காப்பாற்றப்படுகிறதா என்பதையும், காட்டுமிராண்டித்தனம் ஒழிந்து நாகரிகம் ஏற்பட்டதற்குப் பின்னும் அரசாங்க முறைகளும், சட்டதிட்டங்களும், நீதி மன்றங்களும் வளர்ந்ததற்குப் பின்னும், ஒன்றுக்கும் பலவாக மதங்கள் தோன்றி இத்தனை ஆயிரம ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வந்த பின்னும்—மக்கள் மதநூல் கூறும் ஒழுக்கத்திலேயே வழுவித்தான் வாழ்கிறார்கள் என்பதையும், இந்த மதங்களால் வளர்க்கப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களாலும், குருட்டு நம்பிக்கையாலும், மேலும் மேலும் ஒழுக்கங்கெட்டு வருகிறார்கள் என்பதையும் காணுகின்றோம். மேலும் ஒழுக்கம், அறிவுப் பெருக்கால் — காலத்தின் வேகத்தில் மாற்றற்குரியது என்பதும் அறியின், அவ்வொழுக்கத்தை — ஒரு காலத்திலே இன்னதுதான் என்று வரையறுத்து வருகிற மதம், எப்படி ஒழுக்கத்தை எக்காலத்தும் நிலைநாட்டக்கூடியதாம் என்பதும் விளங்காமற் போகாது.

மதத்தால்—மக்களிடத்தில் ஒற்றுமை வளர்வதற்குப் பதிலாக—சில மதங்கள் (இந்து மதம் என்ற பொதுப் பெயரில் நிலவும் இந்நாட்டு மதங்கள் பலவும்) அம்மதத்தைச் சார்ந்தவர்களையே பிரித்துவைத்துப் பேதப்படுத்தி வருவதையும்—சில மதத் தத்துவங்களின் பொருள்களிலே வரும் வேறுபாட்டினாலேயே ஒரே மதத்தைச் சேர்ந்தோரே பிளவுபட்டிருப்பதையும், இன்னும் முக்கியமாக—ஒரு நாட்டைக் காப்பாற்ற எண்ணித் தலைவராக வர விரும்பியோரெல்லாம் தனித் தனிக் கட்சிகளைத் தோற்றுவித்துக்கொண்டு தங்களுக்குள்ளே உள்ள போட்டியால் உள்நாட்டிலே குழப்பத்தை வளர்ப்பதைப்போல—ஒற்றுமை என்ற பெயரால் பலப் பல மதங்களைத் தோற்றுவித்து, அம்மதங்களைச்சார்ந்தோர் தம்முள் மாறுகொண்டு வேறுபட்டு, மனித ஒற்றுமையைச் சிதைத்து வருவதையும் நாம் கண்டு வருகிறோம். இத்தகைய மதத்தினால் ஒழுக்கமும் ஒற்றுமையும் எவ்வாறு நிலவும்?

மதத்தால்தான் — மனிதனின் பேராசையையும், 'தான்' என்ற அகம்பாவத்தையும் தடுக்கவும், கடமை உணர்ச்சியை வளர்க்கவும் முடியும் என்று கருதுபவர்

பலர். உண்மையிலேயே மதத்தால் பேராசை ஒழியவில்லை யென்பதோடு அவரவரும் தங்கள் தங்கள் மதக் கடவுள் களிடத்தில் தாங்கள் சுகபோகத்தோடு வாழ வேண் டும், அதற்கு அருள் புரியவேண்டும் என்று கருதி வேண்டிக்கொள்கிற முறை வளர்ந்திருக்கிறது. ஆசை களை நிறைவேற்றிக்கொள்ள ஆண்டவனின் துணை யைத் தேடுகின்ற அளவிற்குத்தான் மதத்தால் மக் கள் முன்னேறி இருக்கின்றனர். மதத்தின் அமைப் பிலே உயர்ந்த இடத்திலே உள்ள புரோகிதர்களோ என்றால் பேராசைப் பேயர்களாக விளங்குகின்றார்கள். 'பேராசைக்காரனடா பார்ப்பான்' என்று பாரதி சுட் டிக்காட்டுமளவுக்குப் பார்ப்பனர்களிடத்திலே பேராசை வளர்ந்துள்ளதற்குக் காரணம் அவர்கள் — புரோகித வகுப்பினராக, மதத் தலைவர்களாக நீண்ட நாட்களாக நிலைத்துவிட்டமைதான்.

புரோகிதன் ஆனாலும், பாதிரியானாலும், வேறெந்த மதத் தலைவர்களானாலும் — தமது சாமர்த்தியத்தால் மதத்தையே பேராசைக்காரரின் கருவியாக அமைத்துக் கொண்டனர். அம் மதத்தைத் துணையாக்கி, பாவ மன் னிப்புச்சீட்டு விற்றும், பரலோகவழி திறந்துவிடப்பணம் வாங்கியும், அர்ச்சனை நடத்தவும் அபிஷேகம் செய்யவும் காசு பறித்தும், மாதாவின் பெயராலும் — மகேசுவரன் மகிமையாலும், கோவில் கட்டச் செய்து, தமதாட்சிக் குட்பட்டுச் சொத்துக்களை எழுதி வைக்கச் செய்தும், பொருள் சேர்த்துக்கொள்வதோடன்றிப், போகத்திற் கும் பெண்கள் தேடுவதற்கும் எளிதாகப் பொட்டுக்கட் டும் வழக்கத்தையும், கன்னிகா மாடங்களையும் பல தார மணமுறையையும் தோற்றுவித்துக்கொண்டு தீராத பேராசையோடு திகழ்வதையும் நாம் கண்டு வருகிறோம்.

மற்றும் ஒரு மதத்தார்—பிற மதத்தாருடைய பொரு ளைப் பறிக்கவும் வாழ்வைப் பறிக்கவும் தம்மதத்திலேயே சிறிது மாறுபட்டவர்களின் உரிமையைப் பறிக்கவும் முனைவதோடன்றி, எல்லோரும் தம்மதத்திற்கே சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதும், அத

னல் வரும் புகழுக்காக வாய் பிளந்து அலேவதும் பேராசை என்பதன்றி வேறென்னவாம்?

மத சம்பந்தமான கலகங்களிலே, பாமர மக்கள் தங்கள் மதம் உயர்ந்தது என்பதால் கொள்ளும் அகம்பாவ உணர்ச்சி ஒருபுறமிருக்க, சிலுவைப் போரிலும், இந்து முஸ்லிம் போர்களிலும், பழந் தமிழர் நாட்டுப் பண்புக்கே பங்கம் விளேக்கும் நிகழ்ச்சியான எண்ணுயிரம் சமணரைச் சைவகுரு ஞானசம்பந்தர் கழுவேற்றச் செய்த நிகழ்ச்சியிலும், மதத் தலேவர்கள் தத்துவமுணர்ந்தவர்கள், படித்தவர்கள் எப்படி நடந்துகொண்டுள்ளனர் என்று எண்ணிப்பாருங்கள். கிருஸ்துவமதத்தை எடுத்துக் கொண்டால் பாதிரிமார்கள் தமக்கு மாறுபட்டவர்களுக்கு இழைத்த கொடுமைகளும், இந்து மதத்தை எடுத்துக் கொண்டால் புரோகிதப் பாப்பனர்களும், மனுநீதிக்கு மண்டியிட்டு மண்டலமாண்ட மன்னர்களும் தமது இந்துமத வர்ணுசிரம தருமத்தை ஏற்றுக்கொள்ளாத மக்களுக்கு இழைத்த கொடுமைகளும் எதைக் காட்டுகின்றன என்று எண்ணிப் பாருங்கள். சூத்திரன (சம்புகன்) ஒருவன் தவஞ்செய்தான் என்ற காரணத்திற்காக, இறந்த பார்ப்பனச் சிசு ஒன்றைக் காரணமாகக் காட்டி, அச்சூத்திரன் தலேயை வெட்டினுன் ஆரிய இராமன். இது மதத்தின் காரணமாக ஒரு கூட்டத்தார் (இனத்தார்) கொண்ட அகம்பாவ உணர்ச்சியின் விளேவன்ருே! பார்ப்பனீயத்தின் கொடுமைகள் அனேத்திற்கும் இந்து மதத்தால் வளர்ந்த அகம்பாவமன்ருே அடிப்படை!

மற்றும் மதத் தலேவர்கள், பண்டார சந்நிதிகள், சங்கராச்சாரிகள், ஜீயர்கள், என்போர் தமது மத பக்தர்களே நடத்தும் முறையும் இக்காலத்திலேயும் வேறு வாகனங்கள் பல இருந்தும் மனிதர்களால் சுமந்து செல்லப்படும் பாரம் மிக்க பல்லக்கிலேயே பவனி வருவதும், பாதத்தைக் கழுவிக் குடிக்கச் செய்வதும் மதத்தால் விளேந்த அகம்பாவத்தையன்ருே காட்டுகின்றன!

கடவுள் நினேப்பு அகம்பாவத்தைப் போக்குமென்று எண்ணினர் பலர். ஆனுல் அதற்கு மாருக, மத அமைப்பினுல், கடவுள் நினேப்பு, சிலரைக் கடவுளுக்கு அடுத்த

படியிலுள்ளவர், பலரைக் கடவுளுக்கு மிகவும் தூரத்தில் உள்ளவர், எனவே மிகவும் தாழ்ந்தவர் என்றும், கருதிக் கொள்ளவும், அவ்வாறே நிலைபெறச் செய்யவும் காரண மாயிற்று. இந்நிலை மற்ற மதங்களிலே நாளடைவிலே தேய்ந்துவரினும் இந்து மதம் என்ற அமைப்பிலே மேலும் மேலும் வளர்ந்து, இன்றைய இந்து மதக் கோயில்களிலே காணப்படும் உயர்வு தாழ்வு நிலைகளைப் போலவே, பிற துறைகளிலும்—உயர்ந்தவர்கள் மேலும் மேலும் தாழவும், தாழ்த்தப்படவும், இந்தக் கடவுள் நினைப்பு காரணமாயிற்று.

இம்மத அமைப்பில், இடை நிலையில் உள்ளார் சிலர் உண்டெனினும், அது சமத்துவ நிலையாகா தாதலானும் இவ்விடை நிலை—மாறும் தன்மையதாதலானும், உயர் வும் தாழ்வும் நிலைத்திருப்பதே இவ்விடை நிலைக்குக் காரணமாதலினாலும், மதத்தினால் 'உயர்ந்தவர்களிடத் திலே' தோன்றும் அகம்பாவ உணர்ச்சியைத் தடை செய்ய இயல்வதில்லை. எனவே 'அகம்பாவ உணர்ச்சி யின்' வளர்ச்சிக்கே மதம் காரணமாகி விடுகிறதென்பதை யும் கண்டோம்.

'கடமையுணர்ச்சியோ' வெனில் ஒவ்வொரு மதத் தினரும் ஒவ்வொரு வகையினால் ஒவ்வொன்றைக் கடமை யாக்கியுள்ளனர். ஒரு மதத்தைச் சார்ந்த அனைவருக்கும் ஒரே விதமான 'கடமை'யைக் கூறுது. பலருக்கும் பலவித மாகக் கடமையைக் கூறும் மதமும் இருக்கிறது. எனவே மக்கள் எது கடமை என்ற கருத்திலே ஒன்றுபடுவதற்கு வழியில்லை. மேலும் காலத்திற்கும், இடத்திற்கும், அவர வருடைய தகுதிக்கும் திறனுக்கும் ஏற்பக் கடமை வேறு படுகின்றது. இவ்வாறு மாறும் கடமைகளை மதம் வரை யறுத்துக் கூறுவது இயல்வதல்ல. ஆயினும், பொதுவா கக் கடமையுணர்ச்சியை மதம் வற்புறுத்துகின்றதே யெனில், அதை மதம் வற்புறுத்துவதைவிடப் பல மடங்கு அதிகமாகவும், உண்மையாகவும், அவனுடைய பசிக்கும் வயிறும், அன்புக்குரிய சுற்றமும், காதல் மனைவி யும், நண்பர்களும், சமுதாயமும், அரசாங்கமும் (சூழ்நிலை களெல்லாம்) வற்புறுத்துகின்றன. ஆனால் மதத்தினால்

தான் அவன் சில மதக் கடமைகளை நிறைவேற்றுகின்றான். அப்படி நிறைவேற்றும் செயல்கள் மதத்தை நிலைக்க வைப்பதற்குச் செய்யப்படும் கடமைகள் ஆகுமேயன்றி அவைகள் எப்படி மனிதனின் கடமைகளாகும் என்று எண்ணிப் பாருங்கள். 'கடமை' என்றால் அதை நிறைவேற்றுவதால் மக்கள் வாழ்க்கை சிறப்புற வேண்டும்—தானோ, தன் சமுதாயமோ, மனித இனமோ, பயன் பெறும்படிச் செய்வதுதான் மனிதனின் கடமையாகும். பிறவெல்லாம், வேறு எதற்காகவோ, கடமை என்று கற்பிக்கப் பட்டனவேயன்றி உண்மையில் கடமையாகா. இந்நிலையில் 'மதக் கடமை' என்று கூறுவதும் வெறுங் கற்பனையேயாம். அப்படியாயின் மத அமைப்பால் வளரும் 'கடமை உணர்ச்சியும்' உண்டோ?

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் 'உதவி' முதலியவைகள் கடமையுணர்ச்சியன்றோவெனில் கடமையுணர்ச்சிதான். ஆனால் அக்கடமையுணர்ச்சி, ஒரே மதத்தவர் என்ற காரணத்தினாலேயேயன்றி, மதம் 'கடமையுணர்ச்சியை' வளர்த்ததாலென்று கொள்ள முடியாது.

மற்றும் மதமே கடமையுணர்ச்சியை வளர்த்திருப்பினும், ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களை எவ்வளவுக்கெவ்வளவு ஒன்றுபட்டு வாழச் செய்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பிற மதத்தினரை வெறுக்கவும் பகைக்கவும் அதே கடமை உணர்ச்சி காரணமாகிறது. எனவே கடமை உணர்ச்சியை மதம் வளர்க்கிறது என்று கொண்டாலும் அதனால் மதம் பயனடைவதைப்போல மனித சமுதாயம் பயனடையவில்லை என்றும் கண்டோம். மதம் ஏன் தோன்றிற்று என்பதற்கு மதவாதிகள் தரும் விடைகளை ஒருவாறு ஆய்ந்தோம்.

இனி 'மதம் எப்படித் தோன்றிற்று?' என்று கேட்டாலோ 'ஏன் தோன்றிற்று?' என்ற கேள்விக்கே இடமிருக்கக் கூடாது என்ற கருத்தோடு அவர்கள் கூறிய விடைகளே முதலில் கிடைக்கும்.

'மதம்' ஆண்டவனின் அருள் வாக்குகளையே வேதமாக உடையதென்றும்; அம்மதத்தின் தத்துவங்களை

முதலில் வெளியிட்டவர், ஆண்டவனால் அனுப்பப் பெற்ற அருள் தூதர் என்றும், உரைப்பர் மதவாதிகள்.

ஆனால் மதங்களின் எண்ணிக்கையையும், அதன் தத்துவங்களில் — வேதங்களில், ஒன்றுக்கொன்றுள்ள முரண்பாட்டையும் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். வேதம் முதலிய மத ஏடுகள், ஆண்டவனின் அருள் வாக்கு என்று கூறுவதில் உள்ள அபத்தத்தை. ஒவ்வொரு மொழியினரும், தங்களுடைய மொழிக்குப் பெருமை தேட, எப்படிப் பழங்காலத்தில், தமது மொழியே கடவுள் மொழியென்றும், தத்தம் மொழியையும் கடவுளே படைத்தார் என்றும் கூறிக்கொண்டார்களோ — அதேபோன்ற சிரிப்புக்கிடமான செய்திதான் மத ஏடுகளெல்லாம் கடவுள் திருவாக்கு என்று ஒவ்வொரு மதத்தினரும் கூறுவதுமாகும்.

மற்றும்—ஆண்டவன் அருள் வாக்கு என்றால், மொழி வேறுபட்டாலும் கருத்து மாறுபடாமலாவது இருக்கக்கூடாதா? ஆண்டவனின் அருள்வாக்குகளிலேயே ஒன்றுக்கொன்று நேர் முரணான கருத்துக்கள் நிலவுவானேன்? எனவே ஆண்டவன் அருள்வாக்கு என்னும் உரை—வெறுங்கற்பனை யன்றோ!

மேலும், ஆண்டவனின் தூதுவர்களால் மதம் தோற்றுவிக்கப்பட்டதென்றால்—ஆண்டவன் ஏன் அத்தனை தூதர்களை அனுப்பித்து வெவ்வேறு மதங்களைத் தோற்றுவிக்க வேண்டும்? உலகமனைத்தும், மக்கள் யாவரும் ஒன்றுபட்டு வாழுவது உலகங்கள் அனைத்திற்கும் ஒரே தலைவனாக விளங்கும், கடவுளுக்கே பிடிக்கவில்லையா? அன்றியும் ஒருநாடு வேறு பல நாடுகளுக்கும் தூதுவரை அனுப்பிவைப்பதைப் போல — பல இடங்கட்கும் பல தூதரை அனுப்பினார் என்றாலும் —எல்லா மக்களும் பயனடையும்படி ஏன் ஒரே காலத்தில் அனுப்பியிருக்கக் கூடாது? ஒரு நாட்டின் தூதர்களெல்லாம் தம் நாட்டின் பெயரையும், பிற விவரத்தையும் ஒரேமாதிரி உரைப்பது போல, ஆண்டவனின் தூதர்களும் அவரைக்குறித்து அவ்வுலகம் குறித்தும் ஒரே மாதிரியன்றோ உரைத்திருக்க

வேண்டும்! ஏன் வெவ்வேறு விவரங்களைத் தந்தனர் தூதுவர்? அல்லது தூதுவர்கள் சொன்னதை அப்படியே ஏற்பதானால், அவர்கள் வெவ்வேறு கடவுளிடமிருந்தும் வெவ்வேறு இடத்திலுமிருந்துமன்றோ வந்தவர்களாக வேண்டும்! அப்படியானால் முழு முதற் கடவுள் என்ற உண்மையையே ஐயத்திற்கு ஆளாக்குவதாகவன்றோ முடியும்!

மற்றும் இந்த மதத்தைத் தோற்றுவித்தவர்களில் யாரேனும்—ஒருவரேனும் உண்மையில் கடவுள் அருள் பெற்று வந்த தூதுவரானால், உலகம் முழுமையும், எல்லா மக்களுமன்றோ அம்மதத்தை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்! ஆண்டவனின் அருள்பெற்ற தூர்தராலும் ஆகாத காரியமாமோ இது? அப்படிக் கருதினும் அவ்வாண்டவனுக்குக் கன்றோ இழுக்கு? அல்லது — குழந்தை விளையாட்டில் கண்ணைக் கட்டிவிட்டுத் தேடச் சொல்வது போல ஆண்டவன் தூதர்களையனுப்பி அவரவருடைய திறனையும் சோதித்தார் என்று அல்லவோ கதை கட்டியாக வேண்டும். அப்படியானால் இதுவும் ஆண்டவன் திருவிளையாடல் என்று கூறிடுவர்போலும்! ஆனால் மக்களுக்கோ மண்டை உடைபடும் மதச் சண்டையும், மனவேதனையும் உயிர் வாதையுமா மல்லவோ?

மற்றும்— ஆண்டவனின் தூதர்களால் ஏற்படுத்தப் பட்டதென்று பொதுவாக ஒப்புக் கொள்வதானல் மதத்திற்கு மதம் அடையாள வேறுபாடுகள் நிலைநாட்டப்படுவதும், அப்புற அடையாளங்களைப் பெரிதென்று போற்றுவதும், அடையாள வேறுபாடுகளால் வரும் பெருந்தொல்லைகளைக் கண்டும் அவைகளை விட மறுப்பதும் ஏன்?

மற்றும் திருத்தூதர்கள் என்போர் அந்தந்தப் பண்பாட்டுக்கும் நாட்டுக்கும் ஏற்ப எல்லா இடங்களிலேயும் தோன்றி அங்கங்கே தேவையான மத தத்துவங்களை

யேனும் வளர்த்திருக்கும்படிச் செய்திருக்கக்கூடாதா அக்கடவுள்! இவை உண்மையல்லவாயின் பின் எப்படித் தான் மதம் தோன்றிற்று? எப்படி நிலவிற்று? என்று கேட்கத் தோன்றும். அதற்குரிய விடையை மதங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ள சரித்திரங்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

அவ்வக்காலத்து ஆங்காங்கே தோன்றும் அறிஞர்கள். தமது அறிவுத் திறனால் மக்களின் நல்வாழ்விற்கு வழிகோலுகிறார்கள். அவ்வாறு வழிகோலுகிறவர்கள் பலர் ஆனாலும், அதற்கு முன்னால் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை ஒரு பெரிய மாறுபாட்டுக்கு உள்ளாக்குபவர்கள், வாழ்க்கையையே புதுப்பிப்பவர்கள், சமுதாயத்தில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்துபவர்கள்—எனப்படுவோர் மதத்தைத் தோற்றுவித்தவர்களாகிறார்கள். வெறும் சீர்திருத்த வேலையை மட்டும் செய்யாமல், அடிப்படையிலேயே ஒரு மாற்றத்தை விளைவிப்பவர்கள் மதத்தைத் தோற்றுவித்தவர்களாகிறார்கள்.

எனவே—ஒரு பெரிய மாற்றத்துக்குக் காரணமாக இருப்பதுதான் பிற்காலத்தில் ஒரு அமைப்பைப் பெற்ற மதமாகிறது. அப்படித்தான் இந்து, புத்த, கிறித்துவ, முகம்மதிய மதங்களும் பிறவும் தோன்றியுள்ளன.

காலம் செல்லச்செல்ல இவைகளிலேயும் மாற்றம் விரும்புவதுதான் மக்கள் இயற்கை. மாற்றத்தை அனுமதிக்க மறுப்பது மதத்தின் தன்மை. எனவே ஒவ்வொரு மதமும், சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ, மக்களின் புதுமை விருப்பத்தை, முன்னேற்றத்தைத் தடுத்தே வருகின்றது. எம்மதமும்—புதுமைக்கருத்துகளை—முன்னேற்றக் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. எனவே எம்மதத்தையும் 'மக்கள்' எக்காலத்திலும் ஏற்றுக்கொள்வதற்குமில்லை, எம்மதமும் எக்காலத்தும் மக்கள் முன்னேற்றத்துக்குத் துணையாக இருந்ததுமில்லை; இருப்பதற்குமில்லை.

ஒவ்வொரு மதமும் 'அந்த' அமைப்பை அடைவதற்கு முன்பு, ஒரு சட்ட திட்டம் ஏற்படுத்துவதற்கு முன்பு, மக்கள் வாழ்க்கையில் திருத்தம் ஏற்படவும், மறுமலர்ச்சி தோன்றவும் பயன்பட்டதைப் போல், மத அமைப்பு ஏற்பட்டதற்குப் பின்பு பயன் படுவதில்லை. மதம், அமைப்பு ஏற்படும் வரையில், அதை ஏற்படுத்தியவர்களுடைய அறிவுக்கும், தெளிவுக்கும், உள்ள உரிமை, அமைப்பு ஏற்பட்டபின் அடிமைப்படுத்தப்படுவதாலேயே முன்னேற்றம் தடைப்படுகிறது.

எனவே மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு என்றென்றும் முட்டுக்கட்டையாகத் தான் இருந்திருக்கிறது, இருக்கமுடிகிறது. இதுவே மதத்தின் பொதுத்தன்மையானல், மதம் அவசியமா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

6

நாரண. துரைக்கண்ணன்

இன்று மதத்தின் பெயரால் நடைபெற்று வரும் அட்டூழியங்களையும் கொலைபாதகங்களையும் கண்டு கேட்டு அறியும் எவருடைய உள்ளத்திலும் 'மதம் அவசியமா?' என்ற கேள்வி எழுவது இயற்கையே! மத உணர்ச்சி காரணமாக மக்களிடையே மனமாச்சரியம் ஏற்பட்டு அடி, குத்து, கொள்ளை கொலை என்ற அளவுக்குப் படு பாதகங்களையும் துணிந்து செய்யக்கூடிய வெறியேற்படுமானல், அத்தகைய மதம் மக்களுக்கு அவசியமேயில்லை என்று தான் சொல்லத்தோன்றும்.

ஆனல், இன்று மக்களிடையே நிகழும் அநியாயம், கலகம், கொள்ளை, கொலை முதலிய கொடும் பாதகங்களெல்லாம் மத உணர்ச்சி காரணமாக ஏற்படுவது தானு என்பதை நாம் முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிதானமாக ஆராய்ந்து பார்த்தோமானல், நேற்றுவரை மக்களிடையே நடந்த கலகமும் குழப்பமும் இன்று நடப்பதும் நாளை நடக்கப் போவதும் எல்லாம் மத உணர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதல்ல என்ற முடிவுக்கு நாம் வருவோம்.

அப்படியானல், மக்களிடையே நடக்கும் வகுப்புக் கலகங்களுக்கும் மதச் சண்டைக்கும் உரிய உண்மையான காரணம்தான் என்ன! மக்களுக்கு இயற்கையில்

அமைந்துந்துள்ள சுயநலம், போட்டி, பொருமை, சூழ்ச்சி, சுரண்டல் அடக்கியாளும ஆசை போன்ற தீய குணங்களே மேற்குறித்த வகுப்புக் கலகங்களாகவும் மதச் சண்டைகளாவும், கொள்ளை. கொலைகளாகவும் பரிணமிக்கின்றன. மேற் குறித்த தீய குணங்களுக்கு இருப்பிடமாயிருக்கும் கொடியோர்கள் தாங்கள் புரிந்து வரும் கொலை பாதகக் குற்றங்களை மறைக்கவே மத உணர்ச்சி என்ற போர்வையைப் போர்த்துக்கொள்ளு கிருர்கள். பணக்காரர்களும் படித்தவர்களுமாயுள்ள ஒரு சுயநலக் கூட்டத்தார் பாமர மக்களிடையே மத உணர்ச்சியைத் தவருகக் கிளப்பிவிட்டுத் தங்களுடைய பட்டம் பதவியாசைகளை எளிதாக நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். தாங்கள் சுகபோகங்களை நன்கு அனுபவிப்பதற்கான வழிகளைத் தேடிக்கொள்ளுகின்ற னர். இன்று மத அடிப்படையில்' நாட்டைப் பிரித்து ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர் மேற்குறித்த சுய நலக் கூட்டத்தில் முதன்மை வகிக்கும் யோக்கியதை யுடையவர்களே யாவர். அது நிற்க.

மனிதர்களிடம் இரண்டுவிதமான இயல்புகள் அமைந் திருக்கின்றன. ஒன்று மனிதத் தனமை, மற்ருென்று மிருகத் தன்மை. இயற்கையில் மனிதர்கள்பால் மனிதத் தன்மைதான் பூரணமாக அமைந்திருக்க வேண்டும். ஆனல் அது மிகக் குறைவாக இருக்கிறது. மிருகத் தன் மைதான் அதிகமாக இருக்கிறது. மிகுதியாக இருக்கும் மிருகத்தன்மையைக் குறைத்துக்கொண்டே வந்து மனி தத் தன்மையைப் பூரணமாக அடைந்து, பின் அதிலும் பக்குவமுற்று, மனிதத் தன்மையைக் கடந்த தெய்வத் தன்மையை அடையவேண்டியது மனிதப் பிறப்பின் லட்சியமாகும். முதலில் மக்களை மிருகத் தன்மையி லிருந்து விடுவித்துப் பின் மனிதத் தன்மையைப் பூரண மாக அடைய உதவுவதும் சமயம்தான். பின் பூரண மனிதத் தன்மை பழுத்துப் பக்குவமுற்றுத் தெய்வத் தன்மையை அடைய வழி செய்வதும் சமயம்தான். இவ்வித மனிதனின் உண்மையான நிலையைத்தான் ஒரு பெரியார் "மனிதன் மிருகமுமல்லன்; கடவுளுமல்லன்; தெய்வத்தன்மை யடைய முயலும் கடவுள் சிருஷ்டி யாவான்" என்று விளக்கிக் கூறினர்.

சிருஷ்டி தத்துவத்தை அல்லது உலக இயக்கத்தின் தத்துவத்தைக் கூர்ந்து உணர்ந்தால் தான்; ஜீவ உற்பத்தி அல்லது ஜீவ வளர்ச்சியின் உண்மை இன்ன தென நமக்குப் புலப்படும். மனித வாழ்க்கை: ஏன்? எல்லா ஜீவராசிகளும் அததற்குரிய உடம்புகளைத் தாங்கி வாழ்ந்துவருவதே ஒரு லக்ஷியத்தைக்கொண்டு தான் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அறியாமை இருளில் ஆழ்ந்து பாச பந்தத்தால் கட்டுண்டிருக்கும் உயிர்கள் அச்சிறையினின்றும் விடுதலை பெறுவதற்கே பிறப்பும் வாழ்வும் இறப்பும் நிகழ்ந்து வருகின்றன. தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் இடைப்பட்டது வாழ்க்கை. ஜீவ வளர்ச்சிக்காகவே வாழ்க்கை அமைகிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

'கண்டதே காட்சி,கொண்டதேகோலம்'என்று மனம் போன போக்கில் வாழ்க்கை நடத்திச் சீர்கெட்டு அழிந்து வீணாக மாண்டு மண்ணில் மறைவதற்கு மனிதன் பிறக்கவில்லை; வாழவுமில்லை. மனிதனுக்கு வாழ்க்கை லட்சியம் உண்டு. அந்த லட்சியத்தை எப்படியும் அடையவேண்டும் என்ற மன உறுதியோடு தான் மனிதன் வாழ்க்கை நடத்த வேண்டும். துன்பத்துக்கு ஏதுவாகிய பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு இன்பத்தையடையவே, மனிதர்கள் மட்டுமல்ல; சகல ஜீவராசிகளும் விரும்புகின்றன. ஆனால் தங்களைச் சூழ்ந்துள்ள துன்பத்தை — துன்பத்துக்குக் காரணமான பந்தங்களை எப்படித் தவிர்த்துக்கொள்வது என்று அறியக்கூடிய அறிவும் வசதியும் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை. ஆதலால், அவை இயற்கைவழி வாழவேண்டியிருக்கிறது. மனிதனுக்குத்தான் இன்ப துன்பம் இன்னது, நன்மை தீமை இன்னது எனப் பகுத்தறியுஞ் சக்தியும், அறிந்ததை வெளிப்படுத்தும் செயல் திறனும் இயற்கையில் வாய்த்திருக்கின்றன. பகுத்தறிவு வாய்க்கப்பெற்றபோதுதான் பிறப்புரிமை இன்னதென மனிதனுக்கு விளங்குகிறது. உரிமை உணர்ச்சி நல்ல முறையில் உருவானால், ஒழுங்கான வாழ்க்கையில் மனிதனைக் கொண்டு செல்லும். உரிமை உணர்ச்சி உண்டாகும் நிலையிலேயே கோளாறு நேரு

மாஞல், மனிதனை எங்கு எங்கெல்லாமோ தவருனவழி யில்கொண்டு சென்று பந்தபாசங்களை அதிகப்படுத்தி மீளாத் துன்பத்துக்கு ஆளாகச் செய்யும்.

பிறப்புரிமையை உணர்த்தும் பகுத்தறிவு வாய்க்கப் பெற்ற மனிதன்தான் துன்பத்தினின்றும் விடுபட்டு இன்பம் அனுபவிக்க முயல்வதுபோல், தன்னெத்த மக்களையும் மற்ற ஜீவராசிகளையும் துன்பத்துக்கு ஏதுவாகிய பந்தபாசங்களிலிருந்து விடுவித்து இன்பமடையச் செய்ய வேண்டும். இக்கடமையை உணாத்துவது தான் சமயத்தின் தத்துவமாகும். இவ்விதம் தான் மட்டுமல்லாமல், தன்னொத்த மக்கள் எல்லோரும் மற்ற ஜீவராசிகள் எல்லாமும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நினைவு எப்போது உண்டாகும்? 'தானும் மற்ற மக்களும் ஜீவராசிகளும் ஒரே குடும்பத்துப் பிள்ளைகள்' அவர்கள் நம்முடன் பிறந்த சகோதரர்கள்' என்ற உண்மை தெரிந்தால்தான் ஏற்படும். 'எல்லாவற்றையும் ஆக்கி அளிக்கும் ஒரு முதற் பொருள் உண்டு. நாம் அனைவரும் அப்பொருளுக்கு உரிமையுடைய மக்கள். ஜீவயாத்திரையில் அகங்காரம், ஆணவம், மயக்கம் முதலியவைகளால் ஏற்படும் பந்தபாசங்களை எல்லாம் ஆன்ம நேயத்தாலும் அன்புத் தொண்டாலும் நீக்கி ஆன்ம சுதந்திரம் அடையச் செய்ய அம்முதல் பொருள் சகல ஜீவராசிகளுக்கும் உதவி வருகிறது' என்ற தத்துவ உண்மைகளை உணர்த்துவதற்கே...... சமயம் ஏற்பட்டது. மக்களையும் மற்ற ஜீவராசிகளையும் ஒன்ருேடொன்று கலாம் விளைத்து அவமே மடியச் செய்யச் சமயம் ஏற்படவில்லை. ஜீவலட்சியத்தை உணர்த்த ஒரு பெரும்சமயம் காலப்போக்கில் பல சமயங்களாயிற்று- பல சமயங்கள் பல பெயர்களால் ஏற்பட்டாலும், ஜீவலட்சியம் என்னும் ஒரு பேருண்மையைத் தான் பலவிதமாக உணர்த்தி வந்தன. ஆனுல் மதக்குருமார்கள் சிலர் அறியாமையாலோ சுயநலத்தாலோ செய்த விபரீத வியாக்கியானங்கள் அடிப்படை உண்மையை மறைத்து விட்டன. அதன் பயனுக ஏற்பட்ட கோளாறுதான் வகுப்புக் கலகமாகவும் மதச்சண்டையாகவும் பரிணமித்தது. ஆனுலும், பலப்பலவாய்

விரிந்த மதங்கள் ஒரே உண்மையைத்தான் அடிப்படையில் கொண்டிருக்கின்றன என்று உணர்ந்து பன்மையில் ஒருமைகண்ட பெரியார்கள் பலர் இல்லாமலில்லை. ஆனால் பொதுவாக மக்கள் பன்மையில் ஒருமைகாணும் பண்பை இழந்து வெகுகாலமாய்விட்டது.

இந்நிலையில், இக்கால நிலைக்கேற்ப, மக்கள் மனப் பண்புக்கிணங்க, உலகமனைத்துக்கும் ஒரே சமயம் ஏற்படவேண்டியது அவசியமாகிறது. 'ஒரே தேசம்; ஒரே சமுதாயம்; ஒரே தலைவன்' என்ற நிலை ஏற்படவேண்டுமென்று புத்துலக அமைப்பை எதிர்பார்ப்போர் விரும்புவதுபோல உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு பெருஞ் சமயத்தைச் சர்வ தேசீய சமயத்தை ஏற்படுத்த அறிஞர்கள் திட்டம வகுக்கவேண்டும். புது உலகம் தனி மனிதனை மறந்து உலக சமுதாயமாக மாறப்போகிறதல்லவா! அப்பெரு நிலையை நாம் எதிர்பார்க்கிறோமல்லவா! அதுபோல் தனித்தனிச் சமயம் என்ற நிலைமாறி உலகப் பெருஞ் சமயம் என்ற ஒன்று ஏற்படவேண்டுமென நாம் விரும்பவேண்டும். அதற்கான அமைப்பைக் காணப் பேரறிஞர்களும் தத்துவ ஞானிகளும் விரைவில் வழிவகுக்க வேண்டும்.

இங்ஙனம் சமய தத்துவத்தின் உணமை நிலையைச் சீர் தூக்கிப்பார்த்துத் தற்போதைய நிலைக்கேற்ப, சமய அமைப்பைக் காண்பதை விட்டு, 'மதம்தான் இன்றைய வகுப்பு வேற்றுமைக்கும் கலகங்களுக்கும் காரணமென்றும் அத்தகைய மதம் வேண்டாம்' என்று கூறிப்பிரசாரம் செய்வதிலேயே வீணாகக் காலங்கழிக்கின்றனர் பலர். இது அறிவுடைமையான செயலாகாது. மனிதர்கள் மனப்பேதலிப்பால் செய்யும் குற்றங்களைச் சமயத்தின் மீது சுமத்துவதும் பொருந்தாது. மதம் போதை தருகிற கஞ்சா போன்றது எனக்கூறுபவர்கள் மனிதனுடைய மன மயக்கத்தையும் சித்த சபலத்தையும் உய்த்துணராமலே சொல்லுகிறார்கள். இல்லாவிடில் மனிதன் அறிவு தடுமாற்றத்தால் செய்யும் தவறுகளைச் சமயத்தின் மீது சுமத்திப் பழிப்பார்களா?

உதாரணமாக, விஞ்ஞானக் கலையை எடுத்துக் கொள்வோம். மனித சமுதாயத்துக்குரிய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நன்மையை உண்டு பண்ணுவதற்குமே விஞ்ஞானக்கலை ஏற்பட்டிருக்கிற தென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் பலர் உயிர்களையும் பொருள்களையும் அழிக்கும் நாசக் கருவிகளையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். யுத்த காலத்தில் அவர்கள் கண்டுபிடித்த ராக்கெட், அணுகுண்டு முதலிய நாசக் கருவிகளால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பொருட் சேதங்களை நாம் நன்கு அறிவோம். அதற்காக, விஞ்ஞானக்கலை வேண்டாம் என்று யாரும் சொல்லுவதில்லை. நாசக் கருவிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளைத் தடை செய்யவே, சர்க்காரும் அறிஞர்களும் முயல்கிறார்கள். அவ் விஞ்ஞானக் கலையைப் போன்றதுதான் சமயஞானமும் ஆகும். சமய உண்மைகளுக்கு விரிவுரை செய்யும் குருமார்கள் சிலருடைய விபரீதப்போக்கைக் கண்டித்து உண்மையை நிலைநாட்டப் பேரறிஞர்களும் பிறரும் முயல வேண்டும். அதைவிட்டு, சமயமே அவசியமில்லை என்று கூறுவது மனித சமுதாயத்துக்கே கேடு செய்வதாகும்.

சமய உணர்ச்சி மக்களின் ஒவ்வொரு நினைப்பிலும் மொழியிலும் செயலிலும் பொங்கிக் கொண்டிருக்கிறது. சமய உணர்ச்சிதான் மக்களை நல்வழியில் நடத்திச் செல்கிறது. மனிதன் வழிதவறி இடர்ப்படும்போது சமய உணர்ச்சி முன்னின்று எச்சரிக்கை செய்யும். அதை மதியாது நடப்பவன்தான் நிலை தடுமாறி அல்லல்படுகிறான். எனவே சமயம் மனித சமுதாய வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது; அதன் வாயிலாக, நாட்டின் நிலையையே (National character) ஒழுங்குபடுத்தும் வல்லமை வாய்ந்தது சமயம். ஆதலால் சமய தத்துவத்தை மதியாத தனி மனிதனின் ஒழுங்கீனம் வளர்ந்து வளர்ந்து நாட்டு ஒழுங்கையே பாதிக்கும் என்று அறியவேண்டும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய சமயத்தின் அடிப்படை உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், சாதாரணப் புராண இதிகாசங்களில் காணப்படும் கட்டுக்

கதைகளையும் அறியாமையால் மலிந்துள்ள மூடப்பழக்க வழக்கங்களையும் அர்த்தமற்ற கொள்கைகளையும் சமய உண்மைகளாகக் கருதிச் சிலர் கண்டித்துப் பேசியும் எழுதியும் வருகின்றனர்; வாழ்க்கைக்கு வழிகாட்டாத ஊழல் மலிந்த மதம் அவசியமில்லை என்றும் வாதிக்கின்றனர். ஆசாபாசங்களாலும் கோபதாபங்களாலும் கற்பனைக் கோட்பாடுகளாலும் சமய உண்மையை நழுவ விடக்கூடாது.

உலகமனைத்துக்கும் ஒரே சமயம் என்று ஏற்பட்டு விட்டால், இந்து முஸ்லீம், சீக்கியம், புத்தம், சமணம், கிறிஸ்துவம் என்பன போன்ற மத வேற்றுமைகளும், அவ்வேற்றுமைகளால் விளையும் பூசல்களும் ஏற்படுவதற்கே இடமிரா. மத அடிப்படையில் அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையே எழாது. அரசியலில் மதம் இடம்பெறக்கூடாதென்ற பேச்சுக்கும் இடமிருக்காது. அரசியல் வேலைகளை ஐக்கியமாகச் செய்து முடிப்பதற்குச் சமய உணர்ச்சி உதவும். சாதிப்பிரிவு, வர்க்கப் பிரிவு, நிறத்திமிர், மொழி வேறுபாடு, தேசப் பாகுபாடு ஆகியவைகளைப் பெரிய வேற்றுமைகளாகக் கருதும் எண்ணம் ஏற்படாதபடி சமய உணர்ச்சி தடுக்கும். பொருளாதார சமத்துவமும் பொதுவுடைமை நிலையும் சமய உணர்ச்சியால் சுலபமாக ஏற்படும். ஆன்மநேய ஒருமைப்பாட்டை உண்டுபண்ணும் இச்சமய உணர்ச்சி சர்வ தேசிய எண்ணத்தை வளர்க்கும் என்பதில் சந்தேகமென்ன!

ஆகவே, அறவழி நிற்க, அறிவு நிலை உயர, அன்பை வளர்க்க, ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் நிலைநிறுத்தப் பெரிதும் உதவுவதால், சமய தத்துவம் உருவமும் உணர்ச்சியும் அறிவும் நிறைந்த மனித சமுதாயத்துக்கு அத்தியாவசியமாகும்.

7

ம. ப. பெரியசாமித்தூரன்

இன்று ஒரு புதிய துடிப்பு நம் உள்ளத்திலே ஏற்பட்டிருக்கிறது. அறிவினால் எதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்ற புதிய கிளர்ச்சி. கண்மூடித்தனமாகப் பலவற்றை இதுவரை ஒப்புக்கொண்டது போல இனிமேலும் ஒப்புக்கொள்ள நாம் விரும்புவதில்லை. இது வளர்ச்சிக்கு அறிகுறி. நமது சமூகத்திலே படிந்துள்ள மாசை நீக்கிப் புதிய உயிர்பெற்று வேகமாக முன்னேறிச் செல்வதற்கு அடையாளம்.

மதம் அவசியமா என்ற கேள்வியும் இப் புதிய துடிப்பின் காரணமாகவே தோன்றியிருக்கிறது. மதத்தின் பெயராலே பல பெரிய அநீதிகள் நடந்திருக்கின்றன; நடக்கின்றன. இன்றும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக மதம் உபயோகப்படுகின்றது. பிறப்பினால் உயர்வு தாழ்வு, மதத்தின் பெயரால் கற்பிக்கப்படுகின்றது. எல்லா உயிர்களுக்கும் தந்தையென மதமே முழங்குகின்ற இறைவன் திருமுன்பும் அம்மதத்தின் பெயராலேயே வேறுபாடுகள் தென்படுகின்றன. சமூகத்திலே வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு தீய பழக்கத்தை ஒழிக்க முயன்றால் அதற்கும் மதம் தடையாகப் பல சமயங்களில் குறுக்கிடுகின்றது. சமூக வளர்ச்சிக்காகப் புதிய வழியிலே எண்ணிப் பார்க்கலாமென்றால் "அதுவும் கூடாது; அது கடவுளின் கட்டளைக்கு விரோதம்" என்று மதத்தின் பெயரால் கூறப்படுகிறது. தாழ்ந்த நிலையிலே இருக்கும் ஒருவனை

உயர்த்தலாமென விரும்பினால், "அது அவன் விதி; அவனை உயர்த்துவதற்கு நீ யார்?" என்ற பேச்சு மதத்தின் பெயரால் எழுகிறது இவற்றையெல்லாம காணும்போது வளர்ச்சியிலே ஆர்வமுள்ளவர்களின் உள்ளம் பொங்குகின்றது. இந்த மதத்தையே அழித்துவிட்டால் என்ன என்று அவர்களுக்குக் கோபம் பிறக்கின்றது.

ருஷியா தேசத்திலே மதத்தின் பெயரால் நடந்த அநீதிகளைக் கண்டு புரட்சித் தலைவர்கள் சீறினார்கள். பொது உடமைக் கட்சியைத் சேர்ந்த யாரும் எம்மதத்தையும பின்பற்றக்கூடாது என்று தடை விதித்தார்கள். அவர்களை நாஸ்திகர்கள் என உலகமெலாம் தூற்றியதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் கொள்கைகளைப் பின்பற்றினார்கள். ஒரு புதிய சமூகத்தை உண்டாக்கினார்கள். அச் சமூகத்தைப் பழித்தும், அதில் மக்களுக்குச் சுகமே இல்லையென்றும் வேறு தேசங்களிலே தீவிரமாகப் பிரசாரம் நடந்தது; மதக் குருக்கள்மார் இதில் உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொண்டார்கள். பொதுவுடமைக்காரர்களை அரக்கர்களெனவும் அவர்கள் கொடுமைகளைத் தாங்காது மக்கள் அலறிக்கொண்டிருக்கிறார்களெனவும் புத்தகங்களும் பத்திரிகைகளும் எடுத்தோதி மக்களைப் பயமுறுத்தின. ஆனால் இரண்டாவது உலகமகாயுத்தம் உண்மையை வெளியாக்கிவிட்டது. ருஷிய மக்கள் அனைவரும் உலகமே அதிசயிக்கும்படி தங்கள் நாட்டிற்காகப் போரிட்டார்கள். தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டகாலத்திலும் அவர்கள் தங்கள் உறுதியிலிருந்து மாறவில்லை. அந் நாட்டிலே அரக்கர்களுடைய அரசு நடந்திருந்தால் மக்கள் அதற்காக ஆயிரக்கணக்கில் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்திருக்கமாட்டார்கள். புதிய சமுதாயத்திலே மகிழ்ச்சியும் பலமும் பெற்றுப் புதிய ஜீவனோடு விளங்கியிராவிட்டால் அந்நாடு இந்த யுத்தத்திலே வெற்றிகண்டிருக்க முடியாது. இதைக் கண்ட நம் மக்களும் எண்ணமிடலானார்கள். நாம் மட்டும இந்த மதத்தை விடாமல் பிடித்துக்கொண்டு வளர்ச்சி குன்றியிருப்பானேன்? மதத்தைப் புறக்கணித்துவிட்டு

வேறு ஒரு நாடு சிறந்த முறையில் முன்னேறி யிருக்கின்றதென்றால் நாமும் ஏன் அவ்வாறு செய்யக்கூடாது என்று தீவிரமாகக் கேட்கலானார்கள்.

இன்று காணப்படும் அழிம்புகளைக் கண்டு உள்ளம் கொதித்த இவர்கள் தங்களுக்கேற்பட்டுள்ள நியாயமான சீற்றத்தின் வேகத்திலே ஒரு உண்மையை மறந்துவிட்டார்கள். இவர்கள் எதை மதமெனக் கண்டிக்கிறார்களோ அது உண்மையான மதம் அல்ல. "கிருஸ்து மகான் உபதேசித்தது கிருஸ்து மதம்; சர்ச்சுகள் உபதேசிப்பது சர்ச்சு மதம்" என்று ஒரு அறிஞர் கூறியதுபோல உண்மை மதம் வேறு; கோயில்களில் நடைமுறையிலிருக்கும் மதம் வேறு. மதம் என்பது வாழ்க்கை நெறி. வாழ்க்கையை நல்ல முறையிலே எவ்வாறு வாழலாம் என்பதைச் சொல்லுவதே மதம். ஒரு ஆங்கிலப் பெரியார் கூறுகிறார்: மதம் என்பதன் பொருள் என்ன? அது உள்ளத்திலே நன்னெறியைப் பதியவைப்பது; சுயநலம், பேராசை முதலியவற்றை எதிர்த்து நிற்கும் ஆற்றலைத் தருவது; நடத்தையையும் நோக்கத்தையும் தூய்மைப்படுத்துவது; காமத்தை வெல்ல உதவுவது; வாய்மை பேசுதல், நாணயமாக நடத்தல், கருணையோடு வாழுதல், பிறர் குற்றம்பொறுத்தல், சிறிய செய்கையிலும் மனச்சாட்சிப்படி நிற்றல் ஆகியவற்றைக் கடைப்பிடித்துத் துணிவுடன் இருக்கச் செய்வது; சொந்த வாழ்க்கையிலும், பிறர் கண் முன்பும் பிறர் காணாத விடத்திலும் எப்பொழுதும் நன்னெறியையே சார்ந்து நிற்கச் செய்வது; சீரிய கொள்கையைக் கைக்கொண்டு நடப்பதோடல்லாமல் என்றும் புத்துயிர் பெற்று வாழச் செய்வது—இவற்றை யெல்லாம் தருவதே மதம் என அவர் விரித்துரைக்கின்றார். ஆகவே மதம் என்பது வாழ்க்கையைச் சீரிய முறையிலே நடத்துவதைப் போதிப்பதும், வாழ்க்கையின் உண்மைக் குறிக்கோளை அடையச் செய்வதுமாகும். அதை வேண்டாமென மறுப்பது நல்வாழ்க்கையையே மறுப்பதாகும்.

'நல்வாழ்க்கை வாழ்வதற்கு நீதி நெறிகள் மட்டுமிருந்தால் போதுமே, மதம் எதற்கு?' என்று சிலர்

கேட்கலாம். உலகத்தில் இன்பம் நிலவவேண்டுமானால் ஒவ்வொரு தனி மனிதனும் நன்னெறியில் ஒழுகவேண்டும் என்று எல்லோருக்கும் சிறுவயது முதற்கொண்டே அறிவூட்டிவிட்டால் நாம் விரும்புகின்ற பயன் கிடைத்துவிடும்; அதற்கு மதம் தேவையில்லையென அவர்கள் கருதலாம். தனி மனிதனுடைய சுகமும் நன்னெறியில் நிற்பதாலேயே ஏற்படுகின்றதென்றும் அறிவுறுத்தி அதன் மூலம் மேலே எடுத்துக்காட்டிய ஆங்கிலப்பெரியார் எதிர்பார்க்கும் பயன்களைப் பெறலாமே என்றும் அவர்கள் கேட்கலாம். இவ்வாறு செய்வதால் குருட்டு நம்பிக்கைகளும், உயர்வு தாழ்வுகளும், மூடப் பழக்க வழக்கங்களும், சமயப் பூசல்களும் ஒழிந்துவிடுமல்லவா என்றும் அவர்கள் வினவலாம்.

நன்னெறியைக் கடைப்பிடித்து நிற்கும்படி அறிவுறுத்துவதனால் இன்றுள்ள ஏற்றத் தாழ்வுகளைப்போக்கிவிடலாம்; அதனால் வாழ்க்கையினால் பல வசதிகளும் சுகமும் கிடைக்கும்படி செய்யலாம்; அதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்காக மதத்தைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமில்லை. மதம் அதற்கு முட்டுக்கட்டையல்ல. மதமும் அதையே செய்ய முயல்கின்றது. அது மட்டுமல்ல, இந்த நன்னெறிப் போதனை செய்யாத வேறொரு முக்கியமான காரியத்தையும் மதம் செய்ய முயல்கின்றது. நன்னெறிப் போதனையானது உலக வாழ்க்கையோடு நின்று விடுகின்றது. மதம் அதற்கு மேலும் செல்லுகின்றது. உலக இன்பத்தையே முடிவாகக்கொண்டு வாழ்க்கை நடத்தினால் மக்கள் என்றும் திருப்தி யடையவே முடியாது. அவர்கள் எதிர்பார்க்கும் இன்பத்திற்கு ஒரு எல்லை வகுக்கவும் இயலாது. உலக இன்பத்தின் இயல்பே ஆசையைப் பெருக்குவது தான். ஆதலால் மக்கள் அனைவரும் தமது சுகத்திலேயே கண்ணாக இருக்கத்தொடங்கினால் அதில் திருப்தியடையாமல் ஏங்கவும், அதன் பயனாகச் சுயநலத்தையே பெரிதாக எண்ணவும் தலைப்பட்டு விடுவார்கள். அது முடிவில் சுகத்தையே நாடும் விலங்கு நிலைக்கு இழுத்துச் சென்று விடும். அதனால்தான் ஒரு பெரியார் கூறுகிறார்: "மக்கட் சமுதாயத்திலிருந்து மதத்தை அகற்றிவிட்டால் அது

விலங்குக் கூட்டமாக முடியும்" என்று. நீதி நெறிகளால் உலகத்தில் எல்லாவிதமான உயர்வு தாழ்வுகளும் நீங்கலாம்; எல்லோருக்கும் சுகங்கிடைக்கலாம். ஆனால் அவ்வாறேற்பட்ட வாழ்க்கையில் முழுத் திருப்தி ஏற்படுமென்று சொல்ல முடியாது.

உலக இன்பங்கள் எல்லாவற்றையும் பெற்று வாழக்கூடிய நிலையில் பலர் இன்று இருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் வாழ்க்கையில் பூரண திருப்தி கிடைத்து விடுகிறதில்லை. பெறுவதற்கரிய ஏதோ ஒன்றை விரும்பி மனித உள்ளம் ஏங்கிக்கொண்டிருக்கிறது. அதை உலகத்திலுள்ள எந்த இன்பப் பொருளிலாவது பெற முடியுமா என்று தேடித் தேடி அலைந்து ஏமாற்றமடைகின்றது. அந்த நிலைத்த இன்பத்தை அளிக்கத்தான் மதம் முன்னிற்கிறது கடவுட் கொள்கையில்லாத நன்னெறி வாழ்க்கை உலக இன்பங்களை நல்கலாம்; ஆனால் மதமானது அவற்றோடு நிலைத்த இன்பத்தையும் திருப்தியையும தரக்கூடிய உயர் நெறியைக் காட்டுகிறது. ஆகையால்தான் மதம் அவசியம் என்று கூறுகிறோம்.

மதத்தின் பெயரால் பல சிறுமைகள் நடக்கலாம். ஆனால் அவற்றிற்காக மதத்தையே புறக்கணிப்பது அறிவுடைமையல்ல. விஞ்ஞானம் பல கொடுமையான அழிக்கும் படைகளுக்குக் காரணமாக இருக்கின்றது. அதனால் விஞ்ஞானத்தையே வேண்டாமெனத் தள்ளிவிடலாமா? அம்மாதிரிச் செய்ய நினைப்பது எப்படித் தவறுகுமோ அதுபோலவே மதத்தை விலக்க நினைப்பதும் தவறுகும். மதத்தின் பெயரால் நடைபெறும் அநீதிகளை நாம் களைந்தெறியலாம்; உறுதியுடன் களைந்தெறிய வேண்டும். பொற்சிலையிலே தூசு படிந்திருந்தால் தூசைத் துடைத்தெறிய வேண்டுமே ஒழியச் சிலையை உடைத்தெறியக் கூடாது.

உண்மை மதத்தினின்றும் வேறுபட்டிருக்கிற புறச் சடங்குகள், வழிபாடு முறைகள் முதலியவற்றில்தான் குறைபாடுகள் பெரிதும் இருக்கின்றன. அவைகளே வேற்றுமைக்கும் காரணம். ஒவ்வொரு மதத்திலும்

பொதுவாக மூன்று படிகள் இருக்கக் காண்கிறோம். தத்துவம், புராணம், சடங்குகள் என்பன அவை. புராணமும் சடங்குகளும சாதாரண மக்களுக்கு உண்மையை எளிய முறையில் விளக்கிக் காண்பிப்பதற்காக எழுந்தவை. அவைகளிலே பல அந்தந்தக் காலத்திற் கேற்றவாறு உண்டாக்கப்பட்டவை. அவை எக்காலத்திற்கும் வேண்டப்பட்டவையல்ல. ஆதலால் அவற்றிலே உள்ள குறைபாடுகளையும், பயனெழிந்தவைகளையும் களைந்து விட வேண்டும். மாறாத தத்துவங்களையும், மற்றவைகளையும் வேறு வேறாகப் பிரித்துணராமல் கண்மூடித்தனமாக அனைத்தையும் பினபற்ற முயல்வது கடவுளுக்குத் துரோகம் செய்வதாகும. இறைவன் நமககளித்துள்ள அறிவை நல்வழியிலே பயன்படுத்தாதிருப்பது துரோகமல்லவா? சுவாமி விவேகாநந்தர் ஓரிடத்திலே கூறுகிறார்: "தனது அறிவைப் பயன்படுத்தும் ஒருவன் இறைவனிடத்து நம்பிக்கையில்லாதிருப்பினும் அவனை இறைவன் மன்னித்து விடுவார்; ஆனால் அறிவைப்பயன்படுத்தாது குருட்டுத்தனமாக நம்புபவனை அவர் மன்னிக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன்."

குறைபாடுகள் இருப்பதால் மதத்தையே ஒழித்து விட வேண்டுமென்பதை யாரும் ஏற்றுக கொள்ள முடியாது. மேலே படிந்திருக்கிற மாசையெல்லாம விலக்கி விட்டுப்பார்த்தால் பெரிய உண்மைகளை மதம் காண்பிப்பதை அறியலாம். மனிதனுக்கு நிலைத்த மன அமைதியையும, இன்பத்தையும் அளிக்கக்கூடிய உண்மைகளை அதில் காணலாம். சிறந்த ஞானிகள் தஙகள் பெருமுயற்சியினால் கண்டறிந்த மறை பொருள்களை நமக்கு மதத்தின் மூலம அளித்திருக்கிறார்கள். உலகத்திலே ஓரிடத்திலல்ல; பலநாடுகளிலே மகான்கள் இருந்திருக்கிறார்கள், அவர்கள் தங்கள மெய்ஞானத் தேட்டத்திலே அடைந்த அனுபவங்களை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். நடுவு நிலைமையோடு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அவை அனைத்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையல்ல வென்று தெளிவாகும. அவற்றிலே வீண் வாதங்களுக்கோ, உயர்வு தாழ்வுகளுக்கோ, அநீதிகளுக்கோ இடமில்லை. ஆதலால் அவற்றை அறிந்து நாம் பயனடைய வேண்டும்.

மதம் மதம் என்று பேசிக்கொண்டிருப்பவர்களிடத்தே முயற்சி இல்லையென்றும் அவர்கள் உலகத்தை வெறுத்துப் பேசிச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பாதகமாக இருக்கிறார்களென்றும், மத விஷயங்களிலே அதிக கவனம செலுத்தியதனால்தான் இந்நாடு தாழ்வுற்றதென்றும், சிலர் கூறுகிறார்கள். இக்குறைபாடுகளெல்லாம் மதத்தைச் சரியானபடி புரிந்துகொள்ளாததினால் ஏற்பட்டவையே ஒழிய மதத்தினால் உண்டானவையல்ல என்று நான் அழுத்தமாகக் கூறவிரும்புகிறேன், மதத்தை உண்மையாகப் பின்பற்றுகிறவர்கள் தாம் அருஞ் செயல்கள் ஆற்றமுடியும் என்பது என துநம்பிக்கை. மதம் கடமையைப்புறக்கணிக்கச் சொல்லவில்லை; மதம் கடமையைப் பற்றற்ற நிலையிலிருந்து உயர்ந்த முறையில் செய்யும்படி போதிக்கின்றது.

மதத்தின் மூலம் உலகம் அனைத்தையும் ஒரே குடும்பமாகவும் எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்து வாழ்தலே உண்மையான இன்பத்திற்கு வழியெனவும் உணரலாகும். அவ்வுணர்ச்சியால் நாம் இன்று விரும்பும் எல்லா விதமான சமத்துவத்தையும் பெறலாம். ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனது அம்சமென்று மதம் போதிக்கின்றது. அந்த உண்மையை அறிந்துகொண்டால் பிறகு வித்தியாசங்களுக்கு இடமேது? ஆதலால் மதம் என்பது உயர்ந்த உண்மையைக் காட்டும் நெறியென்றும், அதைப் பின்பற்றுவிடில் மனக்கவலை மாற்றல் அரிது என்றும் சடங்குகள் முதலானவைகள் மதத்தில் நிலையான முக்கிய அம்சங்கள் அல்லவென்றும், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை அவ்வப்போது களைந்துவிட்டு மதத்தைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் நாம் அறியவேண்டும். மேல் நாடுகள் விஞ்ஞானம் முதலிய சாதனங்களைக் கொண்டு உலக இன்பத்தை நாடின. கீழ்நாடுகள் தத்துவ விசாரணையில் நின்று ஆத்மீகவளர்ச்சியை நாடின. இரண்டிலுமுள்ள சிறப்பியல்புகளின் சேர்க்கையிலே தான் உலகம் இன்பமடைய முடியும்.

8

டி. கே. சீனிவாசன்

ஆபத்தான கேள்வி! இயேசு, முகமது, புத்தர், ராமானுஜர், சங்கரர், அரவிந்தர், ரமணர், சாயிபாபா, ஆனந்தர் இத்தனை அவதார புருஷர்களும், இவர்கள் தந்தருளிய வேதம், குரான், பாஷ்யங்கள், தேவாரம், திருப்புகழ் போன்ற ஏடுகளும், இந்த ஏடுகள் கற்பிக்கும் 'அன்பே ஆண்டவன்' 'ஆசையை அடக்கு'; பஞ்சமாபாதகங்களும் பரமன் அடியைத் தேடுவோர் விட்டொழிக்க வேண்டியவை என்ற அறிவுரைகளும் மதத்தின் அடிப்படையாக அமைந்தவை.

சூது வஞ்சகம் பொறாமை பொய் கொலை இவைகளை எல்லாம் அடியோடு துடைத்து அன்பு அறிவு ஒழுங்கு ஒழுக்கம் இவைகளைப் பரப்பும் ஸ்தாபனம், ஆத்மீக சக்தியைவளர்க்கும் சாதனம், ஆண்டவனை அடையும் மார்க்கம் என்ற வாதங்கள் மதத்தின் சார்பாகக் கூறப்பட்டவை.

"கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழிப்படி குடி இருக்கும் ஊர்களிலே எல்லாம் ஆலயங்கள், அவைகளுக்காக எழுதிவைக்கப்பட்ட சொத்துக்கள், சொத்தைக் கொண்டு எழுதப்பட்ட ஸ்தல புராணங்கள், புராணங்களை எழுதுபவர்களுக்குக் கொடுக்கும் கூலி, புராணங்களால் ஏற்பட்டு ஆண்டு தோறும் நடத்தப்படும் திருவிழாக்கள் இத்தனைக்கும் விவசாயம், தொழில், வாழ்வு இவைகளுக்காகச் செல

வழிக்கும் பணத்தைவிடப் பலமடங்கு அதிகமான அளவு பணம் செலவழிக்கப் படுகிறது. மதநம்பிக்கை உள்ளவர்கள் தாம் உலகத்திலே பெரும்பாலோர்.

இத்தனையும் எழுதிவிட்டு 'மதம் மக்களுக்குத் தேவையா?' எனக்கேட்பது பலரைக் கேலி செய்யத் தூண்டும். அரசமரத்தடிச் சாமியார், ஆசிரமத்திலே இருக்கும் ஆண்டவன் அவதாரங்கள், பழனி மலைக்குக் காவடி தூக்கும் வேலன், "தீராத வல்வினைகள் தீர்த்து வைப்பார் கோவிந்து" எனத் தெருவிலே பாடிக் கொண்டே செல்லும் திருவேங்கடம், ஐந்துவேளை தொழுகை தவறுது செய்யும் அஹம்மது பாவ மன்னிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பாக்கியம் இத்தனை பேரையும் சற்று நிமிர்ந்து பார்க்கத் தூண்டும். கேட்கக் கூடாது, கேட்டால் பாவம், கேட்க அனுமதிப்பதே குற்றம் என்று எண்ணுவார்கள் பலர். கேட்டுத்தான் பார்ப்போமே என்று எண்ணியவர்கள் பதினெட்டாவது நூற்றுண்டுக்கு முன்னுல் உயிரோடு கொளுத்தப்பட்டிருக்கிறார்கள், நாட்டைவிட்டு விரட்டப்பட்டிருக்கிறார்கள், கொதிக்கும் வெந்நீரிலே வேகவைக்கப் பட்டிருக்கிறார்கள் எனச் சரித்திரங் கூறுகிறது.

இன்றல்ல, நேற்றல்ல, தொன்றுதொட்டு மதத்திற்குப் போட்டியாகத் துணிந்து நிற்பது அறிவு. அறிவு ஆண்டவனுல் மனிதனைப படைக்கும்போதே தரப்பட்டது என்பது மதவாதிகள் கருத்து. மதம் ஆண்டவன் அனுப்பிய தூதர்களால் அமைக்கப்பட்டது. நேரிடையாகத் தரப்பட்ட அறிவு யாரோ ஒருவர் மூலம் அமைக்கச் சொல்லி அனுப்பிய மதத்தோடு போட்டி போடுகிறது. அறிவின் வளர்ச்சியே கேள்வி கேட்பதில்தான் இருக்கிறது. விதையை விதைத்துவிட்டு அதை விளையவிடுவது தவறு எனச் சொல்வதுபோல்தான் மூளையைக் கொடுத்துவிட்டு அதற்கு வேலை கொடுக்காதே எனக் கடவுள் சொல்கிறார் என்பதும் ஆகும். ஆகையால் அறிவின் முன்னுல் மதம் தீர்ப்புக்கு வருவது பாபமோ குற்றமோ ஆகாது.

மதம் "நம்பு" எனச் சொல்கிறது. அறிவு "என்னை நம்பும்படி செய்" எனக் கேட்கிறது. பள்ளிகொண்டிருக்

கும் பெருமாள், பரதநாட்டியமாடும் பரமன், சத்து சித்து ஆனந்தம், பிதா மகன், பரிசுத்த ஆவி இத்தனை பேருடைய சக்தியையும் அருளையும் பெற்றிருப்பதாகப் பெருமைப்படும் மதத்தால், சாதாரண மனிதனிடத்தில் இருக்கும் அறிவு கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல இயலவில்லை என்று சொல்வது பொருந்தாது.

மனிதன் வாழப் பிறந்தவன். சொர்க்கத்துக்குப் போகச் சொத்துக்களை எல்லாந் தானஞ் செய்பவர்கள், ஆண்டவனோடு இரண்டறக் கலக்க முயற்சிபோர், "உலகம் மாயை, வாழ்வை நம்பாதே" எனப் போதனை செய்பவர்கள் அத்தனை பேரையும் ஆண்டவனை கூப்பிட்டனுப்பி நாளையே நமதடி வந்து சேர் என்றால் எத்தனை பேர் தயாராயிருப்பார்கள் என்பது ஐயப்பாட்டுக்குட்பட்டது. ஆகையால் வாழ வேண்டும், வாழ்வதற்குப் பணந் தேடவேண்டும், என்ற எண்ணந்தான் எல்லோரையும் இயக்குகிறது. பிறர் துன்பப் படுத்துவதைப் பார்த்து அதைத் தீர்க்கும் சக்தி நம்மிடையே இல்லாதபோது, உற்றவர்களில் யாராவது இறக்கும்போது, நம் வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளையும் நஷ்டங்களையுந் தவிர்க்க முடியாதபோது மனதைத் தேற்றிக் கொள்ளத்தான் மத குருக்கள் கற்பித்துக் கொடுத்த "அவனன்றி ஓரணுவும் அசையாது" "சம்ஸார சாகரம்" "தலைவிதி" என்ற வார்த்தைகள் உபயோகப் படுகின்றனவே தவிர மற்ற நேரங்களில் அவைகளை விஷயந் தெரிந்தவர்கள் யாரும் பொருட்படுத்துவதே இல்லை. ஆகையால் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை எந்த வகையிலும் மதம் அசைக்க முடிவதே இல்லை.

வாழ்க்கையை ஒழுங்காக நடத்த, ஒருவர் வாழ்க்கை மற்றவர் வாழ்க்கையில் மோதுவதைத் தடுக்க, மதம் இருக்கிறது என்றால் அதற்குப் போட்டியாகச் சட்டந் தேவை இல்லை. சட்டமும், மதமும் எத்தனையோ அளவு பணம், உழைப்பு, சக்தி மூன்றையும் வீணாக்கியும் ஒழுங்கை ஏற்படுத்தியதாகவுந் தெரியவில்லை. "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்றுகொல்லும்" என்ற பழமொழிப்படி அரசன் கையிலே தூக்குமேடையையும் தெய்

வத்தின் கையிலே நரகத்தையும் கொடுத்திருக்கிறோம். இரண்டும் பயத்தை உண்டாக்கிப் பலனை எதிர்பார்ப்பவைகளாக இருக்கின்றனவே தவிரப் பொறுப்பை உணரச் செய்து நல்வழிப்படுத்த முயல்வதே இல்லை. முதல் தடவை திருடும்போதே சற்று அச்சம் ஏற்படும். அதற்குப் பரிகாரமாகப் பச்சாத்தாப உணர்ச்சி உண்டாகும். இரண்டாவதுதடவை அச்சங் குறையும், பச்சாத்தாபம் மறையும், மூன்றாவது முறை "செய்தால் என்ன?" என்ற எண்ணம் ஏற்படும். குற்றத்தை மறைக்க அரசாங்கத்துக்கு லஞ்சமும், பாபத்தைக் குறைக்க ஆண்டவனுக்குக் காணிக்கையுங் கொடுத்து விட்டால் தாராளமாகத் திருடலாம், பொய்சொல்லலாம் என்றஎண்ணம் துணிந்து எவராலும் வெளிப்படுத்தப் படாவிட்டாலும் மக்களிடையே செயலிலே வெளிப்படுகிறது.

ஒழுங்கை உண்டாக்க இருக்கும் அரசனும் (அரசாங்கமும்) ஆண்டவனும் ஒழுங்காக இருக்கிறார்களா என்ற பிரசனையை எவருங் கவனிப்பதே இல்லை. தனி மனிதன் செய்யும் கொலை பஞ்சமா பாதகங்களிலே ஒன்று. ஆனால் பலிபீடங்களிலே செய்யும் உயிர்ப்பலிகள் ஆண்டவன் காணிக்கையாகவும், போர்முனைகளிலே கொன்று குவிக்கப்படும் உயிர்கள் வீர சுவர்க்கத்துக்குப் போவதால் அது அரசியல் நீதியாகவும் கூறப்படுகிறது. விதவைகளையும், கன்னிப்பெண்களையும் இளமை உணர்ச்சிகளை அடக்க மதம் தூண்டும்போது அவர்கள் மீறிச் செல்லுவதைப் பார்த்துக்கொண்டு அதை வெளியில் சொல்லக் கூடாது, மதத்துவேஷம் எனக் கூறும் மதமும், வேவுகாரிகளாக எந்தவிதக் கீழ்த்தரச் செயல்களுக்கும் பெண்களைத் தயாராக்கி அனுப்பி அது ராஜதந்திரம் எனச் சொல்லும் அரசாங்கமும் விபசாரம், டாபம், குற்றம் என உபதேசம் செய்வது பரம்பரைத்திருடன் நீதிமன்றத்தில் திருடுவது கூடாது எனச் சொல்லுவது போலத்தான் ஆகும்.

ஆத்மீக சக்தியை வளர்ப்பது மதமென்று சொல்வார்கள். கிருஸ்துவிற்குப் பிறகு நபியையும், நபிக்குப் பிறகு புத்தரையும், புத்தருக்குப் பிறகு அரவிந்தரை

யும், அரவிந்தருக்குப் பிறகு ஆனந்தரையும் கிளையை விட்டுக் கிளைக்குத் தாவுவதைப்போல மனித சமுதாயம் பின்பற்றிக்கொண்டே போவதைப் பார்த்த பிறகுகூட மதம் ஆத்மீக சக்தியை, மன வலிமையை வளர்த்துக் கொண்டிருக்கிறது என்று எப்படிச் சொல்லமுடியும்?

ஆண்டவனை அடையும் மார்க்கம் என்றால் எப்படி என்ற கேள்வி உண்டாகும். மதக் கர்த்தாக்களுக்கே ஆண்டவனை எப்படி மனித சமுதாயம் அடைகிறது என்பது புரியவில்லை. இறந்தவுடன் இறைவன் திருவடி நிழலை அடைகிறார்களா, தீர்ப்புநாள் வரைக்கும் கல்லறையிலே காத்துக்கொண்டிருக்கிறார்களா, உறங்கும்போது ஆத்மா ஆண்டவனோடு உறவாடுகிறதா என்ற பிரச்னைகள்தாம் மதவாதிகளை ஒன்றுசேர விடுவதில்லை. இப்போதிருப்பது மதமல்ல. மதங்கள். ஒரு வீட்டிற்குள் நுழைய இருக்கும் பல வாயிற்படிகள் போலக் கடவுளைக் காண இருக்கும் பல வழிகள் என்றால் மதச் சண்டை, சமணர்களைக் கழுவிலேற்றிய படலம், சிலுவைப்போர்கள், நவகாளி இவை ஏற்படுவானேன்?

பலனைத்தர இருக்கும் ஸ்தாபனங்களிலே மதமும் ஒன்று என்று சொல்வதற்கும் ஆதாரம் ஏதும் கிடையாது. அன்பை வளர்க்க, அறிவைக் கற்பிக்க, ஒழுங்கு ஒழுக்கம் இரண்டையும் உண்டாக்க மதம் துணை செய்கிறது என்று சொல்வது பொருந்துவதே இல்லை. குறிப்பிட்டமதம் அன்பை உண்டாக்குகிறது, அறிவை வளர்க்கிறது என்று சொல்வார்களே ஒழிய நான் அன்போடு இருக்கிறேன் அறிவோடு வாழுகிறேன் என்று சொல்பவர்கள் யாருமில்லை. மதத்தைக் காட்டிப் பிழைப்பவர்கள் பிரச்சாரஞ் செய்யும் போது ஒருவேளை கூறலாம். கடவுளைக் காணவேண்டும், கடவுள் படியளக்க வேண்டும் என்பதற்காகத் தான் கடவுளைத் திருப்தி செய்யவேண்டிப் பலர் மதவாதிகளாக இருக்கிறார்கள்.

சிந்திக்க அறிவையும், விளைவிக்க வயலையும், வீடு கட்டி வாழப் பரந்த நிலத்தையும், உழைக்க உடலுரத்தையும் படைத்த கடவுள் மதத்தையும் ஒரு தேவை என

உண்டாக்கினதாகத் தெரியவில்லை. இயற்கை அழகை அனுபவிக்கும் போதும், இசையின் இனிமையைக் கேட்கும் போதும், மலர்ந்த மலரை முகர்ந்து மகிழும் போதும், மனதிற்குகந்த மங்கையோடு இன்ப உரையாடல் நடத்தும்போதும், மத உணர்ச்சி நமக்குத் தோன்றுவதில்லை. ஒரு சிலர் தாமாக அதை வரவழைத்துக் கொள்கிறார்கள். உடனே மதம் இவையெல்லாம் நிரந்தரமா என்ற கேள்வியை எழுப்புகிறது. அதனால் ஏற்படுங் கவலை எதையும் பூரணமாக அனுபவிக்காமல் தடுக்கிறது. மத உணர்ச்சி உண்டாகவில்லை, உண்டாக்கிக் கொள்கிறோம். தானாக் ஏற்படவில்லை, நம்மேல் திணிக்கப்படுகிறது. அற்புதங்கள், லீலைகள், மனமயக்கங்கள் இவைகளைக் காட்டி மயக்காமல் எந்த மதத்தையும் பரப்பினதாக மதவரலாற்றிலேயே காட்டமுடியாது. ஆராய்ச்சிக்கு ஒத்துவராத, அனுபவம் ஏற்றுக்கொள்ளாத மூட நம்பிக்கைகள்மேல் கட்டப்பட்ட எதுவும் நிலைக்காது.

வாழ்க்கையால் மதம் போதிக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடிவதே இல்லை. மதம் ஏட்டளவிலே இருக்கிறதே தவிர நாட்டின் நிலைக்கு ஒத்துவருவதாக இல்லை. கிழிந்த ஆடை கட்டியிருக்கும் பெண் நல்ல சேலை கட்டிக்கொண்டிருக்கும் பெண்ணுக்குப் பக்கத்திலே உட்கார்ந்தால் நல்ல சேலைக்காரிக்குத் தற்பெருமையும், உயர்ந்தவள் என்ற எண்ணமும், கிழிந்த சேலைக்காரிக்குப் பொறாமையும் ஏக்கமும் இயற்கையாகவே ஏற்படுகின்றன. உங்களுக்குப் பிடித்தமான பெண்ணொருத்தி தங்கத்திலே தொங்கட்டான் ஒன்று செய்துபோட்டுக் கொண்டிருந்தால், அதைப்போல ஆயிரம் தொங்கட்டான்கள் வாங்கும் சக்தி உங்களுக்கு இருந்தாலும், உங்கள் மனதிலே ஒரு மயக்கம் உண்டாகும். அந்தத் தொங்கட்டானை ஏழைப் பெண்ணொருத்தி பார்த்தால், அதன்மேல் அவளுக்கு எவ்வளவு ஆசை உண்டாகும்? "இது நமக்குக் கிடைக்குமா? எப்படியாவது இதை அணியவேண்டும்" என்ற ஆசை அவளுக்கு அது கிடைக்கக்கூடிய குறுக்கு வழியான விபசாரத்தைக்கூடக் கைக்கொள்ளத் தூண்டும். அவ

ளிடத்திலே ஆசையை அடக்கு, விபசாரம் பாபம் என்ற போதனைகளுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கும்? பட்டைத் தொட்டு அதன் பளபளப்பைத் தடவிப் பார்த்து அந்தப் பட்டிற்கும் அதை உடுத்தியிருக்கும் உடலுக்கும் உள்ள பொருத்தத்தை எண்ணி எண்ணி மகிழும். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்" என்று பிரச்சாரஞ்செய்யும் ஜீவகாருண்ய சங்கத் தலைவருக்கு அந்தப் பட்டுக்காகக் கொல்லப்பட்ட பட்டுப் பூச்சிகளின் எண்ணிக்கை கவனத்துக்கு வராது. ஆசையைத் தூண்டும் விதம் உலகை வைத்துக்கொண்டு, பலர் அந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் சமுதாய அமைப்பைக் கோளாருக வைத்துக்கொண்டு "ஆசையை அடக்கு" "விபசாரம் பாவம்" என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? வீட்டிலே போடப்பட்டிருக்கும் கூரை விலகி வெய்யிலுக்கும் மழைக்கும் இடந்தரும்போது, கூரையைச் செப்பலிடு என்று சொல்வது அறிவா? அல்லது வெய்யிலுக்கும் மழைக்குந் தகுந்தாற்போல உடலை ஆக்கிக்கொள் என்று கூறுவது அறிவா?

மனிதனுக்கு உண்டாகிற உடல் நோய்கள், கஷ்டங்கள் எல்லாம் ஆண்டவன் செயல் என மதம் கற்பிக்கிறது ஆஸ்பத்திரிக்குச் செல்பவர்களைவிட மாரியம்மனுக்கு வேண்டிக்கொள்பவர்கள் தொகைதான் அதிகம். டாக்டர்களைவிடப் புரோகிதர்கள், மந்திரவாதிகள், பூசாரிகள் தாம் நோயைத் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை நிலைத்து விட்டது. இடியையும் மழையையும் விட ராகுகாலத்துக்கும் எமகண்டத்துக்குந்தான் மக்கள் பயப்படுகிருர்கள்.

பாடுபட்டும் பலன் கிடைக்காத பாட்டாளி. உழைத்து உருக்குலைந்த உழவன், நைந்துபோன வாழ்க்கை நடத்தும் தொழிலாளி அத்தனை பேரும் தங்கள் எளிய நிலைக்கு யார் காரணம் என்று நினைத்துப் பார்க்க முடியாமல் "விதி" "தலையெழுத்து" என்ற வார்த்தைகளைக் காட்டி மதம் தடுக்கிறது. உழைக்காது உல்லாசமாக வாழும், ஏமாற்றியே

பிழைப்பை உண்டாக்கிக் கொள்ளும் ஒரு சிலருடைய வாழ்க்கை பாடுபடுவோர் கவனத்துக்கு வரும்போது "ஏன் அவர்களுக்கு மட்டும் அந்த வாழ்க்கை?" எனக் கேட்க முடியாதபடி "பூர்வ ஜன்ம பாவ புண்ணியங்களின் பலா பலன்கள்" என்ற அர்த்தமற்ற வார்த்தைளால் தடுக்கிறது. மத உணர்ச்சிமட்டு மில்லாதிருந்தால் ஏழை பணக்காரன், அடிமை ஆண்டான், தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதி என்ற எண்ணங்கள் தாமாக மறைந்துவிடும்.

பஞ்சைகள், பரதைகள், வீதியிலே காணப்படும் அனாதைப் பிணங்கள், அகதிகள் இத்தனை பேரையும் சமுதாயம் பார்க்கும்போது ஏற்படும இரக்க உணர்ச்சியை "எல்லாம் ஈசன் செயல்" என்று சொல்லி மதம் தடுத்துவிடுகிறது. தருமம், கருணை என்ற வார்த்தைகளைக் கற்பித்து ஏழைக்குச் சேவை செய்பவர்களை மதம் உண்டாக்கிச் சிலருக்குப் பெருமை உண்டாக்க உதவுகிறதே தவிர, உரிமை பொறுப்பு இவைகளால் ஏழ்மையே இல்லாதபடி செய்வதைத் தடுக்கிறது.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்ற பாடல் பாடும்போது எவ்வளவு வேகத்தைக்கொடுக்கிறதோ அந்த வேகத்தை இழுத்துப் பிடிக்கிறது மதம்; ஒரு பக்கத்திலே கடவுளையும் மறு பக்கத்திலே பெண்ணையும் வைத்து இரண்டையும் இரு துருவங்களாக்கிவிட்டது. கடவுளை அடைய வேண்டுமானால் பெண்ணாசை போக வேண்டும், பெண்ணாசை இருந்தால் கடவுளை அடைய முடியாது என மதங்கூறுகிறது. உருவமும் உணர்ச்சியும் அறிவும் நிறைந்த, மனித சமுதாயத்தில் பாதிக்குமேல் இருக்கும் பெண்களை மண்ணுக்கும் பொன்னுக்கும் சமமாக மதிக்கிறது. ஆண்டவனை அடைவதற்குத் தடை பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு, பிறவி அடிமைகள் என்று நம் தாய்களை, சகோதரிகளை இழிவு செய்கிறது. பாவக்குழி நரகத்தின் திறவுகோல் என்ற உணர்ச்சியை ஆழமாக விதைத்துவிட்டு அது விளைந்து பலன் தரும்போது "தாதர் என்ற நிலைமை மாறி ஆண்

களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே' என்று பாடுவதில் அர்த்தமுமில்லை, அறிவுமில்லை.

திறமை நிறைந்த சிற்பிகளெல்லாம் ஆண்டவன் சிலைகளையும், ஆண்டவன் அவதாரங்களின் உருவங்களையும் செதுக்கித் தங்கள் திறமையை வீணாக்கச் செய்தது மதம். கவிகளின் கற்பனை நிறைந்த மூளைகளை எல்லாம் அர்த்தமில்லாத, அறிவுக்குப் பொருந்தாத மேலுலகத்தைப் பற்றி வர்ணிக்கத் தூண்டி நாட்டின் வளர்ச்சிக்கு உபயோகப்படாமல் செய்துவிட்டது. அறிஞர்கள் அறிவுத் திறமை உலக உயர்வுக்கு உபயோகமாகாமல் தடுக்கப்பட்டது.

பண்பட்ட உள்ளங்களில்தான் மத உணர்வு உண்டாகுமென்றால் எத்தனை பேருக்கு ஏற்பட்டது! ஏன் எல்லோருக்கும் ஏற்படவில்லை? ஆண்டவன் அருள் பெற்ற மதத்தால் பண்பாட்டை உண்டாக்க முடியவில்லை என்றால் ஆண்டவன் அருளுக்கு மதிப்பில்லை என்று அர்த்தமாகும். ஒரு குறிப்பிட்ட நிலை ஏற்பட்டால்தான் மத உணர்வு தோன்றும் என்றால் அந்த நிலையை உண்டாக்கிக்கொள்ள ஏன் எல்லோராலும் முடிவதில்லை? புரோகிதர்கள், மதத்தரகர்கள் சங்கராச்சாரியார்கள், மடாதிபதிகள், காவடிச் சாமியார்கள், ஆனந்தர்கள் இந்தக் கூட்டத்தாரை எல்லாம் உழைக்காத சோம்பேறிகளாக்கி விட்டு, அவர்களுக்காகவும் சேர்த்து உழைக்கும் நிலையைப் பெரும்பாலோருக்கும் உண்டாக்கி நிமிர்ந்து பார்க்க, சிந்தனை செய்ய, பண்பாடு அடைய முடியாத விதம் சமுதாய அமைப்பை வைத்திருப்பதும் மதந்தான்.

"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்", "ஒரே உலகம்", "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்ற ஒற்றுமையை உண்டாக்குஞ் சொற்கள் அறிவாளிகளால் பரப்பப்படுகின்றன. காட்டுமிராண்டிக் காலத்தில் மக்கள் உலகத்தின் பல பாகங்களிலும் சிதறிக் கிடந்தபோது அங்கங்கே ஒழுங்கை உண்டாக்க

மதங்கள் ஏற்பட்டன. இடைக்காலத்தில் மதத் தரகர்களும், புரோகிதர்களும், குருமார்களும அந்தந்த மதக்காரர்களிடம் ஒரு வெறியையும் போதையையும் ஏற்படுத்திவிட்டனர். தங்கள் மதத்தை நம்பாதவர்களை உயிரோடு எரித்தபோது ஏற்பட்ட சாம்பல், இந்து—முஸ்லீம் கலவரங்களிலே ஓடிய இரத்தம், சமணர்கள் கழுவேற்றியபோது எழுந்த அவலக் குரல், இத்தனையையும் பதிகங்களாக, புண்ணிய காரியங்களாக மாற்றிவிட்டனர். ஞானி–அஞ்ஞானி, நம்புபவன்—நம்பாதவன், உயர்ந்தவன்—நீசன், என்ற வார்த்தைகள் சமுதாயத்தில் ஒரு மதிப்பைப் பெற்றுவிட்டன. பணமும், மனமும் செய்த பேதத்தைவிட மதம் செய்த வேற்றுமை எளிதில் மாற்ற முடியாதது. எல்லோரும் ஒன்று, உயர்வு, தாழ்வில்லை, சமம் என்ற வார்த்தைகளெல்லாம் வேற்றுமை உணர்ச்சியை வெளிப்படுத்தும் விடி ஊற்றுன மதத்தை வைத்துக்கொண்டு பேசப்பட்டால் வெறுங் காட்டுக் கூச்சலாக முடியுமேதவிரப் பலன் தரா. பொது சமுதாய உணர்ச்சிக்கு மதம் ஒரு தடைக்கல்.

வீண் போதை, வெறி, முன்னேற்றத்திற்குத் தடை, பயத்தை உண்டாக்கிக்கொண்டே இருக்கும் இயந்திரம். பொறுப்பையும் நம்பிக்கையையும் ஏற்படாமல் தடுக்குங் கருவி—ஆகையால் மதத்தினுல் பலன் ஏற்படாது. சிலருக்குப் பிழைப்பையும் மதக் கர்த்தா என்ற பெயரையுந் தருகிறது என்பதற்காகத்தான் அவர்கள் அறியாமையைய ஆயுதமாக உபயோகித்து மதத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறுர்கள். மதம் உபயோகப்பட வேண்டுமானுல் மூட நம்பிக்கையும் அர்த்தமற்ற பயமும் நீங்கவேண்டும். இரண்டும் நீங்கினுல் மதமே இருக்காது. அச்சு முறிந்து சுக்கல் சுக்கலாகச் சிதறிப்போன வண்டியை மறுபடி செப்பனிட்டுச் சவாரி செய்யக் காத்துக்கொண்டிருப்பதை விடப் புதுவண்டி ஒன்று செய்து நம் பிரயாணத்தை நடத்துவதே நல்லது, அதற்காவன செய்வோம் வாருங்கள் என உலக முன்னேற்றத்துக்காக உழைப்பவர்களைப் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

9

சுப. நாராயணன்

"எல்லார்க்கும் பிடிக்கிற, எல்லார்க்கும் திருப்தியளிக்கிற, எல்லாரையும் சம பாவத்தோடு உறவாடும்படி செய்கிற ஒரு மதத்தை உண்டுபண்ணிவிட முடியுமா? இப்போது உள்ள எண்ணற்ற மதங்கள், எண்ணற்ற சச்சரவுகளுக்கும் மனக் கொதிப்புக்கும், பரஸ்பர விரோதத்துக்கும இடந்தந்து வருவதைத் தடுக்க முடியுமா? மத பக்தனும் பகுத்தறிவு வாதியும் மன ஒற்றுமையோடு வாழ முடியுமா?

"முடியவில்லை. தனிப்பட்ட விசேஷம் ஒவ்வொரு மதத்திலும் இருக்கலாம்—இருக்கிறது. ஆனால், மொத்தத்தில் மதங்களால் விளைந்த நன்மைகளைவிடத் தீமைகள்தாம் அதிகம் என்றே சொல்லவேண்டும்.

"மதம் என்றதுமே, மனித சக்திக்கு அப்பாற்பட்டது, தெய்வீகமானது, அற்புதங்களைச் செய்து முடிப்பது என்ற எண்ணந்தான் நம் மனத்தில் உண்டாகிவிடுகிறது. பகுத்தறிவது என்ற விஷயத்தை மதத்தோடு சம்பந்தப்படுத்துவதே பாவம், அக்கிரமம் என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. ஆனாலும், சமீப வருஷங்களில் மத விஷயமாய் ஓரளவு தாராள மனப்பான்மை உலகமெங்குமே தோன்றத் தொடங்கிவிட்டது. மக்கள்மேல் முன்பெல்லாம் மதத்துக்கு இருந்துவந்த கடுமையானபிடி, சன்னஞ் சன்னமாகத் தளரவாரம்பித்துவிட்டது.

"மதம் என்பது, முன்பெல்லாம், வெகு கடுமையானது. ஈவிரக்கமற்ற, வாழ்க்கைச் சட்டமாகக் கொள்ளப்பெற்று, பயபக்தியுடன பின்பற்றிவரப் பெற்றது. இப்போது அப்படி அல்ல. மதம் என்பது, ஜாதிக் குறிபோலவே, வெறும் பெயர் அளவிலேயே இருந்து வருகிறது. மதச் சட்டங்களைப் பெரும்பாலார் அனுசரிப்பதே இல்லை. ஏன் அனுசரிக்கவில்லை என்று கேட்பாருமில்லை. அரசியல், பொருளாதார விவகாரங்களுக்குக் கட்சி திரட்டுவதற்கே அது இன்று உபயோகிக்கப்பட்டு வருகிறது.

"மதம் என்றால் என்ன என்று எத்தனையோ தடவை வியாக்கியானம் செய்தாயிற்று. மெய்யாக, மனமார ஒருவர் பின்பற்றி ஒழுகும் மதம் எது? அந்தரங்க பூர்வமாய்த் தன்னைத் தானே சோதித்துப் பார்த்து, உலகத்துக்கும் தனக்கும் உள்ள சம்பந்தம் இன்ன மாதிரியானது, தான் இன்ன மாதிரி நடந்து கொள்வதுதான் நிரம்ப நல்லது. வாழ்க்கையைச் சரியாய் அனுபவித்து மகிழ, தான் இனனபடி நடந்து கொள்ளவேண்டும்—என்று கண்டு, ஒருவன் தனக்கென வகுத்துக்கொள்ளுகிற வாழ்வு நெறிதான் மதம்.

"வெறும் அனுபவத்தைக்கொண்டு மட்டும்வாழப் பழகுவது போதாது; நம்மை மீறியும் எவ்வளவோ காரியங்கள் நடந்துவிடுகின்றன. மனித அறிவு குறுகிய வரம்புக்குட்பட்டது; இதைக் கொண்டுமட்டும் வாழ்வு நெறியை வகுத்துக்கொண்டு இன்பமாக வாழ்வது இயலாது—என்று மத போதகர்கள் வாதிப்பார்கள். ஒவ்வொருவரும் – தத்தம் சொந்த அனுபவத்தில் முதிர்ந்தவர்கள் வைத்துவிட்டுப்போன கலை, நாகரிகம், சிந்தனை, அனுபவம் இவற்றைக் கொண்டு, எல்லார்க்கும் ஒத்துவருகிற ஒரு வாழ்க்கை முறையை வகுக்க முடியும். இதில், அந்தராத்மாவுக்கோ, தெய்வ சங்கல்பத்துக்கோ, பூஜாபலனுக்கோ, முன் ஜன்மத் தொடர்பால் வந்த பாப புண்ணியத்துக்கோ, இடமிராது. பொது அறிவுக்கும், பகுத்தறிவுக்கும் ஒவ்வாத விபரீதப் போக்குகளும் வீரப் பிரதாபங்களும், ஏச்சும்

பழிப்புகளும் இதில் இடம் பெரு. சராசரி மனிதனுக்கு உகந்த ஒழுக்கநெறி முறைகளும், இப்போது நாம் நல்லதெனக் கொள்கிற நியதியை வைத்துக்கொண்டே, இதனினும் மேம்பட்ட நியதி ஒன்றை ஏற்படுத்த உதவுகிற வாழ்க்கை முறையாக இருக்கும்.

"இப்படி, சர்வ சம்மதமான ஒரு மதம் ஏற்பட முடியுமா? இம்மாதிரியான ஒரு மதம் உருவாகிக் கொண்டுவரவே செய்கிறதானலும், சமீபத்தில் இது பூரணமாய் ஏற்பட முடியாதுதான ஒவ்வொரு மதத்திலிருந்தும் ஒவ்வொரு அம்சத்தை எடுத்துச் சேர்த்துப் புதிதாக ஒரு கதம்ப மதத்தை உண்டாக்கி விடுவதால் யாதொரு பயனும் இல்லை. ஒரு மதத்தைவிட்டு இன்னெரு மதத்தில் புகுவதாலும் துளி நன்மையோ ஆத்ம திருப்தியோ இல்லை. பகுத்தறிவு இயக்கங்களால், மதக் கொடுங்கோன்மை உலகம் பூராவுமே வெகுவாக ஒழிக்கப்பட்டு வருகிறது. எல்லோரும ஓரளவுக்கு, பகுத்தறிவுவாதிகளாக மாறிக்கொண்டு வருகிருர்கள். தீவிர மதபக்தர்களும் கூடத் தாம்செய்வது இன்னது இதைச் செய்வதால் இன்ன நன்மை உண்டு என்று யோசித்துப் பார்க்கும் பழக்கம பெற்று விட்டார்கள. மதம் வேண்டாம் என்ருல் கடவுள் இல்லை என்று அர்த்தமில்லை. அப்படிக் கடவுள் இல்லை என்ருலும், அதனல் ஒருவன் அயோக்கியனய்விட மாட்டான்—என்ற சமரச மனப்பான்மை எங்கும் பரவிவிட்டது. அரசியல், பொருளாதாரச் சிக்கல்கள் வரும்போதுதான் மதவெறி கிளம்பி விடுகிறது. பலபேரைச் சிலபேர் அடக்கி ஒடுக்கி வைத்திருக்கவேண்டும் போதுதான் மதத்தின் பிடி தேவைப்படுகிறது.

"இதுவரை நடைமுறையில் இருந்து வந்த மதங்களும், இன்று நடைமுறையில் இருந்து வரும் மதங்களும் எவ்வளவோ மாறுதல்களையும், புதுப்புது வியாக்கியானங்களையும் பெற்று வருகின்றன. மதக் கோட்பாட்டுக்காகச் சண்டை இடுவது இப்போது அதிகமாக இல்லை.

"மனிதனைப் பயமுறுத்தாமல்; நரகம், பிராயச்சித்தம் என்றெல்லாம் சொல்லி ஏமாற்ருமல்; இன்னது சரி, இன்னது தப்பு; இன்னபடி செய்வது நல்லது, இதனால் பலனுண்டு; இன்னபடி செய்வது தப்பு, இதற்குத் தண்டனை இன்னது என்று சொல்லி, மனிதனைப் பகுத்தறிந்து, அன்பு முறையில் வாழப் பழக்கி கொடுக்கும் சர்வ சம்மத மதம் ஒன்று நம் எல்லாரிடையேயும் இருந்து வரவே செய்கிறது. இது இன்னும் நன்ருக உரம் பெற்றுப் பரவிவிட வேண்டும். அதற்குக் கல்வி அறிவும், வாழ்க்கை வசதிக்கான பொருளாதாரச் சுதந்தரமும் ஒவ்வொருவருக்கும் முட்டின்றிக் கிடைக்க வேண்டும். கிடைப்பது எப்போது?......"(கிராம ஊழியன், 16—10—49) —என்று முந்தி எழுதினேன்.

மதம் வடசொல். இதை அறிவது முக்கியம். ஏன்? மதத்தில் வடக்குத்தனம் - ஆரியத்தனம் - பார்ப்பனத்தனம்-மண்டிச்செறிந்து போனதனுலேயே மதமானது மக்களை மடையர்களாக்கி மக்கவைக்கிற மாய்மாலமாக மாறிப்போயிற்று. வடமொழிப்பொருளின்படியும்மதம்என்பது கொள்கைதான். ஆதாரம்;— நன்னூல் (தொல்காப்பியத்துக்கு அடுத்தபடி முக்கியமான தமிழ் இலக்கண நூல்) இயற்றிய பவணந்தி முனிவர் (சமண சமயி) "எழுவகை மதமே: உடன்படல், மறுத்தல்—பிறர் தம் மதமேற் கொண்டு களைவே,—தா அனுட்டித் தனது நிறுப்பே,— இருவர் மாறுகோள், ஒரு தலைத் துணிவே, —பிறர் நூல் [நூல் என்பதை இங்கே நாம் "சமயம்" —"மதம்" என்று கொள்ளலாம்] குற்றங்காட்டல், ஏனைப்—பிறிதொடு படாஅன் தன மதங்கொளலே," என்கிருர். (பொதுப்பாயிரம் சூத்திரம். 11)

கொள்கையில்லாமல் வாழ முடியாது; வளர்ச்சி இல்லை. அறிவு பெருகப் பெருக முன்னேற்ற ஆவலும் பெருகுகிறது. இருக்கிற நிலையைச் செம்மைப்படுத்தி, அதற்கு மேம்பட்ட நிலையை அடையக் கடைப்பிடித்து ஒழுகி வருகிற வாழ்வு நெறியே கொள்கையாகிறது. நமது வாழ்க்கை இலக்கு உயர உயர நம்முடைய கொள்கையின் தன்மையும், போக்கும் உயர்ந்து விரி

வடைகின்றன. கொள்கையேயில்லாதவன் மனிதனல்ல; வெறும் உயிர்ப்பிணம். கொள்கை — மதம் — இல்லை என்று சொல்கிறவர்களும் ஏதாவது ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வரவே செய்கிறார்கள். கொள்கை பிசகலாம்; தெளிவற்றிருக்கலாம்; எண்ணிய பலன் தராமல் போகலாம்; இடர் விளைக்கலாம்; பிறருக்குத் தீங்கு சூழலாம். அது யார் குறை? நம் குறை. கொள்கையை வகுத்துக் கொண்டவன் குறை.

எல்லாம் தெரிந்தவர் யாருமில்லை. ஏதும் தெரியாதவரும் யாருமில்லை. எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அறிவால் அறிந்த அனைத்தையும் செயலாக்க முடியாது—இதுவரை எவராலும் முடிந்ததாகத் தெரியவில்லை. அறிவால் வகுக்கும் திட்டம எந்த அளவுக்குச் செயலாக மாறிப் பயன் தருகிறது என்பதைப் பொறுத்தே எந்தமதமும் மக்களுக்கு வாழ வழிகாட்ட முடியும்.

காலம், இடம், சூழ்நிலை, பண்பாடு முதலியவற்றைப் பொறுத்து மதத் தத்துவங்களும், கோட்பாடுகளும மாறுபடுவது இயல்பு — விரும்பத்தக்கது. இவற்றைச் சமன் படுத்துவது, குழப்புவது, இடம் பெயர்ப்பது, மொழி பெயர்ப்பது போன்ற செயல்களால் அடிப்படையே மாறிப்போகவும் கூடும். அப்படிப்பட்ட மாறுபாடுகளால், சைவம், பிராமணம், சமணம், பௌத்தம், வைஷ்ணவம் ஆகியவை கலந்து குழம்பிப்போய்ப் பார்ப்பனீயச் சடங்குப் பாத்திரத்தில் ஆரியப் புராண வண்டலிட்டுக் கிடப்பதுதான் நம்முடைய ஹிந்து மதம். இதில் சைவத்தின் இனிமை; சமணம், பௌத்தத்தின் நேர்மை; பிராமணத்தின் ஆடம்பரம்; வைஷ்ணவத்தின் வெறி இவற்றை இன்றளவும் காண முடிகிறது. இயற்கை வளமுள்ள நாட்டில் வாழ்ந்த மக்களின் பண்பாடும் அவர்களை அடுத்துக்கெடுத்த வடவரின் ஆக்ரமிப்புக் காட்டுமிரண்டித்தனமும் இந்த மதத்தில் கலந்து குழம்பிக் கிடப்பதைக் காணலாம்.

நாவலந் தீவாயிருந்து இந்தத் தமிழ் நாட்டிலிருந்து போன மத அறிஞர்களே ஏசுநாதரும் முகமதுநபியும்

என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்வது மெய்யென்றே எனக்குப் படுகிறது.

சைவ ஆகமங்களின் சில பகுதிகளைச் சாரமாக்கிப் புது மெருகிட்ட ஆரியக் கண்ணன் போதித்த கீதையைப் பின்பற்றிச் செல்லும் மேற்குக் கிருத்துவர்கள், தமது பண்படாத முரட்டு இயற்கைக்கு ஒத்தபடி கிருத்துவ மதத்தை மாற்றியமைத்துக் கொண்டார்கள்.

கிருத்துவ வேதத்தைப் பெரிதும் பின்பற்றிப் போதித்து வந்த முகமது நபியின் குரானைப் பாலை வனங்களில், காட்டுமிராண்டிகளாய்த் திரிந்த அரேபியர்கள் தமது முரட்டாட்டத்திற்கும், வெறி வாழ்கைக்கும் உகந்தவாறு பயன் படுத்திக் கொண்டார்கள்.

சைவப்பண்பாடு பெரிதும் செறிந்த சீனர் முதலிய கீழை நாட்டார் கன்பூசியம், தாவோயியம் ஆகிய மதங்களை இயற்கைப் போக்கின்படி மேற் கொள்ளலானார்கள்.

ஒருவனுடைய பண்பாட்டைப் பொறுத்தே அவனுடைய மதம் — வாழ்வுக்கொள்கை — அமையும். மிருக பலம் பாமரப் பெரு வெள்ளத்தை எப்போதும அது வகுத்த வாய்க்காலிலேயே இட்டுச் செல்லும— செல்ல முடியும். அறிவுப் பலம் அறிஞரை வசப்படுத்தும். அதனாலேயே கத்தி முனையில் மதம் மாற்றி வந்த இஸ்லாமும் குண்டுப் புகையில் மதமாற்றி வந்த கிருத்துவமும், சைவத்தின் அசைக்க முடியாத அடிப்படையில் கட்டப் பெற்ற ஹிந்துக் குட்டிச் சுவரையும், கன்பூசியப் பெரு வெளியையும் இன்றைக்கும் தமது இருப்பிடமாகக் கொண்ட கிட்டத்தட்டத் தொண்ணூறு கோடி (உலக மக்கள் தொகையாகிய 225—ல் மூன்றில் ஒரு பங்குக்குமேல்) மக்களின் மனத்தை மாற்ற முடியவில்லை, அதற்கு மாருக, இவை அவற்றின், அவர்களின் கனிவைப் பெற்றுள்ளன.

மதம் பழுதானல், அதை மாற்றி யமைக்கலாம், மதமே வேண்டாம் என்பது சரியல்ல.

கடவுள் இல்லை என்று யாரும் நிரூபிக்க வில்லை—நிரூபிக்க முடியவில்லை. கடவுள் உண்டு என்கிறவர்கள் ஓரளவு குறிப்பாவது காட்டுகிறார்கள். அற்ப அறிவு படைத்த நாம் நம்மையே கடவுள்கள் என்று கூறிக் கொள்வது வெறும் பேதமை. நம் மனச்சாட்சிப்படி நாமே நடக்க முடியாத — மனமில்லாத — நாம் அனை வரும் பேரறிஞர்களல்ல. பேரறிஞர்களே சரியாய் அறிய முடியாத பெரும் புதிர்களைச் சிக்கறுக்க நாம் எல்லோரும் கிளம்பி விட்டால், வாழ்வுக் கயிறு தும்பு தும்பாய் அறுந்து விழுந்து போகும்.

இன்று அப்படித்தான் ஆய்விட்டது. ஒவ்வொரு வனும் கடவுளாய் விட்டான். சமத்துவம், சுதந்திரம சகோதரத்துவம், தத்துவம் மதம், ஒழுக்கம், உண்மை நன்மை எல்லாம் காங்கிரஸ் சுயராஜ்யத்தில் தமிழும் தமிழனும் பட்டபாடாய்ப் படுசங்கர ஜாதித்தனமாய்ப் போய்விட்டன.

சென்னை மந்திரிகளின் ஆட்சியில் மக்கள் நரக வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதற்காக எந்தவிதமான ஆட்சியுமே வேண்டாம் என்று சொல்லலாமா? சில பதடிகள் மனைவி மக்களின மானத்தை லஞ்சம்கொடுத் துச் சமுதாயத்தை விபசாரப் பண்ணையாக்குகிறார்கள் என்பதற்காகக் காமமே உதவாது என்று சொல்ல லாமா? கள்ளச் சந்தை மிருகங்கள் நாட்டைச் சூறை யாடிச் சுடுகாடாக்குகிறார்கள் என்பதற்காகப் பணமே வேண்டாம் என்று சொல்லலாமா? மதமோ கொள் கையோ, சொந்தப் புத்தியோ இல்லாமல் அரசியல் சந்தர்ப்ப வாதிகள் நாட்டையும், மொழியையும், மக்க ளையும் துரோகக் கும்பலுக்கு அடிமைப்படுத்துகிறார்கள் என்பதற்காகக் கட்டுப்பாடு, லட்சியம், அஞ்சுவது அஞ் சும் பண்பு முதலியவை தேவையில்லை என்று சொல்ல லாமா?

இல்லை. அப்படிச் சொல்லக்கூடாது. காலமாறு தலுக்கேற்ப மதமாறுதலும் வேண்டும். மதவாதிகள் மடையர்களல்ல. மனத்தாலோ, அறிவாலோ அறிய

முடியாத கடவுள் என் சொந்த விஷயங்களில் தலையிடு வார் என்று எதிர்பார்க்கிற நான் தான் மடையன். மதத்தின் பேரால் என்னை மடையனாக்கிய அயோக்கி யனை நான் ஒழித்துக்கட்ட வேண்டும. கடவுளும் கட வுளைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து, அறவுரைகள்கூறி எனக்கு வாழவழி காட்டுகிற பெரியார்களும் நம்மி லிருந்து வந்தவர்களே—நம்மைச் சேர்ந்தவர்களே — நாமும் அவர்களும் இனமானவர்களே. இவர்களைப் பரம்பரைச் சொத்துக்களாக நினைத்துக்கொண்டு பித்த லாட்ட அதிகாரம் பண்ணுகிற கயவர்களுக்குப் புத்தி வரும்படி செய்வதோடு, நம்முடைய இன மனிதர்களும நம்மைப்போல் வாழ்க்கையில் ஒத்த வாய்ப்புகளைப் பெறுவதற்கான முறையில் நமது நபரியல், சமூகவியல் பொருளியல், அரசியல், சமயவியல் முதலியவற்றைச் செப்பம் செய்து, பொதுமக்களிடையே கடமை, உரிமை உணர்ச்சிகளைப் பெருக்கவும் செய்ய வேண்டும்.

சீரழிந்த மதங்களைத் திட்டுவதானது அவற்றைச் சீரழித்தவர்களைத் திட்டுவதாகவே ஆகும். அது சரி தான். இயற்கையை ஒட்டி, அதை வென்று மேலே போகவேண்டும். அதற்கு மதமும் பகுத்தறிவும் அவ சியம் இருந்தாக வேண்டும். மதம் கொள்கை-நம்பிக்கை உணர்ச்சி—செயல்—பகுத்தறிவு-சிந்தனை-சந்தேகம்—அறிவு திட்டம.

இன்று, சரியான பகுத்தறிவு மதம் நாட்டிலே நிலையான இடம் பெறுவது முக்கியம். இல்லாவிட்டால் மதவாதிகளும், மத எதிர்ப்பு வாதிகளும் தமக்குள்ளே இனம் தெரியாமல், இருட்டில், கட்டிப்புரண்டு நாட்டை யும் நாட்டு மக்களையும் கிலிபிடித்து நடுநடுங்கச்செய்து விடுவார்கள்.

மனித நல்வாழ்வுக்கு நவை தீர்ந்த நல்ல மதம் அவசியம் என்றே நான் நம்புகிறேன்.

10

கே. ஜி. இராதாமணாளன்

வளமானநாட்டில் எரிமலை இருக்கத்தான் வேண்டுமா? பூகம்பம் உலகில் அடிக்கடி ஏற்படுவது அவசியமா? விஷப்பாம்பை வீட்டில் வைத்து, பால்ஊற்றி வளர்க்க வேண்டுமா? உண்ணும் உணவில் நஞ்சு கலத்தல் நல்லதா? ஆற்றிற்கு அழகு முதலைகளிருப்பதா? பெண்ணின் அணிகலம் விபசாரமா?

இந்தக் கேள்விகளுக்கு யாது பதில் அளிப்பீர்? வேண்டாம், அவசியமில்லை, நல்லதல்ல, ஆபத்தானது கண்டிக்கப்பட வேண்டியது, இப்படித்தானே உங்கள் பதிலிருக்கும்! இதே கேள்விகளின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டியது 'மதம் அவசியமா?' என்ற கேள்வியுமென்று நான் கருதுகிறேன்!

கருதுகிறேனென்றால், கற்காமலோ, ஆராயாமலோ அல்ல. கற்றேன், மதத்தின் தத்துவார்த்தங்களை அல்ல—அதைச் செய்யத்தான் வேறொரு கூட்டமிருக்கிறதே — மதத்தின் பெயரால் பல ஆயிரம் ஆண்டுகளாக நடைபெற்ற கொடுமைகளை, அநீதிகளை! கொடுமைகளும், அநீதிகளும் தான் உன் கண்களுக்குப் புலப்பட்டதா என்கிறீர்களா? இல்லை, நன்மையும் இருக்கக் கண்டேன்! நன்மை எள், கொடுமை இமயம்! இது தான் நான் கண்டது!

"மதம் அவசியமா?" என்ற கேள்வி, இன்று நேற்று எழுந்தது அல்ல. மதம் எப்பொழுது உண்டாக்கப்பட்டதோ அப்பொழுதே பிறந்த கேள்விதான் இது. ஆனால் அப்படிக் கேட்டோர் தொகை மிக மிகக் குறைவு! மதம் அரசாங்கத்தின் ஆதரவு பெற்றதும் இக்கேள்வி அறிஞர் பலரின் உதட்டின் அளவோடேயே நின்றதே ஒழிய வெளியே வரவில்லை, அச்சத்தின் காரணமாக!

அப்படித் துணிந்து கேட்டவர்களை நாத்திகர்களென்று அழைத்தார்கள். தண்டித்தார்கள்.

நாத்திகம் என்ற பதம் முதல் முதல் ஆங்கில இலக்கியங்களில் காணப்பட்ட காலம் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அன்றே, லா மெட்ரீ. வான்ஹோல் பாக், பூயூர்பாக் போன்ற அறிஞர்கள் மதத்தின் ஆபாசக் கருத்துக்களை விளக்கினார்கள். மக்களுக்கு எடுத்தும் கூறினார்கள். அவர்களுக்கு உலகம் அளித்த பரிசு பழிச்சொல்லும், தண்டனையும் தான்!

"சூரியனும், பகலும் எப்படி உண்மையோ அப்படியே கடவுள் இல்லை யென்பதும் உண்மை! நம் எதிரி கடவுள். கடவுளை வெறுக்கத் தொடங்குவது அறிவு வளர்ச்சியின் ஆரம்பம்!" இது ஈரோட்டிலோ, காஞ்சீபுரத்திலோ எழுந்த ஒலியல்ல! ஆங்கில நாட்டில், அறிஞர் பியூர்பாக் அன்று மனித சமூகத்தின் நலன்கருதி எழுப்பிய சங்கநாதம்!

அடிக்கடி பல அறிஞர்கள் மதத்தினால் ஏற்பட்ட கேடுகளைக் குறித்தும், மதத்தை ஒழித்தால்தான் மனிதன் நல்வாழ்வு வாழ முடியுமென்றும் கூறி வந்திருக்கிறார்கள், பலர் நூல்களைத் தீட்டியுமிருக்கிறார்கள். ஹோல்பாக் பிரபு என்பவர் தீட்டிய "நாத்திகர்களின் பாடப் புத்தகம்" என்ற ஆராய்ச்சி நூல், லண்டனில் 1859 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இப்படியெல்லாம் பலர் எழுதியும் பேசியும் எப்படி மதம் வளர்ந்தது என்று கேட்கத் தோன்றும் பல

ருக்கு: மதம் தனிப்பட்ட நபர்களின் பிரச்னையாக இருந்திருந்தால், எப்பொழுதோ அது அழிந்தொழிந்திருக்கும். வஞ்சகத்தில் கைதேர்ந்த மதத் தலைவர்கள், அரசர்களின் ஆதரவைப் பெற்று, அரசியலையும் மதத்தையும் ஒன்றாகப் பிணைத்துவிட்டார்கள். மன்னர்கள் மதக் குருக்களின் மகிமையில் சொக்கினார்கள். அரண்மனைகளில் மதம் உலவத் தொடங்கியது. அரசனின் செல்வாக்கைப் பயன்படுத்தி, ஏதுமறியா மக்களை மதப்பலி பீடத்தில் சாயும்படி செய்தார்கள், மதப்போதகர்கள்.

அப்படி மதச் சேற்றில் சிக்கிக்கொண்ட மனித சமுதாய வண்டி, இன்ப வாழ்வு. உரிமை வாழ்வு என்ற நல்ல நிலத்திற்கு வர முடியாமல் சேற்றில் சிக்கியது, சிக்கியபடியே இன்னும் இருக்கிறது. சேற்றில் சிக்கிய வண்டியினின்றும் சிலர் குதித்துச் சேற்றையும் கடந்து வெளியே வந்து, மற்றவர்களையும் அவ் வண்ணமே வரும்படி, அன்போடு இருகை யேந்தி அழைக்கிறார்கள். வண்டியைவிட்டு வரத் தைரியமின்றிப் பலர் தத்தளிக்கிறார்கள். அவ்வண்டி—நமக்கு வேண்டாம், புதுவண்டி —புதிய சமூகம் — செய்து கொள்ளலாம் வாருங்கள் என்று தைரியம் கூறுகிறான், சுயமரியாதைக்காரன்!

பலநாட்டு வரலாறுகளைப் படிக்கும்பொழுது, மதத்தின் பெயரினால் மார்க்க போதகர்கள் மக்களுக்கிழைத்த கேடுகளை நோக்கும்பொழுது, நம் உள்ளம் பதைபதைக்கின்றது.

ருஷிய நாட்டில், 1917ஆம் ஆண்டு வரை மதமும் அரசாங்கமும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருந்தன. மதக் குருக்கள், கடவுளின் பெயரைக் கூறியும், மதத்தின் பெயரைக்கூறியும் மக்களைச் சுரண்டி வந்தார்கள். அச்சுரண்டலுக்கு அரசாங்கமும் உதவி செய்தது. மதக்குருக்களுக்கு அரண்மனையில் மிக்க செல்வாக்கிருந்தது.

ஜார் மன்னனும், மதத் தலைவர்களும் ஏழைகளின் உழைப்பில், அவர்கள் கொட்டிய வியர்வையில், சிந்திய

இரத்தத்தில், கோலாகலமாக வாழ்ந்து வந்தார்கள். மன்னனும் மதக் குருக்களும் மலர்முகவதிகளின் புன்னகையில் சொக்கி, அவர்கள் தந்த மதுவைக்குடித்து முத்தத்தைச் சுவைத்து, அணைப்பில் திளைத்து, போகத்தில் புரண்டுகொண்டிருந்தனர்.

நாட்டிலிருந்த நிலத்தில் மூன்றில் ஒரு பாகம் மத ஸ்தாபனங்களுக்குச் சொந்தம். அந்நிலத்தின் வருஷ வருமானம் ரூ. 65,62,50,000 (500000000 ரூபிள்கள்)

1905 ஆம் ஆண்டு கஷ்டங்களைத் தாங்க மாட்டாமல், ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் ஜார் மன்னனிடம் முறையிடுவதற்காக அரண்மனைக்குச்சென்றார்கள். இராணுவம் அவர்களைச் சுட்டது. ஆயிரக் கணக்கில் மக்கள் மாண்டனர். அரண்மனையின் முன்பு இரத்த வெள்ளம் ஓடியது.

இந்தக் கோரக் காட்சியைக் கண்டபிறகு பரிசுத்தமான மதபீடம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. "பரமனின் குழந்தைகளே, பதைபதைத்து உயிர்விட்ட உங்களுக்காக மிக மிக வருந்துகிறோம். அடாத செயல் புரிந்தான் மன்னன். ஆண்டவன் அவனைத் தண்டிப்பார். கவலையை விடுங்கள்!" என்றிருந்ததா அந்த அறிக்கையில்? இல்லை! இரக்கமற்ற புலியுள்ளம் படைத்த மதக் குருக்கள், மக்களை மன்னன் வேட்டையாடியதை, எலிவேட்டை யென்றெண்ணி மகிழ்ந்தார்கள். ஏழைகள் வருத்தப்படுவது கடவுளின் விருப்பம். இருப்பதைக் கொண்டே அவர்கள் திருப்தியடைதல் வேண்டும். பணக்காரர்களைக் கண்டு பொருமைப்படுபவர்களைக் கடவுள் பாபிகளாகக் கருதுகிறார். இவ்வுலகில் கஷ்டப்படுவதற்காகவே பிறந்தவர்கள் ஏழைகள்" இதுதான் அந்த அறிக்கையின் சுருக்கம்!

மக்கள் கொதித்தனர். கொதிப்பில் பூத்தது புரட்சி. புரட்சிக்காரர்களைப் பிடித்துத் தருவதில், இரகசியப் போலீஸாருக்குப் பாதிரிகள் உதவி செய்தார்கள். எனினும் முடிவில், மதக் குருக்கள் மண்டியிட்டு

தோல்வியை முத்தமிட்டனர். மதஸ்தாபனத்தின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ருஷ்ய மக்கள் இன்று மத விலங்குகளை உடைத்தெறிந்துவிட்டு, இன்பபுரியில் வாழ்கிறார்கள்!

மதத்தின் பெயரினால் மனிதரை மனிதரே பலியிட்டனர். மெக்சிகோவில் ஆண்டுதோறும் 20 000 முதல் 50,000 வரை நரபலி கொடுக்கப்பட்டதாக பிரிஸ்காட் என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். மக்களின் நலத்திற்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் மதம் மக்களின் மனமாசைப் போக்க உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மதம். மக்களின் உயிரையும் ஏராளமாகக் குடித்திருக்கிறது.

மதம் அறிவுக்கு முட்டுக்கட்டையாகியது. அறிஞர்களின் ஆவியைப் போக்கியது. விஞ்ஞானிகளுக்கு விஷம் தந்து கொன்றது!

பகுத்தறிவைச் சிறிது பரப்பத் தொடங்கிய விக்ளிப் பற்பல தொல்லைகளுக்கு ஆளானார். விக்ளிப்பின் வழியைப் பின்பற்றிய ஜான்பாட்ளியை 1410 ஆம் ஆண்டு நெருப்பில் தள்ளி, சாம்பலாக்கியது மதம்.

பார்த்தலோமியோ லிகேட், ஏசுவின் பக்தர். எனினும் பைபிளுக்குப் புதுஉரை கூறத் தொடங்கினார். பாதிரிகள் சீறினர். 1611 ஆம் ஆண்டு லிகேட் நடு வீதியிலே தீயில்போட்டு, பொசுக்கப்பட்டார்.

தாமஸ் உல்ஸ்டன் என்பவர் பழுத்த ஆத்திகர். ஏசுவின் அற்புதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து, அவைகளை அப்படியே உண்மை நிகழ்ச்சிகள் என்று நினைப்பது கூடாதென்று கூறினார். மதம் சீறியது. ஆயுள் தண்டனை பெற்று, 1733 ஆம் ஆண்டு சிறையிலே உயிர்விட்டார், உல்ஸ்டன்.

மதம் கலிலேயோவைத் தண்டித்தது. சாக்ரடிஸுக்கு விஷத்தைக் கொடுத்தது. மதச் சீர்திருத்தவாதிகள்,

ஜான்ஹஸ், ஜார்டினோ புருனே ஆகியோரை உயிரோடு தீயி லிட்டுப் பொசுக்கிக் களித்தது மதம்.

இப்படியாக அறிவும் ஆராய்ச்சியும் நிறைந்தவர்களை மேல்நாடுகளில் அடிக்கடி தண்டித்து வந்தனர். அறிவு பரவினால் தங்கள் ஆட்சி எங்கு ஆட்டம் கொடுத்து விடுமோ என்று அஞ்சிய மதக்குருக்கள் இளம் பெண் களைக் கன்னி மாடத்தில் அடைத்து, அவர்களது உணர்ச்சியை அடக்கி, இளமையைப் பாழ்படுத்தியது மதம்.

ஆராய்ச்சியென்ற புயல்வீசினால் மதமென்ற பழைய கட்டிடம் சிதைந்துவிடுமென்று அஞ்சிய மதபோதகர் கள், புயல்வீசாமல் பார்த்துக்கொண்டனர்.

மேல் நாடுகளில் மதம், மனித சமுதாயத்திற் கிழைத்த இன்னல்களைச் சிறிதுபார்த்தோம். இனி நம் நாட்டிற்கு வருவோம். நம் நாட்டை எண்ணும்போதே சித்தம் சோர்கிறது! நெஞ்சம் கொதிக்கிறது! மேல் நாடுகளிலோ மதத்தின் பெயரினால் அரசனின் செல் வாக்கினால் மதத் தலைவர்கள் கொடுமை செய்தார்கள். தமிழகத்தில் மன்னர்களே நேரடியாக மக்களுக்குத் துரோகம், கேடு, அநீதி ஆகியவற்றைச் செய்தார்கள் மதத்தின் பெயரினால்.

புரோகிதர்கள் ஆட்டியபடி ஆடிய மரப் பொம்மை கள் தமிழ்நாட்டு மன்னர்கள்! ஒவ்வொரு மன்னனும் மதவெறி பிடித்தலைந்தான்!

கி. பி. 1134-ல் பட்டத்திற்கு வந்த இரண்டாம் குலோத்துங்கன் பழுத்த சிவபக்தன். சைவப்பித்துப் பிடித்து, தில்லையிலிருந்த வைஷ்ணவர்களைத் தண்டித்து திருமால் கோயில்கொண்ட திருச்சித்திரகூடத்தை அழித்து அக் கோயிலிலிருந்த திருமாலின் சிலையைக் கடலில் எறிந்துவிட்டு, தில்லையம்பலத்தின் 'திரு முற் றத்தை' இடம் பெருகச் செய்தான்.

சிவன் கோயில்களுக்குக் குடிகளிடம் வசூலித்த வரிப்பணத்தை வாரி வாரித் தானமாக அளித்தான். இன்னும் தமிழர்களுக்கே கேடு விளைவிக்கும் ஆபாசக் கருத்துக்களைக் கொண்ட பெரிய புராணத்தைச் சேக்கிழாரைக்கொண்டு எழுதச் செய்ததும் இம் மன்னன்தான்

மூன்றும் குலோத்துங்க சோழன் பட்டத்திற்கு வந்தான். இவனும் இரண்டாம் குலோத்துங்கனுக்கு எந்த விதத்திலும் பக்தியில் குறைந்தவன் அல்லன். இவன் காலத்தில், வெள்ளப் பஞ்சம், மழையின்மையால் ஏற்பட்ட வரட்சிப் பஞ்சம ஆகிய பஞ்சங்கள் வந்து மக்கள் பசியினால் புழுககளைப்போல் துடிதுடித்து இறந்தார்கள். மகேசுவரனின் மகிமையில் சொக்கிய மன்னனின் திருவிழிகள் பதைபதைக்கும் தன் குடிகளின் பக்கம்திரும்பிக்கூடப் பார்த்ததாகத் தெரியவில்லை.

மன்னன் கோயிலுக்கும் மடத்திற்கும் பணத்தை அள்ளியள்ளி வழங்கி அகமகிழ்ந்தான். அந்தப் பஞ்ச காலத்தில்தான் காசுக்கு முந்நாழி நெல்விற்றதென்றும் வேளாளன் ஒருவன தன் மக்கள் இருவருடன் 110 காசுக்குக் கோயில் மடத்திற்கு அடிமையானான் என்றும் திருப்பாம்பரச் சாசனம கூறுகிறது.

இக் கொடிய காலத்தில் வறுமையில் சிக்கிய பெண்கள் தம்மைக் கோயிலுக்கும் மடத்திற்கும் விற்றுக்கொண்டு, "தேவரடியார்" ஆயினர். கோயிலும் மடமும் இளம் பெண்களைப் பணம்கொடுத்து வாங்கின. அவ்வளவு செல்வமும் ஆணவமும் மதக் குருக்களிடமிருந்தன அக்காலத்தில்!

கி. பி. 1204-ம் ஆண்டு, குலோத்துங்கன் மதுரை வீராபிஷேகமும், விஜயாபிஷேகமும்செய்து கொண்டான். சேரபாண்டியரிடம் திறைகொண்ட பொன்களையும் பூமிகளையும், தில்லை, திருவாரூர், திரிபுவனங்களில் உள்ள கோயில்களுக்கு அளித்து மகிழ்ந்தான். அவன் வறுமையில் சிக்கிய தன் குடிகளுக்கு ஒருவித உதவியும் செய்யவில்லை. செய்யவொட்டாமல் மன்னனின் மதியை மங்கச் செய்தது மதம்.

மரணத்தின் மடியில் மக்கள் சாய்ந்த அவசியமா? அரனடியில் வீழ்ந்து அருள் வேண்டிக் கிட தமிழ் வேந்தனென்றால் வெட்கத்தால் நம் உடல் குதற்குகிறது! பிணியும் பஞ்சமும் குடிகளை வாட்ட, 'பாடி சாபம்" என்று மிரட்டிய மதோன்மத்தர்களின் தாள் பணிந்து, நாட்டின் செல்வத்தை அந்த நயவஞ்சகர்களுக்கு நல்கினான் என்று அறியும்பொழுது நம் இரத்தம் கொதிக்கிறது!

நம் இனத்தை இழிவு செய்யும் இராமாயணத்தை இந்த வேந்தன்தான், கம்பனைக்கொண்டு எழுதச்செய்தான். ஆதரவற்று மக்கள் இறந்த நேரத்தில், தன் மானமிழந்த ஒரு தமிழ் மகனால் எழுதப்பட்டது இந்த ஆரிய ஏடு!

"இக்கொடியகாலங்களில் அரசாங்கத்தார் குடிகளுக்குச்செய்த உதவி இன்னதென்று தெரியவில்லை!" என்று இம்மன்னனின் ஆட்சியைக் குறித்து ஒரு சரித்திர ஆசிரியர் எழுதுகிறார். இதைப் படிக்கும்பொழுது நம் வயிறு எவ்வளவு பற்றி யெரிகிறது? மக்கள் "உணவு உணவு" என்று கதறிக் கதியற்று மடிந்த நேரத்தில், கோயில் மணியோசையில் மன்னன் மகிழ்ந்திருந்தான் என்றால், அந்த மன்னனின் பூண்டு தொலைந்ததே மேல்என்று நமக்குத் தோன்றுகிறது அல்லவா?

நம் மன்னர்கள், நாட்டிலிருந்த மார்க்கப் போதகர்கள் போதாமல் வெளி நாடுகளிலிருந்து மதக் குருக்களை வரவழைத்தார்கள். மூன்றாம் குலோத்துங்கனது முன்னோர்களிலே, முதல்இராஜராஜசோழன், அவன்மகன் இராசேந்திரன் முதலியோர் வடநாட்டிலிருந்து சைவமதப் போதகர்களை வரவழைத்து, அவர்களை இராஜ குருக்களாகக் கொண்டு, உபதேசம்' பெற்றார்கள். அக்குருக்களுக்குப் பொன்னையும், பொருளையும், மண்ணையும் தானமாகத் தந்தார்கள். இப்படியாக வேற்று இனத்தார் நம் நாட்டில் குடியேறவும், அதிகாரம் பெறவும் மதம் அவர்களுக்கு உதவி செய்தது.

பகுத்தறிவைச் சிறிது பரப்ப ஆரம்பித்தவர்களை, மதத்தின் பெயரைக் கூறி, பார்ப்பனீயம் கண்டித்தது.

மில்ல சாந்த சொரூபி ஞானசம்பந்தர், எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றச் செய்தார். சமணர்கள் சிந்திய இரத்தத்தைக் கண்டு சிரித்தனர் சிவபக்தர்கள்!

புத்தமதக் கலாசாலையான நளாந்தாபல்கலைக் கழகத்திற்குத் தீ வைத்து அழித்தது, ஆரியம்!

இவ்வளவுதானா மதம் செய்த கொடுமைகளென்கிறீர்களா? எவ்வளவோ செய்திருக்கிறது! அவற்றிலே ஒரு சிலதான் இவை! இவை போன்ற நிகழ்ச்சிகள் வரலாற்று ஏடுகளிலிருந்து ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் இன்னும் எடுத்துக் காட்டமுடியும். கணக்கிலடங்கா அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள், மதத்தின் பெயரினால்!

சுருங்கக் கூறுமிடத்து மதத்தினால், மதக்குருக்கள் கொழுத்தார்கள், ஏழை எளியவர்கள் பஞ்சத்தாலும் பிணியினாலும் தாக்குண்டு, வறுமையில் வாடி உயிர் விட்டனர். உரிமைக்காக மக்கள் புரட்சிசெய்த நேரங்களில் மக்களை, மதம் மன்னர்களிடம் காட்டிக் கொடுத்தது. மதம் கொண்ட இரத்த வெறியினால் பலகோடி உயிர்கள் பலியாகியிருக்கின்றன. அறிவு வளர்ச்சிக்கு அணையிட்டது; அறிஞர்களைக் கொன்று தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியது மதம்.

நம் மன்னர்கள், மதச்சுழலில்சிக்கி, மக்களின் நன்மையையும் தங்கள் கடமையையும் மறந்து, வரிப்பணத்தில் வானம் முட்டக்கோபுரங்களை எழுப்பி. காலத்தையும் நாட்டின் செல்வத்தையும் பாழ்படுத்திப் பற்பல கேடுகளைச் செய்தார்கள். பெண்கள் விபசாரிகளானார்கள். அவர்களது இளமை பாழாகியது. ஒரு மதத்தினர் வேற்று மதத்தினரைக் கொன்று குவித்தார்கள் பல பல அறிவு வளர்ச்சிக் கழகங்கள் தீக்கிரையாயின! இன்னும் பற்பல கேடுகளை மதம் மனித சமூகத்திற்குச் செய்துளளது!

இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கற்ற கண்ட அறிஞர் யாரும் மதம் அவசியம்தான் என்று கூறத் துணியார்.

மதம் கூறும் தத்துவார்த்தங்களைக் கூறி, அதற்கு எதிர்ப்பு ஆதாரங்களைச் சொல்லி, மதம் பொய் என்று கூறும் வேலையைச் செய்ய நான் ஆசைப்படவில்லை. ஆபாசக் கருத்துக்களை விளக்கத் தேவையில்லாததால் ஆதாரத்தோடு, சரித்திரச்சான்றுடன்: பற்பல நிகழ்ச்சிகளைக் கூறினால் பயன்படுமென்று கருதி, மதத்தினால் நேர்ந்த கேடுகளைப் பலநாட்டு வரலாறுகளிலுமிருந்து எடுத்துக் காட்டினேன்.

இளங் குமரியை மணக்க, அழகும் இளமையும் ததும்பும் வாலிபனிருக்க, அவளைக்கிழவனுக்கு மனைவியாக்குவது முறையா? சரியா? மக்களுக்கு, நல்வாழ்வு, உரிமை ஆகியவற்றைத் தரப் பகுத்தறிவு நெறியிருக்க, அடிமைகளாய், அறிவற்றவர்களாய், வறுமையின் சொரூபங்களாய், செய்யும் மதத்தை அவர்கள் மேல் திணித்தல் நீதியா? நேர்மையா?

மதத்தில் சீர்திருத்தம் வேண்டுமென்று சிந்துபாடுவர் சிலர். சேற்றின் துர்நாற்றத்தைச் சந்தனமும், வாசனைப் பொருள்களும் தூவி, போக்கிவிடலாமென்று கூறும் வகையற்றவன் சொல்லுக்குச்சமம் அது! சேற்றை அப்புறப் படுத்துவது நல்லதேயொழியச் சேற்றின் துற்நாற்றத்தைத் தடுப்பது அறிவுக்குப் பொருத்தமற்றது. ஆபத்தானதும் கூட! ஆகவே அது வெறும் வரட்டுக் கூச்சல், பயனளிக்காது.

குருட்டுபக்தியையும், குரோதத்தையும், பயத்தையும் நாட்டில் பரப்பிய மதம் அவசியமா? பல துறைகளிலும் பாட்டாளி மக்களைப் பதைபதைக்கச் செய்த மதம் அவசியமா? அறிவு, ஆராய்ச்சி, பொருள் மானம், இளமை ஆகியவற்றை அழித்த மதம் இன்னும்நமக்கு அவசியமா? இல்லை, இல்லை, அவசியமேயில்லை.

கலகம், குழப்பம், கொலை, சச்சரவு ஆகியவற்றிற்குக் காரணமான மதம் இனியும் நமக்கு அவசியமில்லை! அவசிய

மில்லாததுமதம்என்றுசொல்வதைவிட அழிக்கப்படவேண்டியதுமதமென்று கூறும் துணிபு கொண்ட அறிவியக்கத்தைச் சேர்ந்தவன் நான்.

மதத்தின் விஷ வாடையை இனியும் நாட்டில் வீச விடக் கூடாது. குப்பைக்கு நெருப்பிடு, விஷப் பாம்பின் உயிரைப்போக்கு, பயத்தை விடு, அறியாமையைப் போக்கு, வஞ்சகரின் பூண்டையே அழி! மதத்தை ஒழி! அப்படி மதத்தை ஒழித்து, மனித சமுதாயத்திற்கு விடுதலை அளித்தால்தான், நாட்டில் உரிமையும் அறிவும், இன்பமும் பொங்கும்! சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையும், என் ஆசையும் இதுதான்.

11

நாரா. நாச்சியப்பன்

மதம் மக்கள் வாழ்வில் தேவையான ஒன்று என்று கேட்கப்படும் காலம் வந்துவிட்டது. இது, 'மதம் மறையும்! கூடிய விரைவில் ஒழிக்கப்படும்!' என்பதற்கு ஒரு முன்னறிவிப்பு.

'மதம் தேவையானதா? இல்லையா?' என்று என் முடிவு கூறுவதற்கு முன் மதம் எப்படித் தோன்றியிருக்க வேண்டும் என்று, நான் சிந்தித்துக் கண்ட முடிவைக் கூறிவிடுகிறேன்.

மனிதன் ஒரு சிந்தனை செய்யும் விலங்கு! முதலிலே தன்னைப்பற்றியும் உலகைப்பற்றியும் சிந்தித்துப் பார்த்தான். ஒரு எல்லைக்குமேல் அவனால் சிந்திக்க முடியவில்லை. அந்தச் சிந்திக்கமுடியாத எல்லைக்கப்பால் தன்னையே ஆட்டிப் படைக்கும் ஒரு பெரிய சக்தி இருப்பதாக எண்ணினான். தன்னைவிட மிகப் பெரியது என்று நினைத்தான். ஆனால் அதைப்பற்றி மக்களிடம் பேச வரும்போது, தனக்கு விளங்காத ஒன்றைத் தனக்குப் புரியாத ஒன்றை மக்களிடம் சொல்லவரும் போது, அவனுக்கு விளங்கவைக்கும் தன்மை இல்லாது போயிற்று. ஆனாலும் தன் கருத்தைப்பரப்ப வேண்டுமென்று கருதினான். தன் கருத்தைப் பரப்பக் கற்பனையைத் துணையாக்கிக்கொண்டான். கடவுள் கையை யசைத்ததும் பூமி தோன்றியது. கருதின

வுடனே கடல் வந்தது என்றெல்லாம் கற்பனைசெய்து கடவுள் உண்மையை நிலைநாட்டினான்.

சிந்திக்க முடியாத மனித அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்றைப்பற்றி ஒருவன் கற்பனை செய்து கூறியவற்றை 'இருக்கலாம்' என்று முதலில் எண்ணிய மனிதன், தன்னால் சிந்திக்க இயலாது போன பின்னர், 'அப்படித்தான் இருக்கும்' என்று முடிவு கட்டிவிட்டான்.

பின்னர் கற்பனைக்குமேல் கற்பனையாக வளர்ந்து, சிறு தெய்வக் கற்பனையிலும் அவற்றை வணங்குதல் உணவளித்தல், உயிர்ப்பலி கொடுத்தல் முதலிய அநாகரிக முறைகளிலும் வந்து முற்றியது மத வளர்ச்சி!

இதற்கிடையிலே மக்களிடமுள்ள நாட்டுப்பற்று, மொழிப்பற்றுப் போல மதப்பற்றும் வளர்ந்து வந்தது. இரண்டு இடங்களில் வெவ்வேறு கற்பனைகளில் வளர்ந்த இரண்டு மதக்காரர்கள் ஒன்றுகூடும போது பகையுணர்வும், அதன் மூலமாக மதவெறியும் வளர்ந்து வரலாயின.

இன்று மதம் தேவை என்று கூறுகிறவர்களெல்லாம், 'உண்மையான மதம் இன்றிலங்குவது அல்ல; உண்மையான மதம் மக்களை நன்னெறியிலே நோய வைப்பது, மனிதனைத் தூயோனாக்குவது' என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் இது வரையிலே, அவர்கள் கூறுகிறபடி ஒரு மதமும் தோன்றியதில்லை. முதலிலே மக்கள் கற்பனையின் முடிவு அநாகரிகமாக ஆகிய அந்த நாளிலேதான் மதம் தோன்றியிருக்கிறது. மதத்தின் வளர்ச்சியிலே தான் மதவெறி ஓங்கியிருக்கிறது.

பழைய, தங்களுடைய மதத்தைத்திருத்த வந்த மக மதுநபியைத்தான் மக்கள் அடித்து விரட்டியிருக்கிறார்கள்; நம்மதத்தை எதிர்க்கிறான் என்றெண்ணிக் கல்லாலடித்திருக்கிறார்கள். மூட மதத்தைக் காய்ந்தான் மதத்தின் பகைவன் என்றெண்ணியதால்தான் இயேசுவைச் சிலுவையில் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். நம் தத்துவங்களை மறுக்கின்றார்கள் என்று கருதிய

தால் புத்தனையும் புத்த மாணவர்களையும் எதிர்த்துப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி மதத்தைச் சீர்திருத்த வந்த செம்மல்களை எல்லாம் சித்திரவதை செய்தது முழு மூடத்தனமான கற்பனைகளைத் தன்னகத்தே கொண்டு வளர்ந்தது மதந்தான். அப்படியானால் இன்று இயேசுமதமென்றும் புத்தமதமென்றும் அந்தப் பெரியார்களின் பெயரால் மதங்கள் இலங்குகின்றனவே, இவை பயன் தருவன அன்றோ என்று எண்ணலாம். ஆனால் அப்படி எண்ணும்படி இன்றைய மதம் செய்யவில்லை. நம் எதிரில் விளங்குகின்ற இன்றைய மதம் இயேசு மதமல்ல, இயேசு வழிச் செல்லும் கூட்டமல்ல, இயேசுவைக்கொன்று, குழிவெட்டிப் புதைத்துச் சமாதி கட்டிய அதே பழய மதம்தான். மகமதுவுக்குச் சமாதுகட்டி அதன்மீதிருந்துகொண்டு ஆடுகின்ற அதே பழைய மதந்தான். புத்தரைப் புதைகுழியில் தள்ளிப் புன்னகை புரிகின்ற பழய மதமேதான் இன்றும் இலங்குகின்றது.

ஏதேதோ, சீர்திருத்தங்கள் சொன்னான்; வீணாகக் கொன்று விட்டோம் என்று வருந்திய சிந்தனையாளர்களால் இயேசு, புத்தர், மகமது முதலியோர் பெயரால் அழைக்கப்பட்டாலும், அவர்கள் சொல்லிய சீர்திருத்தங்களை அடியோடு எதிர்க்கின்ற மதம்தான் இன்றைய மதம்! இதே மதம்தான் இயேசுவுக்கு முன்னிருந்த பழைய மதமும். "புத்தர் காட்டியவழி மக்கள் போவதற்கு ஏற்றதல்ல. புதுவழி ஒன்று கண்டுபிடி" என்றும் புத்தர் கொள்கைக்கு 'ஈனயானா' குறுகிய கொள்கை என்றும், அதை மறுத்தெழுந்த கொள்கைக்கு 'மகாயானா' விரிந்த கொள்கை என்றும் கூறுகின்ற இன்றைய மதம் அந்தப் பழைய மதமே தான்.

சிந்தித்துத்தெளிந்து சீர்திருத்தக்கருத்துகளை வழங்கிய இப் பெரியோர்களைக் கொன்று, பின் இவர்கள் பெயரிலேயே தன்னையழைத்துக்கொண்டு தான் வென்ற நாடு தன் நாடு என்று கூறும் அரசனைப்போல, தான் கொன்ற பகைவன் பெயர் தன் பெயர் என்று கூறித் தன்னாட்சி செலுத்திவரும் இந்த மதம் எதற்

குந் தன்னை எதிர்த்தாரை ஒழித்தும் அஞ்சாமல் தன்னை வந்தடைந்தாரின் அறிவை, மாய்த்தும் யாதொரு பயனுமின்றித் தீமை மிக்கதாகக் கொடும் நஞ்சாக மக்களிடையே வளர்ந்து வந்திருக்கிறது.

பலப்பல பெயரிலே, பலப்பல கற்பனைகளிலே உருவெடுத்து, மக்கள் உள்ளத்தை மயக்கித் தன்பால் 'மீளாத அடிமைக' ளாக்கி விட்டிருக்கிறது மதம்.

மதம் என்றைக்கும் மனித வாழ்க்கைக்கு, மனித முற்போக்குக்கு, மனித அறிவு வளர்ச்சிக்கு ஒரு தடைக் கல்லாகவே இருந்து வந்திருக்கிறது. இயேசு பிறப்பதற்கு முன்னும், இயேசு வாழ்ந்த போதும்கூட இயேசுவின் கொள்கையை மதம் ஏற்கவில்லை. இதை எவரும் மறுக்க முடியாது. இயேசுவுக்கு முன்னிருந்த மதமும், அந்தக் காலமுமே நாகரிகப் பண்பு ஏற்படாத காலம். இயேசுவை மதம் பாடுபடுத்திக் கொன்றிருக்கிறது. இயேசுவிற்குப் பின்னுள்ள மதம் இயேசு சொற்படி நடக்கவில்லை. இதை நாம் நேரே காண்கிறோம். எனவே இயேசுவால் மதத்தில் ஒரு மாற்றமும் இல்லை; இயேசுவின் பெயரை ஏற்றுக்கொண்டது ஒன்று தவிர. எனவேதான் மனிதனை மதம் விலங்காக்குகிறது, அடிமைப்படுத்துகிறது என்கிறோம். அடிமைப்படாதவனை, அடிமைப்பட மறுக்கும் சிந்தனைக்காரனை, அவன் கருத்துக்களை அழிக்க முயல்கிறதைப் பார்க்கிறோம். தான் சிந்திக்கிற ஒரு நல்ல நெறிவழிப் போகவிடாமல், மடமையைக் கைப்பிடித்த மக்கள் கூட்டத்தின் மூடக் கொள்கைகளின் வழியே சிந்தனைக்காரனையும் இழுத்துச் சென்று சிதைக்கிறது.

மதம் முதன் முதலில் நம்பிக்கை வேண்டும் என்று சொல்லுகிறது. பிறகுதான் தன் கொள்கையைச் சொல்லுகிறது. இதைவிட அடிமைத்தனம் வேறு என்ன இருக்கிறது? எதையும் ஆராய்ந்து பார்த்து அதன் பிறகு நம்புகின்ற அறிவின் வளர்ச்சியைத் தடைசெய்து விடுகின்ற மதம் மூடத்தனத்தின் முழு உருவம் என்றால் அது சற்றும் மிகையல்ல. இன்னும் மதம் என்னென்ன சொல்லுகிறது? உலகப் பற்றைவிடச் சொல்லுகிறது, ஆனால் அது இயலாத காரியமாயிற்றே என்று உணர்ந்தபிறகு அடுத்த உல

கம் ஒன்றைக் கற்பித்து, அங்கு பேரின்பத்தை வைத்து, அதிலே பற்றைத் திருப்பிவிட்டு உலகப... றறுக்குமாறு மக்களுக்குக் கற்பித்துவிட்டது. இது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கச் சொல்லுவ தல்லாமல் வேறு என்னவாயிருக்க முடியும்? இன் னும் கொச்சையாகச் சொன்னல், அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதை என்றுதானே சொல்ல வேண்டும்.

"மதத்திலே தீமையிருக்கலாம். அதைக் களைந்து நன்மையைக்கொள்க! நலமுறுக!' என்று சொல்லுகிறுர் கள் மதத்தைத் தூக்கிநிறுத்த முயற்சிப்பவர்கள். மதம் ஏதாவது நன்மையான செயலை ஆதரிக்கிறதா? புத் தர், இயேசு, மகமது முதலியோர் சொல்லிலே சில நன்னெறி மொழிகள் இருக்கலாம். ஆனல் அவர்கள் மொழியைத்தான் மதம் பின்பற்றவில்லையே! இன் னும் மதவாதிகள் சொல்லுகிருர்கள் 'மதங்கள் பலவா யினும் நாடுவது ஒரு பொருளே' என்று. அப்படியா னல் மதப் பிரசாரமும், மதமாற்றமும், மதச் சண்டை களும் ஏற்படக் காரணமில்லையே! 'எல்லோரும் கடவு ளின் மக்கள்' என்று சொல்லும் மதத்தில் கடவுளுக் கும் மக்களுக்கும் இடையிலே பாதிரியோ, குருக்களோ தேவையில்லையே!

கடைசியாக இந்த மதம் மக்களுக்குச் செய்த நன்மைதான் என்ன என்ருல் பதில் சொல்ல முடி யாத நிலையில், அது கற்பனையில் பிறந்து, கற்பனையில் வாழ்ந்து, கற்பனையை மக்களுக்குக் காட்டிக் கருத்தை இழுத்துக் கற்பனைக் கதைகளிலே மக்களுக்குக் கற்பனை இன்பம் நல்குகிறதே தவிர உண்மை இன்பத்தையும் எதிர்க்கிறதே!

எனவே ஒரு பயனுமற்ற, தீமையே உருவான மதத்தை ஒழித்துக்கட்டவேண்டும். சீர்திருத்த முயல் வது வீண் முயற்சியாகவே முடியும். இதுவரை சீர் திருத்த முயன்றவர்களின் பெயராலேயே அவர்கள் கருத்துக்குச்சமாதிகட்டும் மதம் அழியத்தான் வேண்டும்.

'மதம்' என்ற சொல்கூட இல்லாமல் ஒழியவேண் டும். அப்பொழுதுதான் உலகம் உண்மையான இன் பத்தைக் காணும்.

111669